www.tamilarangam.net


# களத்தில்

திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆடவை 10 (25.07.1995) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வருஞ் செய்தித் தாள் அன்பளிப்பு 40p


சிறீலங்கா அரசின் "முன்நோக்கிப் பாய்தல்" நடவடிக்கையின் போது பாதிக்கப்பட்டோர் விபரங்கள். புகைப் படங்கள் ....

உள்ளே ⇒

# தரை-கடல்-வானில் புலிகள் பெருவெற்றி

## "புலிப்பாய்ச்சல்" மூலம் சிறீலங்காப்படைகள் விரட்டியடிப்பு

**ஆடி ஒன்பதாம் திகதி, "முன்னோக்கிப் பாய்தல்" என்ற குறியீட்டுப் பெயருடன் சிறீலங்கா ஆரம்பித்த ஆக்கிரமிப்புப் படையெடுப்பு, விடுதலைப் புலிகளினால் முற்றாக முறியடிக்கப்பட்டு, சிங்களப்படைகள் முகாம்வரை அடித்து விரட்டப்பட்டுள்ளன.**
**"புலிப்பாய்ச்சல்" என்ற குறியீட்டுப் பெயருடன், தேசியத் தலைவர் பிரபாகரனின் நேரடி வழிகாட்டலில் ஆரம்பித்த பாதுகாப்பு யுத்தத்தின் முன்னால் நிலைகொள்ள முடியாத சிறீலங்காப் படைகள், "பின்னோக்கிப் பாய்ச்சலை" ஆரம்பித்தன.**

தரை-கடல்-வான் வழியாக விடுதலைப் புலிகள் நடாத்திய கடும்தாக்குதலினால் ஆர்ஜென்டீனா தயாரிப்பான இருபத்திரண்டரைக் கோடி ரூபா பெறுமதியுடைய, மணிக்கு 500 கி.மீ வேகத்தில் சென்று 1,500 கிகிராம் குண்டுகளை வீசும் வல்லமை படைத்த 'புக்காரா' குண்டுவீச்சு விமானத்தை விடுதலைப்புலிகளின், விமான எதிர்ப்புப் படை சுட்டு வீழ்த்தியது. இப்போரில் 212 பெல் ரக உலங்கு வானூர்தி ஒன்று பலத்த சேதத்திற்குள்ளாக்கப்பட, இன்னொன்று சுட்டு வீழ்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கடல் வழியாக, 15 போர்க்கப்பல்கள் நங்கூரமிட்டுநின்ற காங்கேசன்துறை துறைமுகத்துள் அதிகாலை 1.15 மணியளவில் புகுந்த கடற்புலிகளும் கரும்புலிகளும், தமது படகுகளிலிருந்து போர்க்கப்பல்களைத் தாக்கினர். மிகக்கடுமையான கடற்சண்டை ஒன்று நான்கு மணிநேரமாக இடம் பெற்றது. இச்சண்டையில் ஈடுபட்ட கடற்கரும்புலிகளும் 'சுலோஜன்' விசேட நீரடி நீச்சல் பிரிவினரும் நடத்திய தாக்குதலில், 1992 இல் சீனாவிலிருந்து சிறீலங்கா கொள்வனவு செய்த 20 கோடி ரூபா பெறுமதியான நவீன ராடர் கருவிகள் பொருத்தப்பட்ட 'எடித்தரா' எனப்படும் கட்டளைக் கப்பல் ஒன்றும், தரையிறக்கும் கப்பல் ஒன்றும் குண்டு வைத்து மூழ்கடிக்கப்பட்டதாகவும் தாயகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி : 12 ஆம் பக்கம்



### ஒரு போராளி 4 நாட்டுப்பற்றாளர் வெடிவிபத்தில் வீரச்சாவு

யாழ். மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட தவறுதலான வெடிவிபத்தில் போராளி ஒருவரும் நான்கு நாட்டுப் பற்றாளர்களும் வீரச்சாவு அடைந்தனர்.
கப்டன் கண்ணாளன் (ஏரம்பு கந்தசாமி, மட்டக்களப்பு)
மற்றும் நாட்டுப் பற்றாளர்களான,
தசரத ராசகுமார் சந்தனம், கனகராயன்குளம், வவுனியா
நடராசா .ராசபாலன், காங்கேசன்துறை
நடராசா கணநாதன், 30-13 குறுக்கு வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்
சோமசுந்தரம் மிதிலைகாந்தன், பூநாறிமடம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்
இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைச் செலுத்துகின்றனர்.

## சிறீலங்காப்படைகள் கோர தாண்டவம்

### எறிகணை வீச்சுக்கு பொதுமக்கள் உடல்சிதறிப் பலி

சிறீலங்கா இராணுவத்தினர் அண்மையில் யாழ்குடா நாட்டில் மேற்கொண்ட கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதலினால் மூன்று பொதுமக்கள் கொல்லப்பட்டனர் பதின்மூன்று பேர் படுகாயமடைந்தனர். சங்கானைப் பகுதியில் மேற் கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலினால் பவளம் (வயது 70) என்பவர் உடல் சிதறிப் பலியானார். மகேஸ்வரி (வயது 55), ரிவனிதா (வயது 32) ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.
யாழ். இந்துக் கல்லூரிக்கு சமீபமாக மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலினால் சி. இரத்தினபதி (வயது 62) சமையலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை அவ்விடத்திலேயே கொல்லப்பட்டார். சிவஞானபதி (வயது 62, கொக்குவில்), ப. வித்யா (வயது 4, கொக்குவில்) ஆகியோர் காய

தொடர்ச்சி : 2 ஆம் பக்கம்

## இராணுவத் தாக்குதலாலேயே தேவாலய அனர்த்தம் நிகழ்ந்தது

—சர்வதேச செஞ்சிலுவைப் பிரதிநிதி

"நவாலி தேவாலயத்திற்குக் குண்டு வீசப்பட்ட மறுநாளில் எமது பிரதிநிதிகள் குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று பார்வையிட்டனர். அப்பகுதியில் பலரது சடலங்கள் காணப்பட்டன. இராணுவத்தினர் நடத்திய குண்டுத் தாக்குதல்களினாலேயே இந்த அனர்த்தம் நடைபெற்றதாக அங்கிருந்த மக்கள் தெரிவித்திருக்கின்றனர்." இவ்வாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கொழும்பு வதிவிடப் பிரதிநிதி மால்கோ அல்தா குறிப்பிட்டார்.
அத்துடன் இது தொடர்பாக சிறீலங்கா அரசுடன் தொடர்பு கொள்ளப்பட்டது எனவும், பொது

தொடர்ச்சி : 12 ஆம் பக்கம்

## சனாதிபதி பதவியை நீடிக்கப் போட்ட தந்திரமா?

ஆடி 15ம் நாளுடன் 'நிறைவேற்று அதிகாரமுள்ள' சனாதிபதி ஆட்சிமுறையை சிறீலங்காவில் ஒழிக்கப் போவதாக பேசிவந்த சனாதிபதி சந்திரிகா, இந்தக் காலக்கெடு நெருங்கி வருகையில் யாழ் குடாநாட்டின் மீது படையெடுப்பை அனுமதித்தமை, நாட்டில் குழப்பநிலை எனக்கூறி தனது பதவிக்காலத்தை நீடிக்கவே என்ற கருத்து வலுப்பெற்று வருகிறது.
இதற்கு பக்கத்துணையாக, முசலிம் காங்கிரசுத் தலைவர் அஸ்ரப், போர்க்காலத்தில் நிறைவேற்று அதிகாரமுள்ள சனாதிபதி ஆட்சிமுறை நீடிப்பதே சிறந்தது என மேடைகளில் முழக்கமிட்டு

தொடர்ச்சி : 12 ஆம் பக்கம்

## தமிழ் மக்களுக்கு எதிரான போர்

- நவசமசமாசக் கட்சி அறிக்கை

"இன்றைய போர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரானதே தவிர தமிழ் மக்களுக்கு எதிரான-தல்ல என நீங்கள் அடிக்கடி கூறிய போதிலும் அதற்கு முற்றிலும் மாறாக 'முன்னோக்கிப் பாய்ச்சல்' இராணுவ நடவடிக்கை தமிழ் மக்களுக்கு எதிரானதாகவே அமைந்திருந்தது."
இவ்வாறு நவசமசமாசக் கட்சி சிறீலங்கா சனாதிபதிக்கு அனுப்பிய

தொடர்ச்சி : 12 ஆம் பக்கம்

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புலிகள் பெயரில் கடிதம் அனுப்பியது விசமத்தனமானதொரு செயல்

"விடுதலைப் புலிகளின் பெயரில் முசுலிம்களுக்கு எதிராகக் கடிதம் அனுப்பியது விசமத்தனமான ஒரு செயல். இவை தடுத்து நிறுத்தப்பட வேண்டும்" எனப் பிரதியமைச்சர் கிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், காத்தான்குடி முசுலிம் மக்களை வெளியேறுமாறு வந்த மிரட்டல் கடிதங்களைத் தாம் அனுப்பவில்லையென விடுதலைப் புலிகள் மறுப்புத் தெரிவித்துள்ளமையானது, முசுலிம் மக்களிடையே நிம்மதிப் பெருமூச்சை விட வழி செய்துள்ளது.

காத்தான்குடி மிரட்டலுக்கு மறுப்புத் தெரிவித்து விடுதலைப் புலிகள் விடுத்த செய்தித்தாள் அறிக்கை எம்மிடையே நிம்மதியை ஏற்படுத்தியுள்ளது. விசமத்தனமான இந்த நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த வேண்டும்" என்றார்.

# சந்திரிகாவிற்கு கிரகம் கூடாதாம் இந்தியாவிலிருந்து மாந்திரிகர் வருகை

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் கிரகநிலை மூலம் தெரிவிக்கப்பட்டுள்ள ஆபத்துக்களை நீக்க, இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட மலையாள மாந்திரீகர் மூலமாக யாகசாந்தி நடத்தப்பட்டதாக அலரி மாளிகை வட்டாரங்களை ஆதாரம் காட்டி 'யுக்திய' செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளினால் சனாதிபதிக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்களுக்கான சாந்தி செய்ய வந்த இந்த மலையாள மாந்திரீகர்களுக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டதாக அச்செய்தித்தாள் மேலும் தெரிவித்துள்ளது.

பிரேமதாசா சனாதிபதியாக இருந்தபோதும் ஆபத்துக்கள் நெருங்காதவாறு இதுபோன்ற மலையாள மாந்திரீகர் மூலமாக சாந்தி நடத்தப்பட்டதென்றும்-

சகல நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆசனங்களில் மந்திர எண்ணெய் தெளிக்கப்பட்டதென்றும் இதற்குப் பரிகாரமாக அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த சிறீமாவோ பண்டாரநாயக்கா பிரித் நீர் தெளித்தார் எனவும் 'யுக்திய' தெரிவித்துள்ளது.

தலைவர் பிரபாகரன் விவகாரம்

# இந்தியாவின் கோரிக்கை எவ்விதத்திலும் நியாயமற்றது

— ஏ.சி.எஸ். கமீத்

விடுதலைப் புலிகளின் தலைவர் உட்பட மூவரை நாடுகடத்துமபடி இந்தியா விடுத்துள்ள கோரிக்கை எந்தவிதத்திலும் நியாயமற்றதுடன் அது இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சமாதானப் பேச்சுவார்த்தைகளைக்கூடப் பாதிக்குமெனச் சிறீலங்காவின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஏ.சி.எஸ். கமீத் பாராளுமன்றத்திற் தெரிவித்தார்.

அண்மையிற் பாராளுமன்றத்தில் உரையாற்றிய சிறீலங்காவின் வெளியுறவு அமைச்சர் கதிர்காமர் இந்தியா விடுதலைப் புலிகளின் தலைவர் உட்பட மூவரை நாடு கடத்துமாறு விடுத்த வேண்டுகோள் குறித்துத் தெரிவித்த கருத்தைக் கண்டித்தே கமீத் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து ஏ.சி.எஸ். கமீத் உரையாற்றும்போது அவருக்கும் கதிர்காமருக்குமிடையே பலத்த வாக்குவாதம் ஏற்பட்டது.

இனப்பிரச்சினைத் தீர்விற்கான சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு இந்தியா ஒரு தடைக்கல்லாக இருப்பதாகச் சுட்டிக்காட்டிய கமீத், இந்தியா விடுதலைப் புலிகளின் தலைவர் உட்பட மூவரை நாடுகடத்துமாறு விடுத்துள்ள இக்கோரிக்கையானது இனப்பிரச்சினைத் தீர்விற்காக இருக்கும் பேச்சுவார்த்தைக்கான சந்தர்ப்பங்களைக்கூட இழக்கச்செய்யும்.

ராஜீவ்காந்தி கொல்லப்பட்டு நான்கு ஆண்டுகள் வரை மௌனமாக இருந்த இந்தியா ஏன் சித்திரை மாதம் சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்ததும் இவ்வேண்டுகோளை உத்தியோகபூர்வமாக விடுக்கவேண்டும் எனவும் கேள்வி எழுப்பினார்.

## சங்குப்பிட்டியில் கடும் மோதல்

### மூன்று போராளிகள் வீரச்சாவு

பூநகரி-சங்குப்பிட்டிச் சிறீலங்கா இராணுவ முகாமிலிருந்து முன்னேவந்து பதுங்கி இருந்த இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே அண்மையிற் கடும் மோதல் இடம்பெற்றது.

மேற்படி முகாமில் இருந்து எழுநூறு மீற்றர் வரை முன்னே இருந்த இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே அண்மையில் இரவு நேரத்தில் இந்நேரடி மோதல் இடம்பெற்றது. சுமார் பதினைந்து நிமிடங்கள் வரை நடைபெற்ற இம்மோதலையடுத்துப் படையினர் பலத்த இழப்புக்களுடன் முகாமிற்குப் பின்வாங்கி ஓடிவிட்டனர். இந்நேரடி மோதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் மூன்று போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

வீரவேங்கை வீரையன் (கோபால பிள்ளை நிரஞ்சன்- கொக்குவில் மேற்கு, யாழ்ப்பாணம்), வீரவேங்கை பூவேந்தன் (சீனியர் உதயகுமார்-கோப்பாய் தெற்கு, யாழ்ப்பாணம்), வீரவேங்கை இளம்பரிதி (நல்லையா சந்திரமோகன்- முள்ளியவளை, முல்லைத்தீவு) ஆகிய மூன்று போராளிகளுக்கும் விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

# இஸ்ரேலுடன் உறவு வேண்டாம் அரசுக்கு பி. எல். ஓ. எச்சரிக்கை

இலங்கைக்குள் இஸ்ரேலர்களைக் கொண்டு வரும் சிறிலங்கா அரசின் எந்த ஒரு முயற்சியும் சிறிலங்காவுக்கும் அரபு நாடுகளுக்கும் இடையிலான உறவை மோசமாகப் பாதிக்கும் என்று சிறிலங்காவுக்கான பாலஸ்தீன விடுதலை இயக்க பி. எல்ஓ) பிரதிநிதி அதெல்லாகுப்பியா எச்சரித்துள்ளார். இத்தகைய முயற்சி மேற்கொள்ளப்பட்டால் தாமும் மற்றும் அரபு நாடுகளின் தூதுவர்களும் வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமரைச் சந்தித்து தமது ஆட்சேபனையைத் தெரிவிக்கப்போவதாகவும் அவர் தெரிவித்தார்

பாலஸ்தீன விடுதலை இயக்கப் பிரதிநிதயான அதெல்லாகுப்பியா நாடாளுமன்றக் குழுக்களனின் பிரிதித்தலைவரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் பொதுச் செய்லாளருமான ஆர். ஹக்கீமை நாடாளுமன்ற அலுவலகத்தில் சந்தித்தபோது மேற்கண்ட கருத்தைத் தெரிவித்தார்

இஸ்ரேலுடன் முழு அளவிலான ராஜதந்திர உறவை ஏற்படுத்துவது குறித்து சிறிலங்கா அரசு ஆராயும் என்று வெளிவிகார அமைச்சர் லஷ்மன் கதிரிகாமார் சமீபத்தில் ரிவித்திருந்தது.

# புலிகளின்கண்ணிவெடிக்கு

## உயர் அதிகாரி பலி மேலும் 12 பேர் படுகாயம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் விடுதலைப் புலிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதல் ஒன்றில் பொலிஸ் அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டதாகவும், மேலும் பன்னிரண்டு பேர் காயமடைந்ததாகவும் வெரித்தாஸ் வானொலி தெரிவித்துள்ளது.

அதில் மேலும் கூறப்படுகையில் தன்னைத்தானே சுட்டுக் காயப்படுத்திய பொலிசார் ஒருவரை வாகனத்தில் மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோதே இக்கண்ணி வெடித்தாக்குதல் நடத்தப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறீலங்காப்படைகள்.....

மடைந்துள்ளனர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் வதிவிடத்திற்கு சமீபமாக வீழ்ந்து வெடித்த எறிகணையினால் செபஸ்ரியன் பிள்ளை சசிலாதேவி (வயது 35) என்பவர் கொல்லப்பட்டார்.

மேலும் பல்வேறு இடங்களிலும் மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதல்களினால் எஸ். சிவானந்தன் (வயது 17, மானிப்பாய்), புஸ்பராணி (வயது 40, வட்டுக்கோட்டை) ஆகியோர் படுகாயமடைந்தனர். இவர்கள் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# வட்டுக்கோட்டையில் ஐந்து பொதுமக்கள் பலி

புக்காராவிற்கு பயந்து வீதி மதகிற்குள் புகுந்தவர்கள் மதகு குண்டுத்தாக்குதலில் இடிந்து வீழ்ந்ததினால் லுவர் பலியாகியு ள்ளதாக ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. புக்காரா குண்டு வீச்சு விமானம் வருவதைக்கண்டு பாதுகாப்பு தேடி ஓடியவர்கள் வட்டுக்கோட்டை தொழில் நுட்பக் கல்லூரிக்கு அருகாமையிலுள்ள வீதி மதகிற் குள் ஒளிந்து கொண்டபோதே இச்சம்பவம் நடைபெற்றதாக தெரியவருகிறது.

அப்பகுதிக்கு மேலால் வந்த புக்காரா விமானம் சரமாரியாக குண்டுகளை போட்டுச் சென்றது. போடப்பட்ட குண்டுகளில் ஒன்று மதகின் மேல் வீழ்ந்து வெடித்ததினால் மதகு இடிந்து கீழே வீழ்ந்தது. இதன்போது அம் மதகிற்குள் பாதுகாப்பிற்காக இருந்தவர்கள் மேல் மதகு இடிந்து வீழ்ந்தது. இதில் ஐவர் நசியுண்டு அவ்விடத்திலேயே இறந்துள்ளனர் என அங்கிருந்து வந்தோர் தெரிவிக்கின்றனர்.

## நேற்றைய தாக்குதலில் 4 பொதுமக்கள் பலி மேலும் பதின்மூன்று பேர் படுகாயம்

குடாநாட்டின் பல்வேறு இடங்களில் கடந்த 11.07.95 அன்று சிறீலங்காப் படையினரின் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதலினாலும் எறிகணை வீச்சுத் தாக்குதலினாலும் 4 பேர் உடல்சிதறிப் பலியாகியுள்ளனர். 13 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

தொல்புரம் பகுதியில் இடம்பெற்ற விமானக் குண்டுவீச்சில் ஒருவர் பலியானார். மூவர் படுகாயம் அடைந்தனர். செஞ்சிலுவைச் சங்க யாழ். வதிவிட அலுவலகம் அருகே வீழ்ந்து வெடித்த எறிகணைக்கு ஒரு பெண் பலியானார். சங்கானைப் பகுதியில் இடம்பெற்ற எறிகணை வீச்சிற்கு ஒரு பெண் பலியானார். இருவர் காயமடைந்தனர். அத்துடன் யாழ். இந்துக்கல்லூரிக்கு அருகே மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலினால் ஒருவர் கொல்லப்பட்டார். சிறுமி உட்பட இருவர் காயமடைந்தனர். இதேவேளை பல்வேறு பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலின்போது இருவர் படுகாயமடைந்தனர்.

## தொல்புரத்தில் நேற்று புக்காரா குண்டு வீச்சு இளம் பெண் பலி, நால்வர் காயம்

யாழ்ப்பாணம், ஆடிமாதம் 12ஆம் நாள் காலையில் 7மணியளவில் தொல்புரம் வழக்கம்பரைப் பகுதியில் புக்காரா விமானம் நடாத்திய குண்டு வீச்சில் ஒருவர் உயிரிழந்தார். நான்கு பேர் காயமடைந்தனர்.

திருமதி. புஷ்பராஜா சற்குணதேவி (வயது 35) என்ற இளம் பெண்ணே குண்டு வீச்சில் உயிரிழந்தார்.

அவரின் கணவர் என். புஷ்பராஜா (வயது45) தம்பிஐயா அருந்தரஸன்(வயது20) ஏ. தேவரஞ்சனி (வயது17) வி. கேசவன் (வயது32) ஆகிய நால்வரும் இச்சம்பவத்தில் காயமுற்றனர். இவர்களில் தம்பிஐயா அருந்தாஸன் வலது காலை தொடையுடன் இழந்தார்.

# 220 பொது மக்கள் இதுவரை உயிரிழப்பு

சிறீலங்காவின் இராணுவ நடவடிக்கைகளின் போது உயிரிழந்த பொது மக்களின் எண்ணிக்கை பதிவுகளின்படி இருநூற்றியிருபதைத் தாண்டியுள்ளது என புலிகளின் குரல் அறிவித்தது.

பல இடங்களில் கட்டட இடிபாடுகளுக்குள் இன்னும் பெரும் எண்ணிக்கையான சடலங்கள் மீட்கப்படாமல் கிடப்பதாகவும் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பகுதிகளிலும் பெதுமக்களின் பல சடலங்கள் கிடப்பதாகவும் மேலும் அறிவிக்கப்பட்டது.

## படை நடவடிக்கையில் ரசிய விமானங்கள்!

குடாநாட்டில் தற்போது இடம்பெற்றுவரும் இராணுவ நடவடிக்கையில் ரஷ்யாவில் இருந்து கடந்த ஞாயிறன்று தருவிக்கப்பட்ட பாரிய அனட்டோல் 32 ரக விமானங்களும் பயன்படுத்தப்படுவதாகத் தெரியவருகிறது. படையினரை ஏற்றி இறக்கும் இந்த ராட்சத விமானங்களில் ஏவுகணை எதிர்ப்புக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## விழித்தது சர்வதேசம்

"முன்னோக்கிப் பாய்தல்" எனும் குறியீட்டுப் பெயருடன் தமிழீழ மக்கள் மீது சிறீலங்காவின் சந்திரிகா அரச நடாத்திய மக்கள் மீதான போர், சர்வதேச உலகில் சந்திரிகாவின் சமாதான முகமூடியைக் கிழித்தெறிந்துள்ளது. அறுபத்துமூன்றுக்கு மேற்பட்ட பச்சைப் பாலகர்கள்முதல் நூற்றுக்கணக்கான பெண்களும், வயோதிபர்களும், ஆண்களும் குடும்பம் குடும்பமாக, கூட்டம் கூட்டமாக சிறீலங்காவால் படுகொலை செய்யப்பட்டுள்ள அநாரீகச் செயல்கண்டு சர்வதேச உலகம் விழித்தெழுந்துள்ளது. ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் அடைக்கலம் தேடும்படி சாதாரண மக்களுக்கு அறிவித்துவிட்டு அதே பொது இடங்களுக்குக் குண்டுவீசி தமிழினப் படுகொலையை வெட்ட வெளிச்சமாகச் செய்யும் சந்திரிகா அரசின் சர்வதேச போர்க்குற்றச் செயல்களை இனியும் சர்வதேச உலகம் நீண்டகாலத்திற்கு மன்னிக்கத் தயாரில்லை என்பதற்கு, சந்திரிகாவின் சனாதிபதி செயலகத்தில் குவிந்த வண்ணமுள்ள கண்டனக் குறிப்புக்கள் சான்றாக உள்ளன.

இவற்றுக்குச் சிகரம் வைத்தாற் போன்று தமிழீழப் பகுதிகளில் நீண்டகாலமாகப் பணியாற்றிவரும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனமான 'கடல் கடந்த நாடுகளின் அபிவிருத்திக்கான கத்தோலிக்க நிதியத்தின் (The Catholic Fund for Overseas Development) சர்வதேச இயக்குனர் யூலியன் பிலோசௌஸ்கி, (Julian Filochouski) பிரித்தானிய அரசின் வெளிவிவகாரச் செயலர் மல்கம் ரிவ்கிண்ட் (Malcolm Rifkind) ரிடம் சிறீலங்காவுக்கான பிரித்தானிய ஆயுத ஏற்றுமதியை உடன்நிறுத்துமாறு எழுத்துமூலம் கேட்டுள்ளார்.


இக்கடிதத்தில் அவரது சர்வதேச அரச சார்பற்ற நிறுவனம், "சிறீலங்கா அரசு சர்வதேச உலகால் ஏற்றுக் கொள்ளப்பட்ட போர் ஒன்றை நடாத்துவதற்கான நெறிமுறைகளை மீறி நடக்கிறது" என வெளியரங்கமாக குற்றம் சாட்டியுள்ளமை மற்றொரு முக்கிய விடயம்.

அதேவேளை, விடுதலைப் புலிகளின் நன்கு திட்டமிட்ட பாதுகாப்புப் போரால், ஆக்கிரமிக்க முற்பட்ட அனைத்துப் பகுதிகளில் இருந்தும் விரட்டப்பட்ட சிறீலங்கா இராணுவமானது, 'பின்னோக்கிப் பாய்ந்து' ஓடி முகாம்களுக்குள் மீண்டும் முடங்கிக் கொண்டமை, விடுதலைப் புலிகளால் தமிழீழத் தேசத்திற்கு தேசிய பாதுகாப்பு வழங்கும் இராணுவ வலிமை என்றும் உள்ளது என்பதை உலகுக்கு நிரூபித்து நிற்கிறது.

இதனால் என்றுமே வெற்றிபெறமுடியாத இராணுவத் தீர்வினால் தமிழீழ மக்களை இனப்படுகொலை செய்வதை நிறுத்தி, அரசியல் தீர்வுமூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணும்படி சர்வதேச சமூகம் சந்திரிகா அரசை நெருக்குகின்றது.

இதனைச் சமாளிப்பதற்கான சதிகாரத் திட்டமாக, தானே ஒரு அரசியல் தீர்வை முன்வைக்கப் போவதாகச் சந்திரிகா அரசு கூறுகிறது. பழைய மங்கள முனசிங்காவின் பாராளுமன்ற தெரிவுக்குழுவின் சிபார்சுகளே புதிய பெயரில் உலகை ஏமாற்ற உலா வரப்போகின்றது.

ஆனால் உலகு ஏமாறும் நிலையில் இல்லை. சந்திரிகா விரும்பினால் என்ன, விரும்பாவிட்டால் என்ன தமிழீழ அரசு உலகுக்குத் தெளிவாகத் தெரிகிறது. அங்கீகாரம் வருங்காலம் அதிகதூரத்தில் இல்லை. உலகு விழித்துவிட்டது.




## விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டினுள் மட்டக்களப்பு மாவட்டத்தின் வடபிரதேசம்

மட்டக்களப்பின் வடபிரதேசத்தில் அண்மைக் காலமாக விடுதலைப் புலிகள் மெற்கொண்ட தொடர்ச் சியான தாக்குதல் காரணமாக அப்பகுதியில் இருந்து இராணு வம் வெளியேறியது. இதைத் தொடர்ந்து திருமலை மாவட்ட த்தின் தெற்குப் பகுதி முதல் மட்டக்களப்பு மாவட்டத்தின் புனானை வரையிலான பரந்த பிரதேசம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ளது.

மூன்றாம் கட்ட ஈழப்போர் தொடங்கியதைத் தொடர்ந்து வாகரைப் பிரதேசத்திலிருந்த இராணுவ முகாம்களும் அப்பிர தேசத்தில் ரோந்து நடவடிக்கை யில் ஈடுபட்டிருந்த இராணுவ அணிகளும் விடுதலைப் புலிக ளின் தாக்குதலுக்கு அடிக்கடி உள்ளாகியிருந்தமை தெரிந்ததே. அதைத் தொடர்ந்து புலிகளின் தாக்குதலுக்கு அஞ்சிய இராணு வம் இப்பகுதியில் இருந்து தற்பொழுது முற்றாக வெளியே றியுள்ளது.

திருமலை மாவட்டத்தின் தெற்கு எல்லையோர கிராமமான கதிரவெ ளியில் இருந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் மாங்கேணி வரை யிலான இராணுவ முகாம்களே அச்சத்தின் காரணமாக மூடப்ப ட்ட முகாம்கள் ஆகும்.

கதிரவெளி, பச்சேனி, வாகரை, பனிச்சங்கேணி, மாங்கேணி போன்ற கரையோரப் பகுதி முகாம்களும் சில காட்டுப்பகுதி முகாம்களும் மூடப்பட்டதைத் தொடர்ந்து மட்டக்களப்பு வட க்கில் புனானை முதல் வாகரை வரையிலான பகுதி இராணுவம் அற்ற பகுதியாகியுள்ளது. வாகரை இராணுவ முகாமும் மூடப்ப ட்டுள்ளது.

இதுவரை மட்டக்களப்பு மாவ ட்ட பொதுக்கட்டளை அதிகா ரியாக இருந்த எச். எஸ். கப்ராய்ச்சிக்குப் பதிலாக பிரிகே டியர் நளின் அங்கமன நியமன-மாவதற்கு ஒரு சில தினங்க ளுக்கு முன்பே இந்த இராணுவ முகாம்கள் மூடப்பட்டுள்ளதாக 'ஐலண்ட்' செய்தித்தாள் தெரிவிக் கின்றது.

இப்பகுதிகளில் இருந்த இராணுவ த்தினர் விலகிச் செல்லும்போது அவர்களுடன் ஒத்துழைத்த தமிழ்க்குழுக்களும் இப்பகுதிக ளில் இருந்து ஓட்டம் பிடித்து ள்ளதாக உள்ளூர்வாசிகள் குறிப் பிட்டதாகவும் 'ஐலண்ட்' மேலும் தெரிவித்துள்ளது.

## இடம்பெயர்ந்தோரின் தேவைகளை கவனிக்க 3 குழுக்கள் அமைப்பு

தற்போதைய இராணுவ நடவடி க்கையினால் இடம்பெயர்ந்து யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் தஞ்சமடைந்துள்ள மக்களின் தேவைகளைக் கவனிப்பதற்காக மூன்று பகுதிகளில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கோப்பா ய்ப் பகுதி ஒன்றாகவும், யாழ். மாநகரசபை, நல்லூர், யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவு-இன்னொரு பகுதியாகவும், தென்மராட்சி இன்னொரு பகுதியாகவும் வகுக்கப்பட்டு ள்ளன. இந்த மூன்று பிரிவுகளுக்கும் தனித்தனி குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கோப்பாய் பகுதியில் எட்டு இடம் பெயர்ந்தோர் முகாம்கள் உள்ளன. இம்முகாம்களை கோப்பாய் பிரதேச செயலரும், றெட்பானா நிறுவனத்தைச் சேர்ந்தவர்களும் கவனிப்பார்கள்.

யாழ். மாநகரசபை உள்ளிட்ட யாழ். பிரதேச செயலர் பிரிவிலும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவிலும் உள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களை யாழ். மாநகர சபை ஆணையாளரும், யாழ். நல்லூர் பிரதேச செயலர்களும் கவனிப்பா ர்கள். இதற்கென குடாநாட்டினை மூன்று பெரும் பிரிவுகளாக பிரித்து நிவாரணப்பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

## அமெரிக்காவைச் சேர்ந்த கென்னத் முல்டர் என்ற நிவாரணப் பணியாளர் கைது

சிறீலங்காப் பொலிசார், அமெரி க்காவைச் சேர்ந்த கென்னத் முல்டர் என்ற நிவாரணப் பணி யாளர் ஒருவரைக் கைது செய்து ள்ளனர். கொழும்பில், தேசிய கிறிஸ்தவ சபை என்ற அமை ப்பில் பணிபுரிந்து வந்த இவர், யாழ்ப்பாண தென்னிந்திய திரு ச்சபையைச் சேர்ந்த ஆயர் சுப்ரமணியம் ஜெயநேசனுடன் யாழ் செல்லும் வழியில், புலிகளு க்கு வெடிகுண்டுகளைக் காவிச் சென்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். பல்வேறு, கிறிஸ்தவ மதங்களை ஒருங்கிணைக்கும் இச்சபையின் காரியாலயம் கொழும்பில் சோத னையிடப்பட்டதோடு, அங்கிலிக் கன் ஆயர் கென்னத் பெர்னா ன்டோவும் சந்தேகத்தின் பேரில் விசாரிக்கப்பட்டுள்ளார். வெளிநா ட்டவர்கள் எவரும் யாழ். குடாநாட்டிற்குள் செல்வதைத் தடுப்பதற்கான ஒரு நடவடிக்கை யாகவே இக்கைதும் இடம்பெற் றிருப்பதாக அறியப்படுகிறது.

## வலி.மேற்கு சண்டையில் ஒன்பதுபோராளிகள்வீரச்சாவு

யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறில ங்கா இராணுவத்தினருடன் தற் போது இடம்பெற்றுவரும் நேரடி மோதலில் ஒன்பது போராளிகள் வீரச்சாவு அடைந்துள்ளனர்.

சிங்கராசா (பரசராமன் பகீரதன், மட்டக்களப்பு)
ரவீந்தர் (பரஞ்சோதி சிவதாஸ், யாழ்ப்பாணம்)
மதன் (தேவராசா பகீரதன், யாழ்ப்பாணம்)
துஸ்யந்தன் (அன்ரன் யேசரட்ணம் யோன்சன், முல்லைத்தீவு)
திருச்செல்வம் (கந்தையா வாசுதேவன், யாழ்ப்பாணம்)
பேரின்பன் (பழனிவேல் மாணிக்கவாசகர், திருகோண மலை)

வீரச்சாவு அடைந்த ஒன்பது போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக் கத்தைச் செலுத்துகின்றனர்.

www.tamilarangam.net



# தமிழ் அகதிகள் விடயத்தில் முன்னாள் டென்மார்க் அமைச்சருக்கு ஒத்திவைக்கப்பட்ட தண்டனை

இலங்கைத் தமிழரான அகதி ஒருவர் தொடர்பாக, அகதிகளுக்கான சட்டநெறிகளுக்குப் புறம்பாக முன்னாள் நீதியமைச்சர் நடந்து கொண்டார் என டென்மார்க் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

முன்னாள் நீதியமைச்சர் எரிக் மான்சன் புரிந்த இக்குற்றத்திற்காக நான்கு மாத காலத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட தண்டனை ஒன்றையும் நீதிமன்றம் வழங்கியுள்ளது.

1987 ஆம் ஆண்டு தொடக்கம் 1989 ஆம் ஆண்டுவரை இலங்கையில் இருக்கும் தமிழ் அகதிகளின் குடும்பத்தினரை, டென்மார்க்கில் வாழும் அகதிகளூடன் இணைய அனுமதி மறுத்தது தொடர்பாக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்குத் தொடர்பாக இரண்டாண்டுகளுக்கு முன்னர் டென்மார்க் பிரதமர் பதவி துறக்க நேரிட்டது குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்புக் காடுகளில் இராணுவம் பாரிய தேடுதல்

மட்டக்களப்பு காடுகளில் சிறீலங்காப் படையினர் பாரிய தேடுதல் நடவடிக்கை ஒன்றில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பெண்டுகள்சேனை, தரவை, கூழாவடி ஆகிய பகுதிகளில் கடந்த மாதம் 16 ஆம் நாளில் இருந்து இந்தத் தேடுதல் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகிறது. கனரக வாகனங்கள் சகிதம் பெருந்தொகையான இராணுவத்தினர் இக்காடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

அத்துடன் தனியாருக்குச் சொந்தமான உழுவு இயந்திரங்களும் படையினரால் பெறப்பட்டுள்ளன.

இதேவேளை அக்கரைப்பற்று காட்டுப்பகுதியிலும் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். வெளியிடங்களிலிருந்து படையினர் தினமும் காட்டுப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு தேடுதல் நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன.

அத்துடன் வீதிச் சோதனைக் கெடுபிடிகளும் முன்னரை விடப் பெருமளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. முட்கம்பிகளால் வீதிகள் தடுக்கப்பட்டு சோதனையிடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

### இசுரேல் தூதுவராலயம் திறக்கப்படின்

# ஒரு நிமிடத்தில் பதவி விலகுவேன்!

## அமைச்சர் அஸ்ரப் தெரிவிப்பு

இசுரேலுடன் சிறீலங்கா அரச தூதுவராலய மட்டத்தில் தொடர்புகளையும் நல்லுறவையும் வைத்துக் கொண்டால், இவ் அரசின் அமைச்சரவையில் ஒரு நிமிடம்கூட அங்கம் வகிக்கப் போவதில்லை என முசுலிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான எம்எச்எம். அஸ்ரப் தெரிவித்துள்ளார்.

கொழும்புச் செய்தித்தாள் ஒன்றுக்கு அவர் அளித்த செவ்வியொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், நானும் எனது கட்சியும் அரசுடன் கொண்டுள்ள உறவுகளைக்கூட முறித்துக் கொள்ளத் தயங்கமாட்டோம்.

1980 களில் இசுரேல் அரசு, விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்கும் ஒருவருக்கொருவர் தெரியாமலேயே இராணுவப் பயிற்சி அளித்துள்ளது. இதனை பொதுசன ஐக்கிய முன்னணி தெரிந்துகொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சமாதான வழிக்குச் செல்வதே சிறீலங்காவிற்குச் சிறந்தது

## முன்னாள் இராணுவத் தளபதி தெரிவிப்பு

சிறீலங்கா அரசு, போரைக் கைவிட்டு சமாதான வழிக்குப் போவதுதான் சிறந்தது என, சிறீலங்காவின் முன்னாள் இராணுவத்தளபதி ஜெனரல் சேபால ஆட்டிக்கல தெரிவித்துள்ளார்.

தற்போது சிறீலங்காவின் விமான சேவைத் தலைவராகவுள்ள அவர் இராணுவ நடவடிக்கைகள் குறித்து, தான் எதுவும் பேசப்போவதில்லை என்றார். கடந்த 16 ஆண்டுகளில் 1994-1995 ஆம் ஆண்டுகளுக்கிடையில் மட்டும் 400 மில்லியன் ரூபா இலாபத்தை எயர்லங்கா ஈட்டியுள்ளதாகத் தெரிவித்தார். திரு. தொண்டமான் குடும்பத்தினர் எயர்லங்கா நிறுவனத்திற்கு பல இலட்சம் ரூபா செலுத்த வேண்டியுள்ளது என்பதையும் அவர் ஒப்புக்கொண்டார்.

# யாழ்.பல்கலைக்கழகத்தின்பெயரிலான மனிதஉரிமைகள்சங்கத்திற்கும்யாழ். பல்கலைக்கழகத்திற்கும்தொடர்பில்லை

## ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

யாழ். பல்கலைக்கழக மனித உரிமைகளுக்கான ஆசிரியர் சங்கம் எனக் கூறிக் கொள்ளும் குழுவுக்கும் தமக்கும் எதுவித தொடர்பும் இல்லை என யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து மேற்படி சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

கொழும்புச் செய்தித்தாள்கள் சிலவற்றிலும், இலண்டன் பிபிசி, பிலிப்பைன்ஸ் வெரித்தாஸ் வானொலியிலும் வெளியான சில தகவல்கள் குறித்து எமது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இத்தகைய தகவல்களை யாழ் பல்கலைக்கழக மனித உரிமைகளுக்கான ஆசிரியர் சங்கம் எனத் தம்மை கூறிக்கொள்ளும் ஒரு குழுவால் வெளியிடப்படுவது குறித்து, யாழ். பல்கலைக்கழக ஆசிரிய சங்கத்தினரான நாம் அதிர்ச்சியடைந்துள்ளோம். இந்த யாழ். பல்கலைக்கழக மனித உரிமைக்கான ஆசிரிய சங்கத்துடன் யாழ். பல்கலைக்கழகத்தின் ஊழியர் எவரும் தொடர்புபட்டிருக்கவில்லை என்பதை நாம் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

இந்த அமைப்புடன் எமக்கு எவ்வித தொடர்பும் இல்லை எனக் கூறும் அதேசமயம், யாழ். பல்கலைக்கழக வளாகத்தினுள் இப்படி ஒரு அமைப்பு இயங்கவில்லை என்பதையும் உறுதியாகக் கூறவிரும்புகின்றோம்.

இந்தவகையில், 'யாழ். பல்கலைக்கழக மனித உரிமைக்கான ஆசிரிய சங்கம்" எனப்படும் அவ்வமைப்புடன், எமக்கு எவ்வித தொடர்பும் இல்லை என்பதைக் கூறிக்கொள்வதுடன், அவ்வமைப்பு வெளியிடும் கருத்துக்களுக்கும் எமக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்பதையும் மீண்டும் உறுதிபடக் கூறுகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அபிவிருத்தி முயற்சிகள் பாதிப்பு! சிறீலங்காவில் எழுந்துள்ள நெருக்கடி

சிறீலங்கா அரசின் இராணுவச் செலவீடு தொடர்ச்சியாக அதிகரித்து வருவதனால் பொருண்மியம் பெரும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளதாக பொருண்மியத்துறை ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

போரிற்கு பெருமளவு நிதி ஒதுக்கப்படுவதினால் அபிவிருத்தி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதோடு, பொருண்மியவளர்ச்சியும் பாதிக்கப்பட்டுள்ள தாக இவ் ஆய்வாளர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து 'சண்டே ஐலண்ட்' செய்தித்தாள் தெரிவிக்கையில், 1983 இல் சிறீலங்காவின் மொத்தத் தேசிய உற்பத்தியில், ஒரு வீதமாக இருந்த இராணுவச் செலவீடானது தற்பொழுது ஐந்து வீதத்திற்கும் அதிகமாகவுள்ளது. இத்தொகை அடுத்த ஆண்டுகளில் 6.7 வீதமாக அதிகரிக்கலாம். இது சிறீலங்கா போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் அதிகப்படியானதொரு நிலையாகும்.

பாதுகாப்புச் செலவீனத்திற்காக மேலதிகமாக 4.5 பில்லியன் ரூபா அரசிற்குத் தேவைப்படுகிறது. இத்தொகையை அரசு பெற்றுக்கொள்ள சில மேலதிக வழிமுறைகளைத் தெரிவு செய்துள்ளது.

பாதுகாப்பு வரியை ஒரு சதவீதத்தால் அதிகரிப்பதன் மூலம் அரசிற்கு 1.9 பில்லியன் ரூபா கிடைக்கும். தனியார் மயப்படுத்தல் மூலம் அரசிற்கு மேலும் ஒரு பில்லியன் ரூபா கிடைக்கும். அத்துடன், இலங்கை மின்சார சபையின் இலாபத்தில் 1.5 பில்லியன் ரூபாவைத் திரட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் 10 ஆடம்பரப் பொருட்கள் மீதான அதிகரித்த வரி விதிப்பும் அரசினால் அமுலாக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, சிறீலங்கா அரசின் கடன் சுமையும் அதிகரித்துள்ளது. 1994 முடிவில் சிறீலங்காவின் கடன் சுமையானது 430 பில்லியன் ரூபாவாக இருந்தது.

இந்நிலையில், போரிற்கும், அபிவிருத்திற்கும் என செலவிட இவ் அரசினால் முடியாது. இது அபிவிருத்தி நடவடிக்கைகளைப் பெரிதும் பாதிப்பவையாகவுள்ளன.

நாட்டில் மொத்த தேசிய உற்பத்தி வளர்ச்சி வீதமும் இவ்வாண்டு 1.3 வீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளது. இதில் விவசாயத்துறை 3.3 வீதத்தினாலும் பொருள் உற்பத்தித்துறை 9.1 வீதத்தினாலும் வீழ்ச்சி கண்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# இனப்பிரச்சனை என்று எதுவுமே இருந்ததில்லை

## —பேராசிரியர் நளின் டி. சில்வா

'இலங்கையில் இனப்பிரச்சினை என ஒன்றுமில்லை. தமிழ்ப் பேரினவாதிகளாலும் அவர்களின் ஸ்கண்டிநேவிய ஆங்கிலேயர் தொடர்பாளர்களாலுந்தான், இந்த இனப்பிரச்சினை என்ற பதம் கொண்டு வரப்பட்டது. எனவே வடக்கு-கிழக்குப் போருக்கு அரசியல் தீர்வு என்ற ஒன்று கிடையாது. இவ்வாறு சிங்கள பேரினவாதியான பேராசிரியர் நளின் டி சில்வா 'ஐலண்ட்' செய்தித்தாளுக்கு அளித்த செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு-கிழக்கில் சிங்களக் குடியேற்றம் நடைபெறுவதாகக் கூறுவது பொய். தரப்படுத்தலால் தமிழ் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனக் கூறுவது சுத்த அபத்தம். 1970 முதல் பல்கலைக்கழக அனுமதியில் குறிப்பாக விஞ்ஞானத் துறையில் தமிழ் மாணவர்களில் 40 முதல் 50 வீதமானவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற்று வருகின்றனர். க.பொத. உயர்தரத் தேர்வு விடைத்தாள்களைத் திருத்தும் தமிழ் ஆசிரியர்கள் சிலர், அநீதியான நடவடிக்கையில் ஈடுபடுவதே இந்த அனுமதி அதிகரிப்பிற்குக் காரணமாகும். தரப்படுத்தல் கொள்கையில் எந்தத் தவறுமில்லை. தரப்படுத்தலால் சிங்கள மாணவர்கூட பாதிப்படைந்துள்ளனர். இவற்றை நான் வெளியிடும்போது ஈழம்வாதிகளிடமிருந்து நிதியுதவி பெறும் சிறு சிங்கள செய்தித்தாள்களின் ஆசிரியர்கள் என்னைப் பேரினவாதி என்கின்றனர்.

கட்டுக்கதை புராணங்களினாலேயே பிரபாகரன் போன்றோர் தோன்றினர். இவர்களுக்குக் கட்டுக்கதை வரலாறே போதிக்கப்பட்டது. வெளிநாட்டு ஆக்கிரமிப்பின்முன் இலங்கை இரு நாடுகளாக இருந்தது. பின்னர் பிரித்தானியா இலங்கையைவிட்டு வெளியேறும் போது, சிங்களவரிடம் மட்டும் 1947 இல் ஆட்சியைக் கொடுத்து விட்டு வெளியேறினர் என அவர்களுக்குப் போதிக்கப்பட்டது. அதனால் பிரபாகரனை உருவாக்கியவர்கள் தமிழ் பேரினவாதிகளே என நான் குற்றஞ்சாட்டுகின்றேன். அவரின் அரசியல் தந்தை செல்வநாயகம். அரசியல் பேரன்கள் பொன்னம்பலம் இராமநாதன், அருணாசலம் போன்றோராவர்.

ஈழம் வாதிகளுக்குச் சில கத்தோலிக்கப் பாதிரிகளும் உதவுகின்றனர். வெளிநாடுகள் சில அங்கு இயங்கும் புலிகளின் அலுவலகங்களை இயங்க அனுமதித்துள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

### நால்வர் உடல் சிதறிப்பலி

08-07-95 சனிக்கிழமையன்று ஆனையிறவு முகாமிலிருந்து கிளிநொச்சியை நோக்கி தொடர்ச்சியாக நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலின்போது நாலு பொதுமக்கள் உடல் சிதறிப் பலியாகினர். ஏழு பேர் படுகாயம் அடைந்தனர். இறந்தவர்களில் இருவர், வவுனியாவைச் சேர்ந்த தமிழ்ச்செல்வன் (வயது 19), மண்டானைச் சேர்ந்த கிருபா (வயது 20) என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

# நெடுமாறன் கண்டனம்

இந்திய அரசு சிறீலங்கா அரசிற்கு இராணுவ உதவியளிக்க முன்வந்துள்ளமை குறித்து திரு ப. நெடுமாறன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

பாக்குநீரிணையில் இந்திய கடற்படையின் ரோந்து அதிகரித்திருப்பது குறித்தும் அவர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

நெடுமாறன் அண்மையில் தமிழகத்தில் சிறீலங்கா அரசிற்கு இந்திய மத்திய அரசு இராணுவ உதவிகளை வழங்கக்கூடாது எனக் கூறியும் விடுதலைப் புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் எதிராக இந்தியா எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளக்கூடாது எனவும் கூறி மாநாடு ஒன்றை நடத்தியது தெரிந்ததே.

www.tamilarangam.net



தென்கிழக்கு ஆசியாவிலுள்ள மிகப்பெரிய நூலகமான யாழ்ப்பாண நூலகம் 1981 ஆம் ஆண்டு ஆனி மாதத்தில் எரித்துச் சேதப்படுத்தப்பட்டது. தமிழ் மக்களுக்கும், மனித குலத்துக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்ட பாரிய கொடுங்கோன்மை இதுவாகும்.

பொலிஸ் படையினரால் 1981 ஆனியில் யாழ்ப்பாண மாநாகரம் தீக்கிரையாக்கப்பட்டபோது, தென்கிழக்காசியாவிலேயே மிகப்பெரிய நூலகமான யாழ்ப்பாண நூலகம் முழுவதும் எரிக்கப்பட்டது. வரலாற்றுப் பெருமை கொண்டதும்,

# யாழ். நூலகம்

தமிழ்ப் பண்பாட்டின் கேந்திர நிலையமுமாகிய இந்நூலகத்தை ஒன்றுமேயில்லாமல் முற்றாக எரிக்கும் நோக்குடன் இராணுவமும், பொலிசும் கூட்டாகச் செயற்பட்டன

பாரிசிலிருந்து வெளிவரும் 'சோ புருந்தியே' என்கிற (Sans frontiere) பிரெஞ்சு மொழி ஏடு. யாழ்ப்பாணப் பொதுநூலகம் எரிக்கப்பட்டதையொட்டி 1981 மார்கழி 18 ஆம் நாள் இதழில் கட்டுரையொன்று எழுதியுள்ளது. யாழ் நூலகம் எரிக்கப்பட்டமை. "காட்டு மிராண்டித்தனமான கலாச்சாரக் கொலை" என்று சாடும் இக்கட்டுரையின் தமிழாக்கமே இது. யாழ் நூலகம் எரிக்கப்பட்டதன் 14 ஆம் ஆண்டு நிறைவையொட்டிய கட்டுரை

அலுவலகம் எரித்து முடிக்கப்பட்டவுடன் பொலிசார் நேரடியாக யாழ்ப்பாணப் பொதுநூலகத்துக்குச் சென்று புத்தக அலுமாரிகளிலிருந்த புத்தகங்களின் மீது

# சிறீலங்கா அரசின் கொடூரமுகத்திற்கு எடுத்துக்காட்டு

என்பதை எமக்குக் கிடைத்த தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

1981 ஆனி மாதம் யாழ்ப்பாண மாநகரில் இழைக்கப்பட்ட கொடுமையான குற்றச் செயல்களில் மிகவும் பிரதானமானது, இந்நூலகம் அழிக்கப்பட்டதாகும். 97,000 அருமையான தொகுப்பு நூல்களும், கிடைக்க முடியாத அருமையான கையெழுத்துப் பிரதிகளும் எரிந்து பிடிசாம்பராயின. வட இலங்கையிலுள்ள திராவிட சிற்பக்கலையின் எடுத்துக்காட்டாக விளங்கிய அக்கட்டடத்தில் கருகிய சுவர்களை மட்டுமே தீ எச்சமாக விட்டது.

இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ்ச் சமுதாயம் தனது சுதந்திரத்தை முன்வைத்து தனிநாட்டுக்காகப் போராடி வருகிறது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. கல்வி, தொழில்வாய்ப்பு, நிலப்பங்கீடு, தமிழ்ப்பகுதி அபிவிருத்தி போன்ற வாழ்வின் சகல துறைகளிலும் தமிழ்ச் சமுதாயம் ஒதுக்கப்பட்டு பாரபட்சங்களை அனுபவித்து வருகிறது.

1981 ஆனி 4 ஆம் நாள் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலின் போது, ஆனி முதல் நாளே அசம்பாவிதங்கள் நடைபெறத் தொடங்கின. யாழ்ப்பாண மாவட்டத்தில் வெற்றிபெறும் நோக்குடன் ஜெயவர்த்தனா அரசு தனது அமைச்சர்களை-யெல்லாம் ஆதரவு திரட்ட யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்திருந்தது. அஞ்சி நடுங்கிக் கொண்டிருந்த ஆயுதப்படைகளும் யாழ்ப்பாணத்துக்கு பாதுகாப்புக்கு என்ற பெயரில் அனுப்பப்பட்டன.

ஆனால் இவர்கள் அனுப்பப்பட்டது, தேர்தலைக் குழப்பவும் தமிழ் வாக்காளர்களை அச்சுறுத்தவும் எதிர்க் கட்சியாகிய தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வாக்களிக்காமல் தடுக்கவுமே என்பதை நடைபெற்ற சம்பவங்கள் நிரூபித்துவிட்டன.

ஒரு பொலிஸ் அதிகாரி துப்பாக்கிக் குண்டுக்கு இரையானார். இதைத் தொடர்ந்து மாநகரம் முழுவதும் தீக்கிரையாக்கப்பட்டது. பொது நூலகம், ... கடைகள், பல வீடுகள், ... நாடாளுமன்ற உறுப்பினர் ... தலைமைச் செயலகம், கூட்டணிச் செய்தித்தாள் செயலகம் அனைத்தும் தீக்கிரையாக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் நடந்த அழிவுகளைச் செய்தியாக அச்சிட்டுக் கொண்டிருந்தபோது, கொழும்பு ...க்கு வெளியே அச்சிடப்படும் ஒரே தமிழ் நாளேடான ஈழநாடு அச்ச...கத்துக்கு அடுத்தநாள் தீமூட்டி எரிக்கப்பட்டது. இந்தச் செய்தித்தாள் ...

பெற்றோலை ஊற்றித் தீ வைத்து எரிக்கத் தொடங்கினார். பொலிஸ் மா அதிபர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் சிங்கள மந்திரிசபை அமைச்சர்கள் ஆகியோர் அச்சமயத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்தார்கள் என்பதை நம் கவனத்துக்கு எடுக்க வேண்டும். யாழ்ப்பாணத்திலுள்ள கேடுகெட்ட பொலிஸ் நிலையத்திலிருந்து 300 மீற்றர் தொலைவிலேயே நூல் நிலையம் அமைந்துள்ளது.

யாழ் நூலகம் எரிக்கப்படுவதை அறிந்த யாழ் மேயரின் செயலாளர் ஊழியர்களுக்கும், நெருப்பணைப்போருக்கும், நெருப்பை அணைக்கும் படி உத்தரவிட்டார். ஆனால் நெருப்பை அணைக்கவிடாது அவர்கள் பொலிசாரால் தடுக்கப்பட்டனர்.

**1981 ஆனி மாதம் யாழ்ப்பாண மாநகரில் இழைக்கப்பட்ட கொடுமையான குற்றச் செயல்களில் மிகவும் பிரதானமானது, இந்நூலகம் அழிக்கப்பட்டதாகும்.**

தமிழர்கள் படிப்புக்கும், கல்விக்கும் எப்போதுமே முதலிடம் அளிப்பவர்கள். யாழ்ப்பாண நூலகம், கல்வி, படிப்பு, ஆய்வு போன்ற துறைகளின் உண்மையான கலாச்சார கேந்திரமாக விளங்கியது. 1959 இல் இருந்து இயங்கிவரும் இந்நூல் நிலையம் துரிதமாக அபிவிருத்தியடைந்து வந்தது.

ஆனந்த குமாரசாமி, ஐசாக் தம்பையா போன்றோரின் சேகரிப்புக்கள் அங்கேயிருந்தன.

1931 ஆம் ஆண்டு சர்வசன வாக்குரிமை கிடைத்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் சுதந்திரமான நூலகம் ஒன்று வேண்டும் என்ற எண்ணம் கருக்கொண்டது. சுதந்திரம் கிடைத்த ஓராண்டின் பின் (1949) யாழ்ப்பாணத்திற்கு மாநகர அந்தஸ்து கிடைத்தது. யாழ்ப்பாணத்தின் முதலாவது மேயரான சாம் ஏ.சபாபதி நூல் நிலையம் ஒன்றை நிறுவ மாநகரசபையிடமிருந்து அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டார். பிரபல இந்தியக் கட்டடக் கலைஞர் நரசிம்மன், திராவிட சிற்பமுறைப்படி இதற்கான மாதிரிப்படத்தை வரைந்தார்.

தமிழ்க் கலாச்சாரத்தின் கேந்திர நிலையமாகப் பிரபல்யம் பெற்று வந்த இந்த நூலகத்தையே ஆயுதப்படையினர் குறி வைத்திருக்கின்றனர். இந் நூலகம் ஏற்கனவே திட்டமிட்டு அழிக்கப்பட்ட செயலானது, காட்டுமிராண்டித்தனமான கலாச்சாரக் கொலையாகும். நூலகத்தில் தொங்கிய ஒரு பலகையில் பின்வரும் ஒரு முதுமொழி பொறிக்கப்பட்டுக் காணப்பட்டது. 'அபிவிருத்தியின் அடி அத்திவாரமே ஒரு நூல்நிலையம்தான்' என்பதே அது. அதைத் தவிர- நிலத்திற்குள் போடப்பட்ட அத்திவாரம் மட்டுமே தொடப்படாமல் எஞ்சிக்கிடந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கள நிலைமைகள்

## மட்டக்களப்பு காயங்கேணி இராணுவ முகாம் தரைமட்டம்

மட்டக்களப்பு காயங்கேணி இராணுவ முகாம் விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி வீழ்ச்சி உற்றது. அரைமணிநேரம் நடத்தப்பட்ட தாக்குதலின் போது எட்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டு ஒன்பது பேர் படுகாயம் அடைந்துள்ளனர். ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டு ஏனைய பொருட்களும் அகற்றப்பட்ட பின்னர் முகாம் தீயிட்டு அழிக்கப்பட்டது. விடுதலைப் புலிகள் தரப்பில் மட்டக்களப்பைச் சேர்ந்த 2ம் லெப். குணசிலன், காசிநாதன் தவநேசன் வீரச்சாவடைந்தார்.

## புல்மோட்டை இராணுவக் காவலரண் தாக்குதலில் நாலு இராணுவத்தினர் பலி

திருகோணமலை புல்மோட்டையில் இராணுவக் காவலரண்மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் தொடுத்தனர் இத் தாக்குதலின் போது நாலு இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். விடுதலைப் புலிகள் தரப்பில் பளையைச் சேர்ந்த 2ம் லெப். செல்வக்குமார் விநாயகம் ஜெயகரன் வீரச்சாவடைந்தார்.

## கடற்படை பலத்த சேதத்துடன் பின்வாங்கியது

தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் ஏற்பட்ட மோதலின்போது கடற்படையினர் பலத்த சேதத்துடன் பின்வாங்கினர். விடுதலைப் புலிகள் தரப்பில் தியாகு மாணிக்கம் முத்துலிங்கம் வீரச்சாவடைந்தார். மட்டக்களப்பில் யூன் 21ம் திகதி கரிவுத் தோட்டம் எனும் இடத்தை இராணுவம் சுற்றிவளைத்த போது ஏற்பட்ட மோதலில் 2ம் லெப். அருள்வேந்தன் யோகநாதன் நவநீதன் வீரச்சாவடைந்தார்.

## விழுப்புண் அடைந்திருந்த 2 போராளிகள் வீரச்சாவு

மட்டக்களப்பு மாவட்டம் காயங்கேணிப் பாலத்தில் அமைந்திருந்த சிறிலங்கா இராணுவ மினிமுகாம்மீது யூன் 25ம் திகதி விடுதலைப் புலிகள் தாக்கி அழித்தபோது நடைபெற்ற மோதலில் விழுப்புண் அடைந்திருந்த இரு போராளிகள் யூன் 26ம் திகதி வியாழக்கிழமை காலை வீரச்சாவடைந்தனர். லெப். உலகேந்திரன் வண்ணமணி பவனாயுதன் மட்டக்களப்பு, வீரவேங்கை வேணுதாசன் அழகுதுறை சந்தனானந்தன் மட்டக்களப்பு ஆகியோரே வீரச்சாவடைந்தவர்களாவர்.

## வெடிவிபத்தில் 3 போராளிகள் வீரச்சாவு

கிளிநொச்சி பகுதியில் யூன் 26ம் திகதி இரவு எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் 3 போராளிகள் வீரச்சாவடைந்தனர். வீரச்சாவடைந்த லெப். இராமராஜ்ஜன் (புலேந்திரன்) மகாலிங்கம் முகுந்தன் அம்பாறை, 2ம் லெப். சிவகரன் சிவஞானம் கோபாகரன் மட்டக்களப்பு, வீரவேங்கை ஈழமணி, தம்பிப்பிள்ளை ராஜேந்திரன் அம்பாறை. ஆகியோர் வீரமரணமடைந்துள்ளனர்.

## தோல்வியால் வெறிகொண்ட இராணுவம் மக்கள் மீது எறிகணைவீச்சு

மண்டைதீவு இராணுவத்தள வீழ்ச்சியால் வெறிகொண்ட சிறிலங்கா இராணுவத்தினர் யூலை 28ம் திகதி புதன் அதிகாலை முதல் மேற்கொண்ட எறிகணைக்கு இலக்காகி ஒருவர் பலி, 12 பொதுமக்கள் படுகாயம்.

படுகாயமடைந்தோர்கள் விபரம் வருமாறு:

கிறிஸ்டி பிரேம வத்சலா வயது 26 - பாசையூர் (இவர் கணவர் கிறிஸ்டி அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார்), அஞ்சனா ஒன்றரை வயது - பாசையூர்/ மொனிட்டின் அம்மா அச்சுக்கூட வீதி 55, யாழ்ப்பாணம்./ சிவகுமார் ராகவன் வயது 19 மூளாய் - சுழிபுரம்/ கணபதி தங்கராசா வயது 54 குவரைத்தோட்டம் - யாழ்ப்பாணம்/ தங்கராசா பராசக்தி (கணபதி தங்கராசாவின் மனைவி) வயது 45 குவரைதோட்டம் யாழ்ப்பாணம்/ நாகேஸ்வரி வயது 54/ நவரட்ணம் வயது 58, குவரைத்தோட்டம்/ முத்தையா வயது 55/ தினேஸ் வயது 4 யாழ்ப்பாணம்/ ஜஸ்டின் வயது 4, கொய்யாத்தோட்டம்/ புவனேஸ் - பலாலி.

## ஒரு அதிகாரி பலி 12 பொலிசார் காயம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் யூலை 7ம் திகதியன்று விடுதலைப் புலிகள் நடத்திய கண்ணிவெடித்தாக்குதலில் ஒரு பொலிஸ் உயர் அதிகாரி கொல்லப்பட்டதுடன், 12 பேர் காயம் அடைந்ததாக சிங்கள அரசுச் செய்திகள் தெரிவிக்கின்றது. மட்டக்களப்பில் செட்டியார் வீதியைச் சேர்ந்த 19 வயதான சின்னத்துரை இராமச்சந்திரன் என்பவரை சிறிலங்கா இராணுவம் கொடூரமாகச் சுட்டுக் கொன்றுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் பன்குடாவெளியில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் இருவரை சிறிலங்காப் படை மிருகத்தனமாகச் சுட்டுக் கொன்றுள்ளது. நடராஜன் நாகேந்திரம், கணபதிப்பிள்ளை புவனேந்திரம் ஆகியோரே இவ்வாறு பரிதாபகரமாகச் சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர்.

## மணலாற்று மோதலில் சிறப்புத் தளபதி உட்பட 8 போராளிகள் வீரச்சாவு

மணலாற்றுக் காட்டுப் பகுதியில் யூலை 6ம் திகதி காலை கடும் மோதல் ஒன்று நடைபெற்றுள்ளது. இம்மோதலின் போது பலத்த இழப்பினை அடைந்த இராணுவம் தொடர்ந்து சண்டையிட முடியாமல், முகாமிற்குள் பின்வாங்கிக் கொண்டது. பெரும் அளவு இராணுவத்துடனான இம்மோதலின் போது மணலாற்றுக் கோட்ட சிறப்புத் தளபதி மேஜர் பரமதேவன் உட்பட எட்டு போராளிகள் வீரச்சாவடைந்தனர். வீரச்சாவடைந்த எட்டுப் போராளிகள் விபரம் பின்வருமாறு:

மன்னாரைச் சேர்ந்த மேஜர் பரமதேவன் அல்லப்பராஜா ஜஸ்டின், மட்டக்களப்பைச் சேர்ந்த லெப். செந்தாளன்- கிருஷ்ணபிள்ளை குமார், மயிலிட்டியைச் சேர்ந்த லெப். தூயவன் - அருளாநந்தன் மதனராஜ், தெல்லிப்பளையைச் சேர்ந்த 2ம் லெப். வேணுசங்கர் சுப்பிரமணியம் ராமகிருஷ்ணன், நீர்வேலியைச் சேர்ந்த வீரவேங்கை ஈழமணி - தெய்வன் காந்தன், காரைநகரைச் சேர்ந்த வீரவேங்கை குட்டிமணி துரைராசா திருக்கணேஸ், கரவெட்டியைச் சேர்ந்த வீரவேங்கை தயாநந்தன் தங்கராசா பாக்கியநாதன், புதுக்குடியிருப்பைச் சேர்ந்த வீரவேங்கை முக்கண்ணன்-நவரத்தினம் துரைராசா ஆகியோராகும்.

## பீரங்கித் தாக்குதலில் பொதுமகள் ஒருவர் படுகாயம்

யூலை 6ம் திகதி அதிகாலை தாளையடி மக்கள் குடியிருப்புக்கள் மீது சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலில் அவ்விடத்தைச் சேர்ந்த வேலாயுதமூர்த்தி உதயரஞ்சினி என்பவர் படுகாயம் அடைந்தார்.

## மூன்று மீனவரைக் காணவில்லை

யூலை 3ம் திகதி திங்கட்கிழமை அன்று மீன்பிடிப்பதற்காக குருநகர் கடலுக்குச் சென்ற மூன்று மீனவர்கள் காணாமல் போனதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வின்ஸ்டன் சேர்ச்சில் ஜான்ஸ்டன், சிலுவை மரியதாஸ், சிலுவை சேகர் ஆகியோர் காணாமல் போனதையிட்டு அவர்களது உறவினர்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாண பிரதிநிதியிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

யூலை 7ம் திகதி அதிகாலை வல்வெட்டித்துறைக் கடற்பரப்பில் மீனவர்கள் மீது சிறிலங்காக் கடைற்படையினர் நடத்திய தாக்குதலில் ஆதிகோவிலடியைச் சேர்ந்த தில்லையம்பலம் ரங்கநாதன் காணாமல் போயுள்ளார். இவருடன் தொழிலில் ஈடுபட்டிருந்த துரைச்சாமி சிவலிங்கம் மயக்கமடைந்த நிலையில் கரைசேர்ந்தார்.

இதையடுத்து பருத்தித்துறை கடற் பகுதியில் சிறிலங்கா கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்கும் இடையே கடும் மோதல் இடம்பெற்றது. தமிழ் மீனவர்கள் மீது கடற்படையினர் மேற்கொள்ளும் தாக்குதல்களுக்கு பதிலடி கொடுக்கும் முகமாக, ரோந்து சென்ற சிறிலங்கா கடற்படையினரின் படகுகளை கடற்புலிகள் வழிமறித்து தாக்கியபோது ஏற்பட்ட மோதல் பலமணிநேரம் நீடித்ததையடுத்து பலத்த இழப்புக்களுடன் கடற்படையினர் பின்வாங்கிச் சென்றனர். இம் மோதலைஅப்பகுதி மக்கள், நேரடியாக பார்க்கக் கூடியதாக இருந்தது. இப் பாரிய கடற்சண்டையில் விடுதலைப் புலிகளின் தரப்பில் கடற்புலி அணியைச் சேர்ந்த லெப்டினன் செங்கதிர் பாலகிருஸ்ணன் பாஸ்கரன், பருத்தித்துறை வீரச்சாவடைந்துள்ளார். இதே தினம் யாழ்ப்பாணத்தில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் லெப். மணி- சுந்தரம் யோகேஸ்வரன். மட்டக்களப்பு என்ற விடுதலைப் புலிப் போராளி வீரச்சாவடைந்தார்.

## சுப்பர் சொனிக்கின் குண்டுவீச்சு

சிறிலங்கா விமானப்படையின் இரண்டு சுப்பர் சொனிக் விமானங்கள் வடமாராட்சிக் கடற்பரப்பால் வந்து தென்மாராட்சிமீது குண்டுத் தாக்குதல்களை நடத்திவிட்டு மின்னல் வேகத்தில் மறைந்தன. இத்தாக்குதலின் போது மாணவிகள் உட்பட 9 பேர் படுகாயமடைந்தனர். தென்னந்தோப்புகளும் குடிசைகளும் இவ்விமானத் தாக்குதலின்போது சேதமடைந்தன.

## களுவாங்கேணியில் 3 இராணுவம் பலி

மட்டக்களப்பு மாவட்டம் களுவங்கேணி என்னும் இடத்தில் சிறிலங்கா இராணுவத்தினரின் காவலரண்மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர். வாகனமொன்றில் இராணுவத்தினர் போல் உடைதரித்து வந்த விடுதலைப் புலிகள் இத்திடீர்த் தாக்குதலை மேற்கொண்டதாக சிறிலங்காவின் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## முல்லை மாவட்ட மோதலில் 2 போராளிகள் வீரச்சாவு

யூன் 20ம் திகதி முல்லை மாவட்டத்தில் சிறிலங்காப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்ற மோதலின் போது மன்னாரைச் சேர்ந்த லெப். சஞ்சீவி சுப்பிரமணியம் ஜெயானந்தன், முல்லைத்தீவைச் சேர்ந்த 2ம் லெப். கலிங்கன் ராசதுரை ராஜேஸ்வரன் ஆகியோர் வீரச்சாவடைந்துள்ளனர்.

## திகிலிவெட்டையில் 8 இராணுவம் பலி

யூன் 3ம் திகதி மட்டக்களப்பில் ரோந்து சென்ற 8 ராணுவத்தினர் கொல்லப்பட்ட சம்பவம் திகிலிவெட்டை என்னும் இடத்தில் இடம்பெற்றுள்ளதாகவும் இதன் போது 10 இராணுவத்தினர் காயம் அடைந்ததாகவும் தளச்செய்திகள் தெரிவிக்கின்றன. இதன்போது ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இச் சண்டையின் போது மட்டக்களப்பை சேர்ந்த 2ம் லெப். கணேசமூர்த்தி சசிக்குமார் சின்னத்துரை வீரமரணம் அடைந்துள்ளார். திருகோணமலையில் இராணுவத்துடனான மோதலில் திருகோணமலையைச் சேர்ந்த முருகேசு சங்கர் எனும் போராளி வீரமரணம் அடைந்துள்ளார். மட்டக்களப்பு நகர்ப் பகுதியில் இராணுவ சுற்றிவளைப்பின் போது மட்டக்களப்பைச் சேர்ந்த வீரவேங்கை இன்பசீலன் பூபாலபிள்ளை வீரச் சாவடைந்துள்ளார். வெற்றிலைக்கேணி முகாமுக்கருகே ஒரு அதிகாரியும் இன்னொரு இராணுவத்தினரும் விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி இறந்துள்ளதாக அரச செய்திகள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கடந்த மே மாதம் 19ஆம் திகதி அனுராதபுரத்திலுள்ள கூட்டுப்ப டைத் தலைமையகத்திற்கு, வடபகுதி படைத்துறை அதிகாரிகளை அழைத்திருந்த பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த, தெளிவானதொரு முடிவுடனேயே கூட்டத்திற்கு வந்திருந்தார். விடுதலைப் புலிகளுடனான மூன்றாங் கட்ட ஈழப்போர் ஆரம்பமாகி ஒரு மாதம் கடந்துவிட்ட நிலையில் கூட்டப்பட்ட இம் மாநாட்டில், படைத்துறை அதிகாரிகளின் போர்த்திட்டங்கள் எதையும் அமைச்சர் ரத்வத்த கேட்கத் தயாராக இருக்கவில்லை என்பதே, அக்கூட்டத்தில் யதார்த்தமாயிருந்தது.

கூட்டம் ஆரம்பித்ததும் அமைச்சர் ரத்வத்த, தான் கொண்டுவந்திருந்த யாழ்குடாநாட்டின் மீதான தாக்குதல் திட்டத்தை முன்வைத்தார். இத்திட்டமானது, துரிதகதியில் யாழ் குடாநாட்டை இராணுவம் கைப்பற்ற வேண்டும் என்பதாக இருந்தது. ஆனால் கிழக்கில் விடுதலைப்புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்த நிலையில், அமைச்சர் ரத்வத்தவின் யாழ்குடாநாட்டின் தாக்குதல் திட்டம் படை அதிகாரிகள் மட்டத்தில் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது.

திட்டமிடப்பட்டது. லெப்.ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ தலைமையிலான இத்தாக்குதல் திட்டமானது மிகவும் இரகசியமான முறையில் மேற்கொள்ளப்பட்டது. தாக்குதலுக்கான திட்டம், திகதி என்பன உறுதி செய்யப்பட்ட நிலையில், படைகளும் தயார்படுத்தப்பட்ட நிலையில், தாக்குதல் பொறுப்பை ஏற்ற தளபதி உட்பட அவருடன் தாக்குதல் திட்டத்திற்குத் துணைநின்ற தளபதிகளும் அராலிக் கண்ணிவெடிச் சம்பவத்தில், தாக்குதல் ஆரம்பிக்கத் திட்டமிட்ட திகதிக்கு முதல்நாள் கொல்லப்பட்டனர்.

இத்துடன் தாக்குதல் திட்டமானது கைவிடப்பட்டதோடு, காலவரையறையின்றியும் ஒத்திப்போடப்பட்டது. இருப்பினும் யாழ்குடாநாடு மீதான தாக்குதல் திட்டத்தின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்பட்ட யாழ் குடாநாட்டு முற்றுகையானது, கைவிடப்படாத ஒன்றாகவே இருந்தது. இந்நிலையில்தான் யாழ் குடாநாட்டின் மீதான படையெடுப்பின் ஒரங்கமாக, 'ஒப்பரேசன் யாழ்தேவி' லெப்ஜெனரல் வைத்தியரட்ணா இராணுவத்தளபதியாகவும், வடபிராந்தியத் தளபதியாக மேஜர் ஜெனரல் தளுவத்தவும்



# யாழ் மீதான படையெடுப்பு

அத்தோடு, யாழ் குடாநாடு மீதான தாக்குதல் திட்டமானது எந்தளவு தூரத்திற்கு வெற்றியளிக்கும் என்பது குறித்தும் படை அதிகாரிகள் மட்டத்தில் சந்தேகங்கள் எழுந்தன.

இருந்தபோது மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதல் திட்டம் தோல்வியில் முடிவுற்றபோது, புலிகள் இயக்கம் பூநகரிக் கூட்டுப்படைத் தளம் மீது மேற்கொண்ட 'ஒபரேசன் தவளை' தாக்குதலும், யாழ்குடாநாட்டின் மீதான

ஏனெனில் கிழக்கே பெறப்படும் இராணுவ வெற்றிகள் இனிப் பிரபலப்படுத்தக்கூடியதொன்றாக இருக்கப்போவதில்லை. காடுகளில் நடைபெறும் போரில் வெற்றிக்கென வெளியில் எவையும் காட்டப்படக்கூடியனவாகவோ பிர-

# ரத்வத்தையின் குறிக்கோள் என்ன?

படை அதிகாரிகள் மட்டத்தில் இவ்வாறான சந்தேகமும் ஐயப்பாடும் எழுந்ததில் நியாயம் இல்லாமல் இல்லை. ஏனெனில் யாழ் குடாநாடு மீதான முன்னைய தாக்குதல்களும், தாக்குதல் திட்டங்களும் சந்தித்த நெருக்கடிகளும், தோல்விகளும் அவர்களினால் நன்கு உணரப்பட்டே இருந்தன.

குடாநாட்டின் ஒரு பகுதியில் -வடமராட்சியில் 1987ஆம் ஆண்டில் சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட 'ஒப்பரேசன் லிபரேசன்' தாக்குதலுக்குப்பின்னர் குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலானது, இந்திய இராணுவம் நடத்திய 'ஒப்பரேசன் பவான்' ஆகும். இதுவே குடாநாடு பூராவும் என்ற ரீதியிலும் குறிப்பாக யாழ்நகரைக் குறிவைத்தும் நடத்தப்பட்ட தாக்குதலாகும்.

இத்தாக்குதலில் சமார் 35,000 இந்திய இராணுவத்தினர் பங்கேற்றும் சமார் இரண்டுமாதங்கள் இடம்பெற்றது என்பதும், இந்திய இராணுவம் பல உயிரிழப்பையும் ஆயுத தளபாட இழப்புக்களையும் சந்திக்க வேண்டி இருந்தது என்பதும் அவர்களால் அறியப்பட்டிருந்தது.

இதற்கும் மேலாக இந்திய இராணுவம் யாழ் குடாநாட்டைக் கைப்பற்றிய போதும், அங்கு அவர்களால் என்றுமே நிம்மதியாக இருந்திருக்க முடியவில்லை என்பதும் உணரப்பட்டிருந்தது. அதாவது யாழ். நகரப் பகுதியிலும் அதை அண்டியுள்ள பிரதேசத்தில் காணப்பட்ட 'கட்டிடக் காட்டிற்குள்ளும்' புலிகளின் கெரில்லா முறைத்தாக்குல்களும் இந்திய இராணுவத்தை திறமையாகச் செயற்பட முடியாது செய்துவிட்டது என்பதும் உணரப்பட்டிருந்தது.

இதே சமயம், இரண்டாங்கட்ட ஈழப்போர் ஆரம்பகாலம் தொட்டே யாழ் நகர் மீதும், யாழ். குடாநாட்டின் மீதும், சிறீலங்கா அரச தனது நிலையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற முயற்சியில் அக்கறை காட்டியே வந்தது. 1991 அக்டோபரில் 'ஒப்பரேசன் வலம்புரி' மூலம் தீவகப்பகுதியையும், பூநகரிப்பகுதியையும் தனது பிடிக்குள் கொண்டுவந்திருந்த இராணுவம், யாழ் குடாநாட்டின் மீது எப்பொழுதும் தாக்குதல் நடத்தப்படலாம் என்றே அச்சுறுத்தி வந்தது. அப்போதைய இராணுவத் தளபதி ஜெனரல் கமில்டன் வனசிங்கா 'இன்னமும் 1.5 கிலோ மீற்றர் தூரத்திலேயே யாழ்நகர் உள்ளது, இராணுவம் எவ்வேளையிலும் அங்கு பிரவேசிக்கலாம்' என ஒப்பரேசன் வலம்புரி முடிந்தவுடன் தெரிவித்தார்.

ஆயினும் அத்துணை சலபமான காரியமாக இராணுவத் தலைமைப்பீடத்தால் எடுத்துக்கொள்ளப்படவில்லை. யாழ்கோட்டை முற்றுகை முறியடிப்புக்கு இறங்கிய துருப்புக்கள் புலிகளிடம் வாங்கிய பலமான அடியானது, அவர்களுக்கு நல்ல படிப்பினையாக இருந்திருக்க வேண்டும்.

இருப்பினும் காலம் தாழ்த்தியாயினும் யாழ் நகர் மீதான தாக்குதல் திட்டமொன்று இராணுவத்தால் நடத்தத்

படையெடுப்புத் திட்டத்தை மட்டுமல்ல, யாழ் குடாநாட்டின் முற்றுகைத் திட்டத்தையும் தோல்வியில் முடிவுறச் செய்தது.

இவ்வாறானதொரு நிலையில் அமைச்சர் ரத்வத்த யாழ். குடாநாட்டின் மீதான தாக்குதல் திட்டமொன்றை இலகுவானதொன்றாக முன்வைத்தமையானது, இராணுவத் தளபதிகள் மட்டத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியதில் வியப்பொன்றும் இல்லைத்தான்.

இவ்வாறு அமைச்சர் ரத்வத்தை திட்டமொன்றை



முன்வைத்தமைக்கு அவரின் சிந்தனை, அபிலாசை என்பன வேறு விதமாக இருந்ததே காரணமாகும். மூன்றாங் கட்டப் போருக்கான மூலோபாயம், தந்திரோபாயம் என்பவற்றை விட எப்படியாகிலும் உடனடியாக ஒரு இராணுவ வெற்றியைப் பெறுவதும், அதன்மூலம் பொஜ முன்னணி அரசினை நிலைப்படுத்துவதும், தனது நிலையைக் கட்சிக்குள் உறுதிப்படுத்தவும் இவ் இராணுவ வெற்றி அவருக்கு அவசியமாகின்றது.

அரசாங்கத்தைப் பொறுத்து மூன்றாங்கட்ட ஈழப்போரின் தொடக்கமானது, பாரிய இழப்புக்களுடன் கூடியதாகவே இருந்தது. ஒரு வகையில் கடற்படையானது இரண்டு போர்க் கப்பல்களை இழந்தது. விமானப்படையோ இரண்டு விமானங்களை இழந்ததோடு, பறக்கமுடியாது முடங்கியது. ஒருவகையில் இது ஒரு உள்நாட்டுப் போர் என்ற ரீதியில் ஆச்சரியமளிக்கக்கூடிய இழப்புக்கள்தான். அத்தோடு, கிழக்கில் புலிகளின் தாக்குதல்களும் பெரும் இழப்புக்களை உண்டுபண்ணுபவையாக இருந்தன.

இந்நிலையில், அரசக்குத் தேவையான வெற்றியென்பது விடுதலைப்புலிகளின் வெற்றிகளைப் புறந்தள்ளக்கூடியவையாகவும், வெளியில் தெளிவாகத் தெரியக்கூடியதாகவும், பிரகடனப்படுத்தக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும் என்பதாகவே இருந்தது. ஆகையால் வடக்கின் மீதான குறிப்பாக யாழ்குடாநாட்டின் மீதான தாக்குதல் ஒன்றே இதற்குப் பொருத்தப்பாடானதாக இருந்தது.

கடனப்படுத்தப்படக்கூடியனவாகவோ இருக்கப்போவதில்லை. வெற்றி பெறப்படினும் அவை மீளப்பெறப்பட்டவையாகவே கருதப்படும்.

மறுவளமாக யாழ் குடாநாட்டின் மீதான தாக்குதலானது, இராணுவத்திற்கு என்றும் சவாலானதொன்றாகவே இருந்துவரும் நிலையில், குடாநாட்டைப் பிடித்தல்-குறிப்பாக யாழ்நகரைப் பிடித்தல் என்பது ஒரு பெரும் இராணுவ வெற்றி பெற பறைசாற்றக்கூடியதே ஆகும். அத்தோடு இவ்வெற்றியானது, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை இராணுவ ரீதியில் தோற்கடித்து விட்டதான ஒரு மாயை நிலையை வெளியில் உருவாக்கக்கூடியதும் ஆகும்.

மேலும் விடுதலைப் புலிகளுடன் சமார் ஒரு தசாப்தத்திற்கு மேலாகப் போரை நடத்திய ஐக்கிய தேசியக்கட்சி அரசால் முடியாததை, பொதுஜன ஐக்கிய முன்னணி சாதித்துள்ளது என்ற நிலையில் சிங்களப் பேரினவாதத்தினரின் விசுவாசத்தைப் பெற்றுக் கொள்ளுதல் இலகுவானதாக இருக்கும் என்பதும், அமைச்சர் ரத்வத்தையின் நோக்கமாக இருக்கக்கூடும்.

இவற்றிற்கு மேலாக அமைச்சர் ரத்வத்தையின் தனிப்பட்ட பெயருக்கும் இது அவசியமானதாக உள்ளது. தனது பெயருக்கு முன்னுள்ள கேணல் என்ற பட்டத்திற்குத் தனது தகுதியை அவர் நிரூபித்ததுபோலிருக்குமென அவர் கருதலாம். அல்லது பெருமைப்படலாம். அத்தோடு, சுதந்திரக்கட்சிக்குள் எழுந்துள்ள மூன்றாவது தலைமைப்பொறுப்பு என்ற போட்டியில் தனது கைகளைப் பலப்படுத்த அவருக்கு இது உதவக்கூடும். அதாவது இவ் இராணுவ வெற்றிமூலம் தன்னை ஹீரோ ஆக்கிக் கொள்ளலாம் என அவர் எண்ணியிருக்கலாம்.

இந்நிலையில்தான் அமைச்சர் ரத்வத்த, கடந்தகால நிகழ்வுகள் தொடர்பாகவோ எதிர்காலப்பாதிப்புக்கள் தொடர்பாகவோ எதைப்பற்றியும் தீவிரமாக யோசிக்கத் தயாராக இருக்கவில்லை. தனது தாக்குதல் திட்டத்தை அமுல்படுத்துவதிலேயே குறியாக இருந்தார்.

யாழ்குடாநாட்டின் மீதான தாக்குதல் குறித்து, கடந்த காலத்தின்போது இரு விடயங்களே அரசியல் இராணுவ வட்டாரங்களில் கருத்தில் கொள்ளப்பட்டிருந்தது. ஒன்று, நகர்ப்புறக் கெரில்லாப் போர்முறையில் உலகிலேயே சிறப்பான முறையில் போரிடக்கூடிய விடுதலைப்புலிகளினால் இராணுவத்தினருக்கு ஏற்படக்கூடிய உயிர், தளபாட இழப்புக்கள் பற்றியது. இது குறித்து லெப்.ஜெனரல் கொப்பேகடுவ காலத்திலேயே பெரியளவில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

மற்றயது, மிகவும் குடியடர்த்தி மிக்க குடாநாட்டின்மீது குறிப்பாக யாழ் நகர் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதலினால் மக்களுக்கு ஏற்படப்போகும் உயிரிழப்புக்கள் குறித்ததாகும். இவ்விரு விடயங்களும்

தொடர்ச்சி : 14 ஆம் பக்கம் பார்க்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**சத்துருக்கொண்டான் இராணுவ முகாமில் படையினர் மேற்கொண்ட கொடூர மனிதப்படுகொலைச் சம்பவம் குறித்த விசாரணையில் சாட்சிகள் வெளியிட்ட அதிர்ச்சித் தகவல்கள்**

# சத்துருக்கொண்டான் படுகொலை

'மட்டக்களப்பு சத்தருக்கொண்டான் பனிச்சையடி, கொக்குவில், பிள்ளையாரடி ஆகிய பகுதிகளில் 10-09-90 இல் விசாரணைக்கென இராணுவ முகாமிற்கு அழைத்துச்சென்று கூரிய கத்திகளால் குத்தினர். விசாரணைக்கென கொண்டுசெல்லப்பட்ட 185 பேரில் நான் மட்டுமே காயங்களுடன் தப்பிவந்தேன். ஒன்றரை வயதுக் குழந்தையுட்பட, சிறுவர், பெண்கள் இதிலடங்குவர்'

இவ்வாறு, மட்டக்களப்பு கொக்குவிலைச் சேர்ந்த கந்தசாமி கிருஸ்ணகுமார் (வயது 27), காணமற்போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு முன் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார். ஓய்வுபெற்ற நீதியரசர் கேபால கிட்ணர் தலைமையில் விசாரணைகள் நடைபெற்றன. தொடர்ந்து சாட்சியமளித்த அவர், சம்பவதினம் மாலை ஐந்தரை மணியளவில் சீருடையிலும், சிவிலுடையிலும் வந்த இராணுவத்தினர், முகாம் பொறுப்பதிகாரி அனைவரையும் விசாரணைக்கு வருமாறு அழைத்துள்ளார் எனக் கூறி எம்மை அழைத்துச் சென்றனர்.

## கைக்குழந்தைகள் கதறக்கதறக் குத்திக் கொல்லப்பட்டனர்.

சிறுவர்கள்- கைக்குழந்தைகள் உட்பட, பெண்கள், வயோதிபர்கள் அனைவரும் அழைத்துச் செல்லப்பட்டனர். சத்துருக் கொண்டான் போயிஸ்டவுண் இராணுவ முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டோம். அதன்பின் எம்மில் நால்வரை முகாமிற்குப் பின்பாக அழைத்துச் சென்று கைகளையும் கண்களையும் கட்டினார்கள். பின் மரக்கட்டையொன்றில் படுக்க வைத்துத் திடீரென கிறீஸ் கத்தியால் மாறி மாறிக் குத்தினார்கள். நான் இறந்ததுபோல் கிடந்துவிட்டேன். ஏனையவர்களுக்கும் குத்துவீழ்ந்தது. குழந்தைகள் அலறும் சத்தம், மரண ஓலங்கள் எனக்குக் கேட்டன.

எல்லாம் ஓய்ந்தபின் கண்திறந்து பார்த்தேன், எங்கும் வெட்டுண்ட சடலங்கள் காணப்பட்டன. நான் சடலங்களூடாகத் தவழ்ந்து சென்று பக்கத்தில் உள்ள பற்றை ஒன்றினுள் படுத்துவிட்டேன். அப்போது நேரம் அதிகாலை மூன்றுமணி. அங்கிருந்து பின்பு வெளியேறி, ஊருக்கு வந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டேன். நான் தப்பிய செய்தியறிந்து இராணுவம் தேடுதல் நடத்தியது. மட்டக்களப்பு சமாதானக் குழுவினர் என்னை வணபிதா மில்லரிடம் ஒப்படைத்தனர். இச்சம்பவத்தில் என்குடும்பம் முழுவதும் அழிந்துவிட்டது. நான் மட்டுமே எஞ்சியுள்ளேன் எனச் சாட்சியமளித்தார்.


## இரவிரவாக முகாமில் அலறல் ஒலிகள் கேட்டன.

கந்தையா சிவக்கொழுந்து (37) சாட்சியமளிக்கையில், "நான் கரையாக்கன் தீவு பாடசாலை அதிபராக இருக்கின்றேன். சம்பவ தினம் பகல் 11 மணியளவில் சிவப்பு அரைக்கை ரீ சேர்ட் அணிந்திருந்த அரைக்காற்சட்டை போட்ட நபரொருவர் சைக்கிளில் சென்றார். சைக்கிள்பிடியில் கத்தியொன்று இருந்தது.

அவர் ஊருக்குப் புதியவர். நிலைமை சரியில்லையென உணர்ந்த நான் மனைவி பிள்ளைகளுடன் சைக்கிளில் சத்துருக்கொண்டான் கொலனிக்குச் சென்றேன். அப்போது வீதிவழியாக சீருடையணிந்த இராணுவத்தினரும், சிவிலுடை தரித்திருந்தோரும் பல பொதுமக்களை அழைத்து வருவதைக் கண்டேன். நகருக்குச் செல்ல இருந்த நாம், இராணுவத்தைக் கண்டதும் கொலனியிலுள்ள எமது வீட்டிற்குச்சென்று யன்னலூடாகப் பார்த்தோம். வயோதிபர்கள், பெண்கள், சிறுவர்கள் அடங்கிய மக்கள் கூட்டம் சென்றுகொண்டிருந்தது. சம்பவ தினம் இரவு கொலனியிலேயே தங்கிவிட்டோம். எனது வீட்டிற்கு ஆயிரம் மீற்றர் தொலைவில் இராணுவம் இருந்தது.

இங்கிருந்து இரவிரவாகப் பெரியவர்கள், சிறியவர்கள், பெண்கள் அலறும் சத்தம் கேட்டது. துப்பாக்கி வேட்டுக்களும் கேட்டன. நெருப்பு எரியும் ஒளிப்பிழம்பும் தெரிந்தது.

காலையில் என் மாமாவீட்டுக்குச் சென்று பார்த்தேன் அங்கு மாமா, மாமி, மச்சான், மச்சாள், பிள்ளைகள் எவரையும் காணவில்லை. சிறிய செருப்புகள் மட்டுமே கிடந்தன. இச்சம்பவத்தில் ஒன்றரை வயதான சுபோசினி, மூன்றுவயதான துளசி, 7வயதான சுலோசனா ஆகிய என் மருமக்களும் காணாமற் போய்விட்டனர்.



இவர்கள் அனைவரும் இராணுவ முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்டு வெட்டிக் கொல்லப்பட்டதாக அறிந்தேன். சடலங்களும் எரிக்கப்பட்டுவிட்டன. மாடு மேய்க்கச் சென்ற சிறுவர்கள் சத்துருக்கொண்டான், இராணுவ முகாமின் பின்பக்கமாக மண்டையோடுகள் காணப்பட்டதாக வந்து கூறினர்" என விளக்கினார்.

> சிறுவர்கள்— கைக்குழந்தைகள் உட்பட, பெண்கள், வயோதிபர்கள் அனைவரும் அழைத்துச் செல்லப்பட்டனர். சத்துருக்கொண்டான் போயிஸ்டவுண் இராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். அதன்பின் எம்மில் நால்வரை முகாமிற்குப் பின்பாக அழைத்துச் சென்று கைகளையும் கண்களையும் கட்டினார்கள். பின் மரக்கட்டையொன்றில் படுக்கவைத்துத் திடீரென கிறிஸ் கத்தியால் மாறி மாறிக் குத்தினார்கள்.

வைரமுத்து அரியவடிவேல்(22) என்பவர் சாட்சியமளிக்கையில், "நான் அச்சம் காரணமாக அன்று காட்டினுள் சென்று ஒளித்துவிட்டேன். சிறுபிள்ளைகளை இராணுவம் ஒன்றும் செய்யாது என எண்ணி, என் சகோதரர்களான சோதிவடிவேல்(7), சர்மிளா(9) ஆகியோரை வீட்டில்விட்டுச் சென்றேன். அவர்களும் பின்னர் காணாமற் போய்விட்டனர். அன்று இராணுவ முகாம் பக்கம் அலறல்களும் அழுகைகளும் கேட்டன. இடையிடையே துப்பாக்கிச் சூடுகளும் கேட்டன" எனக்கூறினார்.

## என்முழுக் குடும்பத்தையும் இழந்து நிற்கிறேன்

"சத்துருக்கொண்டான் சம்பவத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்புதான் என் இரு மருமகன்களும் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர். அதன்பின் சத்துருக்கொண்டான் சம்பவத்தில் என்மனைவி, மூன்று பெண்பிள்ளைகள், ஒரு வயதுப் பேரன் உட்பட, ஏழு பேரப்பிள்ளைகள் என மொத்தம் 11பேரை இராணுவம் கூட்டிச்சென்று கொன்றுவிட்டது" என கணபதிப்பிள்ளை அருணாசலம் (73) என்ற வயோதிபர் கண்ணீர் மல்கச் சாட்சியமளித்தார்.

## அலறல் சத்தம் சகிக்காது பீதியால் திரும்பினோம்

ஓய்வு பெற்ற மின் அத்தியட்சகர் ஒகஸ்டீன்பிள்ளை பிலிப்பிள்ளை (73) சாட்சியமளிக்கையில், "எங்களுடன் எமது பேரப்பிள்ளை விஜயகுமார் (8) இருந்தார். சம்பவ தினம் மாலை அவன் வெளியில் விளையாடச் சென்றிருந்தான். விளையாடச் சென்ற பிள்ளையைக் காணவில்லையே என வெளியில் சென்று பார்த்தபோது, இராணுவம் பல பொதுமக்களை அழைத்துச்செல்வதைப் பார்த்தேன். அதில் எனது பேரப்பிள்ளையும் போய்க்கொண்டிருந்தான். நிலைமையை உணர்ந்த நானும் மனைவியும் ஒளித்துவிட்டோம்" எனக் கூறினார்.

நீதிபதி-எத்தனை பேரை அப்போது இராணுவம் கொண்டு சென்றது?

சாட்சி-எனது உறவினர்களில் மட்டும் 19 பேர் அதில் அடங்கியிருந்தனர். முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டவர்கள் திரும்பி வராமையால் நானும் மனைவியும் இன்னுமொரு பெண்ணுமாக இராணுவ முகாமிற்கு அண்மையிற் போய்ப்பார்த்தோம். அப்போது இரவு ஏழு மணியிருக்கும். இராணுவ முகாமிற்குள் பெண்கள், குழந்தைகள் அலறும் சத்தம் கேட்டது. அந்த அவலக் குரல்களை எம்மால் மேலும் கேட்க முடியவில்லை. பயத்தினால் நாம் திரும்பிவிட்டோம்.

நீதிபதி- சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உடனடியாகச் சென்று பார்த்ததா?

சாட்சி- பார்ப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை எனக் கூறப்பட்டது. பின்னர் ஆயர், இராணுவ பிரிகேடியருடன் கதைத்து பிரஜைகள் குழுவைச் சேர்ந்த செபமாலை ஜீவரட்ணம், சிங்கராசா ஆகியோர் முகாம் சென்று பார்த்தனர். அங்கு சிவராசா தன் மனைவியின் செருப்பைக் கண்டதாகக் கூறினார். சிறுவர்களினதும், குழந்தைகளினதும் செருப்புக்கள் கிடந்ததாகவும் அவர் கூறினார்.

மட்டக்களப்பு கொக்குவிலைச் சேர்ந்த கந்தசாமி நாகரட்ணம் (39) சாட்சியமளிக்கையில்,

"எனது குடும்பத்திலுள்ள 16 பேர் இராணுவத்தினரால் கொண்டு செல்லப்பட்டனர். சம்பவதினம் இராணுவம் வந்தபோது பெண்களும் குழந்தைகளும் மட்டுமே வீட்டில் இருந்தனர். ஆண்கள் காட்டில் ஒளித்துவிட்டனர். மாலை 530 மணியளவில் இராணுவம் வந்து வீட்டிலிருந்த

தொடர்ச்சி : 14 ஆம் பக்கம் பார்க்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இந்தியா போட முனையும் புதிய முடிச்சு

இனப்பிரச்சினை தொடர்பாக, இந்திய அரசின் இன்றைய நிலைப்பாடானது, தலைவர் பிரபாகரன், பொட்டு அம்மான், அகிலா ஆகியோருடன் தொடர்புபடுத்தப்பட்ட தொன்றாக வெளிக்காட்டப்பட்டுள்ளதெனலாம். ராஜீவ் காந்தியின் கொலையுடன் இவர்களைச் சம்பந்தப்படுத்தி, தம்மிடம் ஒப்படைக்குமாறு கோரும் இந்தியாவின் அணுகு முறையானது நடைமுறையில் சாத்திய மற்றதொன்றென்பது வெளிப்படையானதே. இது ஒரு பத்திரிகையுடன் மட்டுப்படுத்தப்பட்ட விடையமேயாயினும், இது தொடர்பாகச் சந்திரிகா அரசாங்கம் எடுக்கும் தீர்மானமானது இலங்கை அரசியலில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை விளைவிப்பதாக இருக்கும் என்பதில் ஐயம் எதுவும் இல்லை.

இக் கோரிக்கையானது, இலங்கையின் அரசியல் எதிர்காலத்தைத் தெட்டத்தெளிவாக, சில வரைமுறைகளுக்குள் கொண்டு வரும் இந்தியாவின் ஒரு முயற்சி என்றே கூறலாம். இது இலங்கை அரசியல் வரலாற்றில் மிகவும் முக்கியம் வாய்ந்ததும், இலங்கையின் எதிர்கால அரசியல் போக்கைத் தீர்மானிக்கக் கூடியதுமாகும்.



வெளியேறிய பின்னர், அதாவது இலங்கை விவகாரத்தில் ஏற்பட்ட இராஜ தந்திர, இராணுவ ரீதியான தோல்வியின் பின் இலங்கை விவகாரத்தில் குறிப்பாக இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா வெளியேறலாம் என வரும் மிரட்டல்கள் மறுபுறமும் என, உட்கட்சிப் பூசலிலேயே ராவ் மூழ்கிப் போகவேண்டிய நிலையுள்ளது.

மேலும் அண்மையில் நடந்து முடிந்த மாநில சட்டசபைகளில் பெரும் தோல்வியைச் சந்தித்த நிலையில், அடுத்த வருடத்தின் ஆரம்பத்தில் பொதுத் தேர்தலைச் சந்திக்க வேண்டிய நிலை உள்ளது.

இதற்கு அப்பால், இலங்கைக்கு இராணுவத்தை அனுப்புவது தொடர்பாகக் குறிப்பிடத்தக்க அளவில் எதிர்ப்பும் விருப்பின்மையும் பரவலாகவே உள்ளது. ஏற்கனவே இலங்கை விடயத்தில் ஏற்பட்ட, 'பட்டது போதும்' என்ற நிலையே இதற்குக் காரணம் ஆகும்.

இந்நிலையில் தான், நேரடியான இராணுவத் தலையீடு அற்ற நிலையிலும் கூட, இந்தியாவின் விருப்பிற்கு மாறானதொரு போக்கையும் சிறீலங்கா அரசானது மேற்கொள்ள முடியாததொரு நிலையொன்றை உருவாக்க இந்தியா முனைந்துள்ளது எனலாம். இதற்குச் சந்திரிகா அரசாங்கத்தின் இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வுதான் வழி என்ற நிலைப்பாடு வெகுவாக உதவியுள்ளது எனலாம்.

விடயமானது, தமக்கு வழங்கப்படும் ஒத்துழைப்பாகவே நோக்குமானால், அது சந்திரிகாவின் அரசியல் கற்றுக்குட்டித்தனம் என்றே கொள்ள வேண்டும்.

அத்தோடு, இனப்பிரச்சினைக்குத் தனித்தோ அன்றி சில வெளிநாடுகளின் உதவியுடனோ இராணுவத் தீர்வு கண்டு விடலாம் என எண்ணுவதும் அவரது அறியாமையாகவே இருக்க முடியும். ஆனால், இந்தியாவின் கோரிக்கைக்கு ஒரு சாதகமான பதிலைச் சந்திரிகா அரசாங்கம் அளிக்க முனையுமானால், இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு கண்டு விடலாம் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே அது இருக்கும்.



ஆனால், இனப்பிரச்சினைகளுக்கு இராணுவத்தீர்வு சாத்தியமாகாது என்பது வரலாறு தந்துள்ள பாடமாகும். இந்த நிலையில் சிறீலங்கா அரசானது இந்தியாவின் கோரிக்கைக்குச் சாதகமான பதில் அளிப்பதென்பது, வெல்ல முடியாத போர் ஒன்றைத் தொடர்ந்து நடத்துவதற்கு ஒப்புக்கொள்ளுதல் போன்றதே ஆகும்

அதாவது சிறீலங்கா அரச மேற்கொள்ளும் இத் தீர்மானமானது, சமாதானக் கதவுகளை முற்றுமுழுதாக மூடுவதா அன்றி சமாதானக் கதவுகளைத் திறந்து வைத்திருப்பதா என்பதைத் தீர்மானிக்கும். இந்தியாவின் கோரிக்கைக்கு ஏற்ப சிறீலங்கா அரசு தீர்மானங்களை மேற்கொள்ளுமானால், அது சமாதானக் கதவுகளை நிரந்தரமாக மூடுவதாகவே

# சிறீலங்காவின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் !

சிறீலங்காவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும், ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.சி.எஸ். கமீத் கூறியிருப்பது போன்று, இந்தியாவின் இக் கோரிக்கையானது நியாயமற்றது என்பதுடன், இது இனப்பிரச்சினையைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகளை முற்றாகப் பாதிக்கும் என்பதும் சரியான மதிப்பீடே ஆகும்.

ஏனெனில் இவ் விவகாரமானது, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது இந்தியா தடைவிதித்தது போன்றதல்ல. இந்தியாவில் விடுதலைப் புலிகளுக்குத் தடை என்பது தனித்துவமாக இந்தியாவுடன் சம்பந்தப்பட்ட விடையமேயாகும்.

**ஏனெனில் சிறீலங்கா அரசானது இந்தியாவின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளுமானால், இன ப்பிரச்சனை தொடர்பாகச் சமாதானத் தீர்வொன்றை எதிர்காலத்திலும் எடுக்கக்கூடிய இறைமை கொண்ட தாக இருக்கமாட்டாது. சிறீலங்காவால் இந்தியாவின் ஆசிர்வாதம் இன்றி எதுவும் மேற்கொள்ள முடியாத நிலை உருவாகும்.**

ஆனால் தற்போதைய இந்தியாவின் கோரிக்கையானது பத்திரிகையுடன் மட்டுப்படுத்தப்பட்டதாயினும், சிறீலங்கா, இந்தியா ஆகிய இரு அரசுகளுக்கும் இடைப்பட்ட விடையமாகும் இதனால் தற்பொழுது இது தொடர்பாக எடுக்கப்படும் முடிவானது, எதிர்கால அரசியலையும் வெகுவாகவே பாதிக்கக்கூடியதாகும்.

மேலும், விடுதலைப் புலிகள் இயக்கத்தை இந்தியா தடை செய்த போதும் சிறீலங்காவால் தடை விதிக்கப்படவில்லை. இதற்குக் காரணம், சிறீலங்கா அரசால் தடை விதிக்கப்படும் பட்சத்தில் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் பாதிக்கப்படும் என்பதனாலேயே ஆகும்.

ஆனால், தற்பொழுது இந்தியாவின் கோரிக்கையானது ஒரு வகையில் சிறீலங்கா அரசாங்கம் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தேவையேற்படும் பட்சத்தில் மேற்கொள்ளக்கூடிய தொடர்புகளையே கட்டுப்படுத்தக்கூடியதுமாகும். இது ஒரு வகையில் இலங்கைக்குள்ளேயே சிறீலங்கா அரசின் நடவடிக்கைகளுக்கு இந்தியா விதிக்கும் வரையறைகளென்றே கொள்ளலாம்.

இந்திய இராணுவம், 1990 இல் இலங்கையை விட்டு

அதாவது சமாதானப் பேச்சுவார்த்தை கள் முறிவடைந்ததைத் தொடர்ந்து, சந்திரிகா அரசாங்கமானது இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என்ற ரீதியில் முனைப்பாக செயற்படத் தொடங்கியது. இந்தியா உட்பட பல நாடுகளிடமும் இராணுவ உதவி கோரியது. இக் கோரிக்கையை இந்தியா வெகு சாமர்த்தியமாகப் பயன்படுத்த எண்ணியுள்ளது என்றே சொல்லலாம்.

சந்திரிகா அரசாங்கம் ஆட்சிக்கு வந்த போது இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு எனக் கூறிக்கொண்டு, விடுதலைப் புலிகளுடன் பேச்சவார்த்தை நடத்த முனைந்ததை இந்தியா பெரிதாக விரும்பியதாகவில்லை. ஆயினும், சந்திரிகா அரசாங்கம் மக்களிடம் பெற்றுக் கொண்ட ஆணை என்ற அடிப்படையிலும்- பேச்சுவார்த்தையை ஒரு கட்டத்திற்கு அப்பால் சந்திரிகா குமாரதுங்காவால் நகர்த்திச் செல்ல முடியாது என்பதையும் இந்தியா அறிந்திருந்தது எனலாம்.

இந்நிலையில்தான், தற்பொழுது பேச்சுவார்த்தை முறிந்து சிறீலங்கா அரச இராணுவத் தீர்வே ஒரே வழி என்று கூறிக்கொண்டு இருக்கையில் - அதாவது உதவி கோருகையில் தனது குறிக்கோளை இந்தியா நிறைவேற்றிக் கொள்ள முனைகிறது. இந்தியாவின் இக் கோரிக்கையானது, இராணுவ ரீதியிலோ, அன்றி அரசியல், இராஜ தந்திர ரீதியிலோ சிறீலங்காவைத் தனது பிடிக்குள் என்றுமே வைத்துக்கொள்ளும் நோக்கம் கொண்டதாகும்.

ஆனால் இக் கோரிக்கையானது சந்திரிகா அரசால் ஏற்றுக் கொள்ளப்படுமானால், அது இலங்கை அரசியல் வரலாற்றில் சந்திரிகா அரசானது இழைத்துள்ள மாபெரும் தவறாகவே இருக்கும் என்பது நிச்சயம்.

சந்திரிகா அரசைப் பொறுத்து விடுதலைப் புலிகளுக்கு எதிராக இந்தியா மேற்கொள்ளும் நடவடிக்கையானது, இன்றைய நிலையில் அத்தியாவசிய தேவையானதாகக் கூட இருக்கலாம், ஆனால் இந்தியா கோரும்

இருக்கும் என்பது நிச்சயம். அத்தோடு இவ்வாறு சமாதானக் கதவுகள் மூடப்படுமானால், சிறீலங்கா அரசால் அது என்றுமே திறக்கப்பட முடியாததொன்றாகவே இருக்கும் என்பதும் உறுதி. இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு ஒன்று எப்பொழுதுமே சாத்தியப்படாத ஒன்றாகத் தொலைத் தூரத்திற்கு விரட்டப்பட்டுவிடும்.
ஏனெனில் சிறீலங்கா அரசானது இந்தியாவின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளுமானால், இனப்பிரச்சினை தொடர்பாகச் சமாதானத் தீர்வொன்றை எதிர்காலத்திலும் எடுக்க க்கூடிய இறைமை கொண்ட தாக இருக்கமாட்டாது. சிறீலங்காவால் இந்தியா வின் ஆசீர்வாதம் இன்றி எதுவும் மேற்கொள்ள முடியாத நிலை உரு வாகும்.
இந்நிலையில் இன்று சனாதிபதி சந்திரிகா அரசின் முன்னுள்ள பிரச்சினை, இந்தியாவின் கோரிக்கைக்கு இணங்கி இனப்பிரச்சி னையின் எதிர்காலத்தை முற்றுமுழுதாக இந்தியாவுடன் சம்பந்தப்பட்ட விவகாரமாக விட்டுவிடுவதா! அன்றி சிறீலங்கா அரச இறைமையுள்ள அரசாகச் செயற்படக்கூடியதாக இனப்பிரச்சினையைக் கையாள்வதா என்பதே ஆகும்.
ஆனால் சிறீலங்கா அரசைப் பொறுத்து இக்கோரிக்கையானது, ஒருவகையில் வரவேற்கத்தக்க தொன்றாய்க்கூட இருக்கலாம். சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்சுமன் கதிர்காமரின் பேச்சு இதனை உறுதிப்படுத்துமாப் போன்றும் உள்ளது. அண்மையில் செய்தியாளரைச் சந்தித்துப் பேசிய கதிர்காமர், இந்தியாமௌனமான போக்கு ஒன்றையே கடைப்பிடித்து வந்தது. ஆனால், இனப்பிரச்சினை விவகாரத்தை முற்றுமுழுதாகக் கைவிட்டதாக இல்லை. ஒரு வகையில் சந்தர்ப்பம் ஒன்றை எதிர்பார்த்துக் காத்திருந்தது என்றே கொள்ளலாம்.

**ஜெயராஜ்**

இச் சந்தர்ப்பமானது இன்று இலங்கையில் காணப்படுவதாக இந்தியா கருதுவதே, தற்பொழுது தலைவர் பிரபாகரன் தொடப்பாக விடுக்கப்பட்ட கோரிக்கை ஆகும். நடைமுறை ரீதியில் சாத்தியமற்றதொன்று எனத் தெளிவாகத் தெரிந்திருந்த போதும், இந்தியா விடுத்துள்ள இக்கோரிக்கையானது, நிச்சயமாக சிறீலங்கா அரசின் போக்கைத் தீர்மானிப்பதற்கான ஒரு கடிவாளம் போன்றதாகும்.

இன்று சர்வதேச ரீதியில் காணப்படும் அரசியல் சூழ்நிலையும் இந்தியாவில் காணப்படும் உள்நாட்டு

தொடர்ச்சி : 14 ஆம் பக்கம் பார்க்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "வாள்" ஏந்திய சிங்கம்



அப்பனும் ஆச்சியும் கற்றுக் கொடுத்த அரசியல் இனவெறிக்கும்
பெற்றவரின் உதிரத்திற் பாய்ந்த இனவெறிக்கும்
உருவங் கொடுக்கவா, ஆட்சிபீடமேறினாய்!
வேட்டை நாய்களுடன் விமானமேறினாய்!
காட்டு பிராண்டிகளுடன் கப்பலேறினாய்

ஆயுதமேந்திய தமிழர் படையை எதிர்க்கத் திராணியற்ற நீயும்,
உனது கைக்கூலிகளும், அப்பாவிப் பொதுமக்களையல்லவா, குரூரமான முறையிற் குத்திக் கிழித்துக் கொண்டிருக்கிறீர்கள். எரிகுண்டுகளை வீசி, எரித்துக் கொண்டிருக்கிறீர்கள்


'முன்னோக்கிப் பாய்தல்' என்ற தலைப்பில் நீ முடுக்கி விட்ட பயங்கரவாத நடவடிக்கைக்குப் பக்கபலமாக நிற்கும் பாதகர்களை, இந்த உலகம் இனங்கண்டு கொள்ளாமற் போகாது!
உனக்கு ஆயுத எலும்புகளை எறிந்து அங்கலாய்க்கும் ஹிட்லர்களை, மனித சமுதாயம் மறந்து விடமாட்டாது!

உனது அரக்கப் படை சுற்றி நின்று, நமது மண்ணையும் மக்களையும் ஏனைய உலகத்தின் விழிகளிலிருந்து மறைத்து விடலாமெனக் கனவு கொண்டிருக்கிறது.
உலக ஊடகங்களை உட்புகாத வண்ணம் தடை செய்ய விடாமுயற்சி செய்தீர்கள்.
ஒன்றைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளுங்கள்

**வியட்நாம் விழவில்லை!**
**தென்னாபிரிக்கா திசை மாறவில்லை!**
**பாலஸ்தீனம் பகற்கனவாகவில்லை!**
**வட அயர்லாந்து வாய் மூடவில்லை!**

அதிகாரத்தினால், விடுதலைத் தீபங்களை மண்ணிலிருந்து வீழ்த்தி விடமுடியாது!
அடக்கு முறையினால், மான உணர்வுகளை, மண்ணிலிருந்து அகற்றிவிட முடியாது!
இந்த வரலாற்று வரிகளை, நீங்கள் புரிந்து கொள்ளாமலிருக்கலாம் நாம் நன்றாகப் புரிந்துள்ளோம்!

ஆயிரக்கணக்கில் எமது மக்களைக் குருதி வெள்ளத்தில் மிதக்க வைத்து, அகதிகளாக ஓடவைத்து, பசி பட்டினியில், நோய்நொடியிற் துடிக்க வைத்து விடுவதன் மூலம், எமது போராட்டத்தின் ஆணி வேரினை அதிர வைத்து விடலாமென்று, நீங்கள்



எக்காளமிடுவது எமக்குக் கேட்காமலில்லை!
ஓநாய்களின் ஓட்டு மொத்தமே!

தென்னாபிரிக்காவில், நெல்சன் மண்டேலா நிமிர்ந்து நிற்பதைப்பாருங்கள்.

அங்கே சிதறுண்டு போன சடலங்களையும், கட்டுப்பட்டு வெட்டுப்பட்டு வெந்து போன விடுதலைத் தியாகிகளையும், நெல்சன் மண்டேலாவின் நெஞ்சம் சுமந்து நிற்பதைப் பாருங்கள்!

வெள்ளை வெறியரின் சிறைகளுக்குள்ளும், விசாரணைக் கூடங்களுக்குள்ளும், இரத்தம் கொப்பளிக்கக் கதறித்துடித்த கறுப்புத் தோழர்களின் விழிகளில், அவர்கள் கண்ட காட்சிகள், இதோ, இன்று நிஜமாகி விட்டன!

அரபாத்தின் மரணக்குழி, எத்தனை தடவை தோண்டப் பட்டது!
அந்த மனிதர் இன்னும் அசையவில்லை!

எங்கள் தலைவன் பிரபாகரனைச்
சிறைப்பிடிக்க வேண்டுமென்ற வெறி, உனது பக்கத்துவீட்டுப் பச்சோந்திகளுக்கும் இருக்கிறது!

**பிரபாகரன் ஒரு தனிமனிதனல்ல!**
**அவன் ஒரு தத்துவம்!**
**அவன் ஒரு தார்மீகம்!**
**அவன் ஒரு சிந்தனை!**
**அவன் நித்தியமானவன்!**
**சத்தியத்தின் பிரதிநிதி!**

**புலவர் சிவநாதன்**

அவனைத் தேடி அலைகின்றீர்களே!
அவன் தன்மானமுள்ள உலகத் தமிழரின் உள்ளத்திலல்லவா கொலுவீற்றிருக்கிறான்!
அவனைச் சிறைப்பிடிக்க வேண்டுமானால், உலகத்தமிழரின் உள்ளத்தைத் தேடிப்போங்கள்!
அந்த உள்ளத்தைக் கண்டு கொண்டால், நீங்கள் பிரபாகரனைச் சிறைப்பிடிக்கமாட்டீர்கள்!
அந்தச் சிம்மத்தின் காலடிகளில் வீழுவீர்கள்!
அந்த வேங்கையின் விழிகளில் மூழ்குவீர்கள்!

எமது மக்களின் கண்ணீரின் கூர்மைக்கு அர்த்தம் தெரிந்து கொள்வீர்கள்!

எமது வரலாற்றின் பெருமைக்குப் பொருள் புரிந்து கொள்வீர்கள்!

போராட்டம் என்னும் பெயரில், செல் குண்டுகளைப் பொழிந்து, பேயாட்டம் ஆடுகின்றீர்களே!
எமது மக்களின் நெஞ்சில் தீப்புண்களை ஏற்படுத்தி விட்டீர்கள்!
எமது மக்களின் தர்ம நம்பிக்கை, அக்கினிப் பிளம்பாக எழுந்து திரும்பும்.
பேச்சுவார்த்தை, பேச்சுவார்த்தை என்கிறீர்களே!, இனியும் அது எம்மைப்பற்றியதாக இருக்காது!
சிங்களவரின் பாதுகாப்பைப்பற்றியதாகவேயிருக்கும்!
எமது விடுதலைக் கிரணங்கள் வீசத் தொடங்கிவிட்டன!
எமது துறைமுகங்களில், எமது மக்களின் தேவைகள் கரையேறத் தொடங்கிவிட்டன.

நமது நாடு தெளிவாக விடிந்துகொண்டிருக்கிறது.
நீங்கள் புறங்காட்டி ஓடிக்கொண்டிருப்பது தெரிகிறது.

**எமது புலிக்கொடி எழுவதைப் பார்ப்பாயாக!**
**உலகத் தமிழர்கள் உயர்வதைப் பார்ப்பாயாக!**
**தமிழீழம் முரசொலிப்பதைக் கேட்பாயாக!**

'முன்னோக்கிய பாய்ச்சலில்' அரச பயங்கரவாதம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உரிமைக் கடன்

என்ன பாவமிப் பிஞ்சுகள் செய்தனர்—!
ஏன் உலர்ந்தனர்—! ஈட்டிமேல் வாடினர்—!
சன்னமாடிச் சுதந்திரம் உண்ணுமுன்—
தந்தைதாய் முகமுத்தமும் 'பட்டனர்'
மன்னராய்—இவர் ஆண்டமண் பேய்களின்
மாடமாய், வசந்தம் இடம் பேர்ந்ததால்—
கண்சுடும் பசிக் 'கற்சிறை' முட்டினர்!
கன்றுகள்—கசம், கான்சரிற் கெட்டனர்!

சோறிலை, சத்துச் சூரணம் இங்கிலை—
'சூலநோய்' அறுத்தாழவும் ஆளிலை—
பீறு குண்டுகள் துங்குமோ—! தோணலை!
பீடெழுங் கனற் பேரிகை ஓயலை!
'நீறிடோம்' என நம்பி— நாம்— சாவிலும்
நிச்சயம் புது உச்சமே நாட்டுவோம்!
'வீறு மாறிடோம்' ! ஆயினும்— 'மண்மகர்'
வீழல்— மாற்றனும் வேள்வியிற் பூத்துளோம்!

முட்டை ஓட்டை உடைத்துமே மூச்சினால்
முற்றந்தன்னை—முகரு மெங் குஞ்செலாம்
திட்டமிட்ட தடைக் கொலை—வாளிடை
தீய்தலோ விதி! தர்மமோ! 'மேற்கெலாம்'
'பட்டமேற்றிப்' படரும் எம் தோழரே—
பாரும், வாழ நீர் போயினீர்— போரிலே,
சுட்ட புண்களாய்ப் பிஞ்செலாம் வேகையில்
'சொப்பனச் சுகம்—துசெலோ! சிந்தியும்,

தாங்கள் ஈன்றதைத் திக்கெலாம் விற்றவர்,
'தாகமே தமிழ்'—தம்பட்டம் தட்டல் போல்—
ஓங்கி—மேற்கராய் மாறி, வாய் வீச்சிலே—
'ஓதல்'—போதுமோ! 'உள்ள'—ஊற்றோய்வதோ—!
துங்கலாகுமோ துணைப் 'பொங்கிய—
தூயநெஞ்ச'— போர் செய்து மெம் பிள்ளையை,
ஈங்கு காக்குதே—எண்ணும்! 'மெய்' கூட்டிடும்!
'இரத்த பாசமே' கைகொடும்!
உய்யலாம்!

-த. ஜெயசீலன்



இடிந்த வீடும் உடைந்த உள்ளமும்



எத்தனைநாள்தான் ஓடுவோம்!



குண்டுகளால் சேதமாக்கப்பட்ட நவாலி சென். பீற்றஸ் தேவாலயம்

மடிந்த மழலையருள் சிலர்





www.tamilarangam.net



# தமிழ் மக்களுக்கு எதிரான போர்....

மகஜரில் கூறியுள்ளது.

'1992இல் முன்னைய அரசால் நடாத்தப்பட்ட, முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வற்றாப்பளை அம்மன் கோவிலில் கூடியிருந்த 49 பொதுமக்களை இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதல்மூலம் கொன்றழித்த சாதனையை நவாலி தேவாலயத்தில் நடத்திய தாக்குதல் முறியடித்துவிட்டது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

மானிப்பாய் வைத்தியசாலையைத் தாக்கி அதில் கடமையாற்றிய இருதாதிமார் காயமடைந்ததினால் அந்த வைத்தியசாலையும் ஆடி 9ஆம் நாள் மூடப்பட்டது. முன்னைய அரசும் இதேபோல் 1990 ஆவணியில் இருதடவைகள் இவ் வைத்தியசாலையைத் தாக்கி சேதப்படுத்தினர்.

முன்னோக்கிப் பாய்ச்சலில் 300க்கு மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் யாழ். வைத்தியசாலையில் போதிய வைத்தியர்கள், மருந்து வசதிகள் இல்லாததினால் மேலும் பலர் உயிரிழக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் தொடர்கின்றன. சிறீலங்காப் படைகளின் எறிகணைத் தாக்குதல்கள் தொடர்வதால் மேலும் ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்துள்ளனர். எனவே இந்தப் போர் தமிழ் மக்களுக்கு எதிரானது மட்டுமல்ல. இது தமிழீழ— முன்னைய அரசும் தாங்களும் —என்பதே உண்மை.

ஆட்சிப்பொறுப்பை ஏற்கும் காலத்திற்கு முன்பு 'தமிழர்களின் நியாயமான உரிமைகளை வழங்கி அரச படைகளை வடக்கு-கிழக்குப் பகுதிகளிலிருந்து கௌரவமாக விலக்கப்பட வேண்டும் என்று கூறிய நீங்கள், அப்பணியை நிறைவேற்றுவதற்காக மக்களிடம் இருந்து பெரும் வாக்குகளைப் பெற்று அதிகாரத்துக்கு வந்தீர்கள்.

ஆயினும், இதுவரை தமிழ்மக்களின் நியாயமான உரிமை-களை வழங்குவதற்கு எள்ளளவு நடவடிக்கையையேனும் எடுக்கவில்லை. எந்தவித உருப்படியான ஆலோசனைகளைக் கூட வழங்கவில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஆகக்குறைந்த பட்சம் தமிழ் பொதுமக்கள் மீதான தாக்குதலையாவது நிறுத்தவேண்டும்' என அவ் அறிக்கை கோரியுள்ளது.

## தரை - கடல் - வான்..

எடித்தரா கடற்படை அதிகாரியும் மற்றும் மூவரும் கப்பலுடன் மூழ்கிவிட்டதாகவும் 10 கடற் படையினர் கடுங்காயமடைந்ததாகவும் அச்செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. குண்டு வைத்துத் தகர்த்தக்கட்ட கப்பல் மூழ்கும் போது, அதிலிருந்த பெருந் தொகையான ஆயுத தளபாடங்களை விடுதலைப்புலிகள் எடுத்து ச்சென்றுள்ளனர். தமிழீழ கடற் புலிகளின் உருவாக்கலின் பின் நடைபெற்ற வெற்றிகரமான தாக்குதல்களுக்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல், இது பெருந்தாக்குதலாகவும் அமைந்தது.

<u>தலைவர் பிரபாகரன் வழிகாட்டல்</u>

தலைவர் பிரபாகரனின் நேரடி வழிகாட்டலில், சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி வீரர்கள் 500 பேர் அளவெட்டி, சண்டிலிப்பாய், பகுதிகளில் முகாமிட முனைந்த சிறீலங்காப் படைகள் மீது ஊடுருவி நடத்திய உக்கிரதாக்குதலில் சிறீலங்காப் படைகள் சிதறி ஓடியது. நூற்றுக்கணக்கான படையினர் கொல்லப்பட, தற்கா லிக முகாம்கள் அனைத்தும் தரைமட்டமாக்கப்பட்டன. ரி-85 ரக கனரக தாங்கி டாங்கி உட்பட பதினேழு கனரக வாகனங்களைக் கைப்பற்றிய விடுதலைப்புலிகள் 14 வாகனங்களை குண்டுவைத்து தகர்த்துவிட்டு எஞ்சிய மூன்று வாகனங்களையும் எடுத்துச் சென்று விட்டதாகச் செய்திகள் விபரிக்கின்றன.

நிலைதடுமாறிய சிறீலங்கா இராணுவம், அராலி, வட்டுக்கோட்டை, சீரணி, சங்கானை, சண்டிலிப்பாய், அளவெட்டி, மாசியப்பிட்டி, துணவி, தொட்டிலடி ஆகிய பகுதிகளை கைவிட்டு தமது பழைய நிலைகளுக்குள்ளேயே ஓடி முடங்கிக் கொண்டனர்.

இறுதியாக கிடைக்கும் தகவல்களின்படி, யாழ்ப்பாணத்தை முற்றாகப் பிடிப்பதற்கு என பதினாறாயிரம் ஆளணியினருடன் கடல், விமானப்படைகளின் முழுப்பலத்துடன் சிறீலங்கா இராணுவம் எடுத்த 'முன்னோக்கி பாய்ச்சல்' இராணுவ நடவடிக்கை விடுதலைப் புலிகளால் முற்றாக முறியடிக்கப்பட்டுள்ளதுடன், சிறீலங்கா ஆக்கிரமிக்க முனைந்த அனைத்து பகுதிகளும் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டுவிட்டது.

இந்த 'முன்னோக்கி பாய்ச்சலில்' சிறீலங்கா இராணுவம் தமது ஆளணி, தளபாடங்களை பெருமளவில் இழந்து பேரழிவைச் சந்தித்துள்ளது.

# இலட்சியத் தீபங்கள்

1987ஆம் ஆண்டு இந்நாலில்தான் கப்டன் கரும்புலி மில்லர் முதலாவது தாக்குதலை நெல்லியடி மகாவித்தி யாலயத்தில் மீது நடாத்தினார். அதன் பின்னர் தரையிலும் கடலிலும் என கரும்புலிகள் உலகை அதிர்ச்சிக்குள் ஆழ்த்தியதும், சிறீலங்கா ஆயுதப் படையினரை கதிகலங்க வைத்த துமாக பல கரும்புலித் தாக்குதலை நடாத்தி உள்ளனர். தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஓர் வலுவான போர் வடிவமாக மாறியுள்ள கரும்புலிகள் ஒரு சிறுபான்மை இனமாக இனஅழிவை எதிர்கொண்டுள்ள தமிழ்மக்கள் கூட்ட த்தின் காப்பரணாக இன்று உருவாகியுள்ளனர். உலக விடுதலைப் போராட்ட அமைப்புக்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமானது தனித்துவமானது. அதன் வழிமுறை களும் தனித்துவமானவை. இத்தனித்து வம் விடுதலைப் புலிகளின் வீரசாதனைகளுக்கும், உலகம் வியக்கும் அர்ப்பணிப்புக்களுக்கும், இராணுவ வெற்றிகளுக்கும் அடிப்ப டை யாகவுள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பொறுத்து அனைவருமே கரும் புலிகள் போன்றவர்கள்தான். அவர்கள் எவ்வேளையிலும் தமது மண்ணுக்கா கவும், மக்களுக்காகவும் தமது இன்னுயிரை ஈகை செய்யத் தயாராக உள்ளனர். இவ்வாறு பல ஆயிரம் வீரர்கள் தமது இன்னுயிரை ஈகம் செய்துள்ளனர். இந்த வகையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் ஈகத்திற்கு முன் உதாரணமானவர்கள் தான் என்றாலும் கரும்புலிகள் ஈகமானது இவர்களில் இருந்து வேறுபட்டதாகும், குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட இடத்தில் தன் உயிர் இழக்கப்படும் எனும் நிலையிலும் தமது இலட்சியம், குறிக்கோள் என்பனவற்றில் எதுவித தயங்கலுமின்றி உறுதியுடன் செயல் படுபவனே கரும்புலியாவான். ஆனால் இதை சாதாரண மனிதர்கள் எல்லோராலும் செய்துவிட முடியாது. இது அவரின் சிந்தனைக்கு அப்பா ற்பட்டது. இதனைச் செய்வதற்கு மரணத்தை மிஞ்சிய ஆன்மீக பலமும், மனோதிடமும் தேவையாகும். இது மரணத்தை மறந்து தனது குறிக்கோளை அடைய முனையும் ஒரு இலட்சியவாதியின் உன்னத போராட்டமாகும்.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் கரும்புலிகளின் சாதனை கள் மகத்தானது ஆகும். அவர்கள் புரிந்த ஒவ்வொரு தாக்குதலிலும் சிறீலங்காவின் இராணுவ இயந்திரம் ஆட்டம் கண்டது. அரசியல் வரலாறு பாதிப்புக்குள்ளானது. அத்தோடு இது உள்நாட்டு அரசியலை மட்டும் பாதிப்பாக இல்லை. சிறீலங்கா அரசின் வெளியுறவுக் கொள்கைகளையே மாற்றி அமைக்கும் சக்தி வாய்ந்ததாக இருந்தது. இவ்வுன்னத தியாகத்திற் குத் தனியாக ஆண்கள்தான் உரியவர்கள் என்பதல்ல. பெண் கரும்புலிகள் கடற்பரப்பில் மேற்கொ ண்ட மகத்தான தாக்குதல்களை, உலக இராணுவ வரலாற்றில் புறம்தள்ள முடியாத இடத்தைப் பிடித்துக் கொண்டவை. அதேவேளை சிறீலங்கா கடற்படையின் நடவடிக்கைகளை கட்டுப்பா ட்டிற்குள் கொண்டுவர பெரும் பங்காற்றியவையும் ஆகும்.

இப் போராட்டவடிவமானது உலகத்தைப் பொறுத்து தனித் துவமானது மட்டுமன்றி அந்நி யர்களால் புரிந்துகொள்ள முடி யாதவையும் ஆகும். கரும்புலி களின் துணிவும், மனோபலமும் அர்ப்பணிப்பும் அவர்களின் சிந்தனைக்கு அப்பாற்பட்ட வையாகவே உள்ளது. சில ஆய்வாளர்கள் கரும்புலிகளுக்கு இம் மனோபலம் எங்கிருந்து கிடைக்கின்றது எனக் கண்ட றியப் பெரும் ஆவலாய் உள்ளனர். ஆனால் கரும் புலிகளின் இம்மனோபலத்தை அந்நியர் எவராலும் புரிந்து கொள்ளவோ விளங்கிக் கொள்ள வோ முடியாது. ஏனெனில் இது ஒரு இனத்தின் இலட்சியப் பயணத்தின் தூண்டுதலால் உருவானது. இது இம்மண் ணிற்கே உரியது. இது இம் மண்ணின் மைந்தர்களுக்கே உரிய தனித்துவமா னது. இத்தனித்துவமான பேராயுதமே இன்று சிங்களப் பேரினவாதத்திலும் இருந்து தமிழ்மக்களைப் பாதுகாக்க முக்கிய ஆயுதமாக உள்ளது. இந்த நிலையில் தலைவர் பிரபாகரன் அவர்கள், கரும்புலிகள் எமது இனத்தின் தற்காப்புக் கவசங்கள், எமது போராட்டப் பாதையின் தடை நீக்கிகள், எதிரியின் படைபலத்தை மனோபலத்தால் உடைத்தெறியும் நெருப்பு மனிதர்கள் எனக் குறிப் பிட்டமை முற்றிலும் பொருத்தமானது. இவ்வாறாக, கரும்புலிகள் மண்ணிற்கா கவும், மக்களுக்காகவும் தமது சாவையே தமது மடியில் சுமந்து செல்லும் உன்னத புருசர்கள். இவர் கள் அர்ப்பணிப்புக்கள் ஒப்புவமை அற்றது. மரணத்தை வென்ற மாவீரர்கள். வணக்கத்திற்குரியவர்கள். தமிழினம் உள்ளவரை இவர்கள் நாமம் போற்றப்படும்.

## இராணுவத் தாக்குதலாலேயே ...

மக்கள் பாதிக்கப்படுவதை தவிர்க்கும்படி இருதரப்பினரிடமும் கோரப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

தேவாலயங்களுக்குள்ளும் மற்றும் ஆலயங்களுக்கும் கூடும்படி பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்கா தெரிவித்திருந்த பின்னர் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. எனவே அத்தகைய அறிவுறுத்தல் எதுவும் விடுக்கப்பட்டிருந்தது பற்றி என்ன கூறுகிறீர்கள் என பிபிசி முகவர் கேட்டபோது,

அதுபற்றி தெளிவாகத் தெரியவில்லை எனவும், இந்தத் தாக்குதல் திட்டமிட்ட வகையில் நடத்தப்பட்டதா அல்லது தற்செயலானதா என்பது பற்றி தமக்கு எதுவும் தெரியாதெனவும் தெரிவித்தார்.

அத்துடன் இதுதவிர எறிகணை வீச்சுக்களால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என்பது உண்மைதான் எனவும் குறிப்பிட்டார்.

## சனாதிபதி பதவியை நீடிக்க....

வருகின்றார். பிரேமதாசா மேலிருந்த வெறுப்பே சனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்புக்கான கோரிக்கையாக வளர்ந்தது என வும் அவர் நியாயம் கற்பித்தக முயன்று வருகிறார்.

இதற்கிடையே மங்கள முன சிங்காவின் பாராளுமன்ற தெரிவு க்குழுவின் சிபார்சுக்குப் புதிய பெயர் கொடுத்துத் தேசிய இனப்பிரச் சினைக்கான தீர்வாக அதனைக்காட்டி உலகையும், தமிழர்களையும் ஏமாற்றச் சந்திரிகா ஒரு தீர்வுத் திட்டத்தை தயார்செய்து வருவதாக பரவலாகப் பேசப்படு கிறது. இத்தீர்வுத்திட்டத்தை முன்வைத்துவிட்டு பின்னர் தேர்தல் நடாத்தி இதற்கு அங்கீகாரம் கோரப்போகிறேன் என சந்திரிகா சனாபதிப் பதவியில் தொடர்ந்து ஒட்டிக்கொள்வார் என வும் ஊகங்கள் கூறப்படுகின்றன.

இதற்கிடையே சிறீலங்காவின் நீதி அரசியலமைப்பு அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் அரசியல் தீர்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டு விட்டதாகவும் இரண்டு வாரத்துள் அது பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இரண்டில் மூன்று பெரும்பான்மை அங்கீகாரம் பெறப்பட்டு, சர்வசன வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு போர் முடிந்தபின் அமுலுக்கு வரும் எனக் கூறியுள்ளார்.

## காகக்கூடு...

பது போல அவருக்குப்பட்டது. நடுங்கும் கரங்களால் அதனைப் பற்றினார்.

தோள்களில் ஊன்றி கைகளால் அந்த இரும்பு உபகரணத்தை வருடினார். தோளில் ஊன்றி துப்பாக்கியை உயர்த்தினார். துப்பாக்கி குழல் தென்னை மரத்தை குறி வைத்தது. இப் பொழுது காகத்தை காண வில்லை.

கண்களை மூடி தோளில் துப்பாக்கியை ஊன்றியபடி அவர் சில நிமிடங்கள் அப்படியே அமர்ந்திருந்தார். மனதில் இரும்புத் தொப்பியணிந்தவர்கள் வெறியாட்டத்தை விட்டு விட்டு ஓடினார்கள். இவர் அவர்களை துரத்தி துரத்தி சுட்டார்.

றைபிளை வாங்கிக்கொண்டு தூயவனும் நண்பனும் போய் விட்டார்கள்.

வானத்தில் நிலவு பிரகாசித்துக் கொண்டிருநதது இவர் மனதின் ஆழத்தில் ஆழ்கடலின் அமைதி யை அனுபவித்துக் கொண்டு கண்களை மூடி கதிரையில் சாய்ந்தபடியே இருந்தார்.

உங்களுக்கு ரீ இந்தாங்கோ குடியுங்கோ பிறகு கனவு காணுங்கோ".

மனைவி அருகில் நின்று சொன்னாள் இவர் ரீயை கையில் வாங்கிக் கொண்டார். .

"உங்கடை காகம் இப்ப என்ன செய்யிது? மனைவி சிரித்த படி கேட்டாள்.

"அது பறந்து போயிட்டுது".

"திரும்ப வராதேயப்பா?

"இல்லை அதைக் கூட்டோடை கலைச்சுப் போட்டன் .

தாத்தா அது எங்கை போயிருக்கும் ?" சசி கேட்டான்.

"தெற்குப் பக்கமாய்த்தான் போயிருக்கும்?

அவர் ரீயைக் குடித்துவிட்டு தம்ளரை மனைவியிடம் கொடுத்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# காகக்கூடு

அவர் முன் றைபிள் நீண்டது, வழக்கம் போல் துப்பாக்கி முனையல்ல, துப்பாக்கிப் பிடி தான் அவர் முன் நின்றது.

கணபதிப்பிள்ளைக்குள் இருந்த காகம் திடீரென்று சிலிர்த்தெழுந்து கொண்டது. அதன் தூக்கம் கலைந்து சிறகுகளை அடிக்கத் தொடங்கியது. கணபதிப்பிள்ளை அதைக் கொஞ்சங்கூட எதிர்பார்க்கவில்லை.

காகம் என்று கணபதிப்பிள்ளை அழைக்கின்ற அந்த இனம் புரியாத பயங்கரம் அவரை ஆட்கொண்டு நீண்ட காலமாகிறது. அது ஒரு மூலையில் உறங்கிக் கொண்டிருக்கும். உசுப்பி விடப்படுகின்ற சில கணங்களில் ஆக்ரோஷமாய் அது சிலிர்த்தெழுகின்றபோது அவர் தன்னை இழந்து விடுவார். அதன் கூரிய அலகும் நகங்களும் தன்னுள்ளே கீறி இரத்தம் சொட்டுகின்ற தளர்ந்த நிலைக்கு செல்வதை அவர் உணர்வார். சிறகுகள் படபடப்பதுபோல் இதயம் துடிக்கும். அதன் கருமை பரவி அவரை விழுங்கி விடுவதாகவும் அதனால் அறிவு கெட்டு மயங்கிப் போவதாகவும் அவர் அந்தக் கணங்கள் பற்றி தன் நண்பர்களிடம் சொல்லிக் கொள்ளுவார்.

இன்று எதிர்பாராத விதமாக அந்தக் காகம் விழித்துக் கொண்டு விட்டது.

மலர்ச் செடிகளும் குன்றும் புற்றரைகளும் நீர்ச்சுனைகளுமாக இருந்த அந்த பூங்காவில் இவர் உலாவிக் கொண்டிருந்தார். அவரது கைகளை பற்றியபடி துள்ளலுடன் அவருடன் நடந்து கொண்டிருந்தான் அவரது பேரன் சசி. இளைஞர்கள், யுவதிகள் வயோதிபர்கள், சிறார்கள் என பலதரப்பட்ட வயதினரும் தங்கள் கவலைகளை மறந்து குதூகலமாக உலாவிக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய கலகலப்பும் உற்சாகமும் இவரையும் தொற்றிக்கொண்டது. ஒரு குழந்தை போல பூங்காவை வலம் வந்து கொண்டிருந்தவர் ஒரு மூலையில் சாதுவாக நின்றிருந்த அந்தப் பச்சை உருவத்தை கண்டு விட்டார்.

**"உங்களுக்கு மட்டுமில்லை, எத்தனை பேருக்கு இப்படி நடந்திருக்கு. கண்ணுக்கு முன்னாலை துடிதுடிச்சு பெற்றதாயை, மகனைச் சாகக் கொடுத்தவை எத்தனை பேர்? அவையளும் தங்களை இழக்காமல் துணிவோடை இருக்கினம் தானே"**

ஆக்கிரமிப்பின் சின்னமாக உருக்குலைந்த நிலையிலிருந்த அந்த டாங்கியின் பெரிய குழாய் நீண்டிருந்தது அதனை அகன்ற கண்களுடன் பார்த்தார். அது அவரைக் குறிவைப்பது போலத் தோன்றியது. அப்போதுதான் அந்தக் காகம் விழித்துக் கொண்டது.

தாத்தாவின் திடீர் மாற்றம் பேரனுக்குப் புரியவில்லை."என்ன தாத்தா டாங்கியைப் பாக்கவிடேல்லை அதுக்குள்ளை போவமன்றியள்"

பூங்காவிலிருந்து அவனை இழுத்துக்கொண்டு அவர் வெளியேறியபோது சசி கேட்டான்.

"எனக்கு வயித்துக்குள்ளை ஏதோ செய்யுது கெதியன வீட்டை போவம்" .

சைக்கிளில் ஏறியபோது இரு போராளிகள் அவர்களை கடந்து சென்றார்கள். அவர்கள் தோள்களில் றைபிள்கள் தொங்கின. கணபதிப்பிள்ளை முகத்தை திருப்பிக் கொண்டார்.

"அவையள் கொண்டு போறது T-81 தானே தாத்தா?" தாத்தா பேசாமல் சைக்கிளை மிதித்தார்.

"தாத்தா ஏகே எண்டு ஏன் சொல்லுறது?"

"கொஞ்சம் பேசாம வா மேனை தலையிடிக்குது"

தாத்தாவும் பேரனும் மௌனமாக சென்றார்கள்.

நல்லூர் கோயிலை கடந்த போது கந்தனை மனதுள் வழிபட்டார், முருகா என்னை இந்த வேதனையிலிருந்து காப்பாற்று அவமானத்தை துடை முருகா".

அவர்கள் வீட்டை அடைந்த போது சூரியன் மேற்கில் நன்கு இறங்கிவிட்டான். சசி சைக்கிளிலிருந்து குதித்து கேற்றைத் திறந்துவிட்டான். முற்றத்தில் இரண்டு சைக்கிள்கள் நின்றிருந்தன.

"யாரோ வந்திருக்கினம்" சொல்லிக் கொண்டு சசி உள்ளே ஓடினான்.

கணபதிப்பிள்ளை பெருமூச்சு ஒன்றை விட்டுக்கொண்டார் அவரது பதற்றம் நன்கு குறைந்து விட்டது.

முன்னறையில் தூயவனும் இன்னொரு போராளியும் அமர்ந்திருந்தனர். அவரது மனைவி சுவரோடு சாய்ந்து நின்று கொண்டிருந்தாள். சசி தூயவனின் மடியில் அமர்ந்திருந்தான். சுருட்டை முடியுடன் நிமிர்ந்து உட்காந்திருந்த மற்றைய போராளியின் மடியில் றைபிள் ஒன்று கிடந்தது. அதன் கரிய குழல் இவர் நின்ற திசையை நோக்கியிருந்தது. கணபதிப்பிள்ளையின் இதயம் வேகமாக துடிக்கத் தொடங்கியது.

அவர்கள் இவரைப் பார்த்து சிரித்தார்கள், அவர் எதையும் பாராமல் கால்களை எட்டி வைத்து வேகமாக அவர்களை கடந்து அறைக்குள் புகுந்து கொண்டார்.

"தம்பி இருங்கோவாறன்" மனைவி அவரை பின் தொடர்ந்தாள்.

"மாமா ஏகே எண்டால் என்ன அர்த்தம்?" சசி அவர்களைக் கேட்டான்.

"என்னப்பா ஆமிக்காரனைக் கண்டது மாதிரி ஓடிவந்து ஒளியிறியள் அதுகள் என்ன நினைக்குங்கள்"

அறைக்குள் மனைவி மெல்லிய குரலில் கேட்டாள். குரலில் கோபம் தெரிந்தது.

"எனக்கு அந்த துவக்கை காண....."

அவர் தலையைக் கைகளால் பிடித்துக் கொண்டார் . சரி சரி எவ்வளவு நாளைக்கு உப்பிடி ஒளியப் போறியள்: கொஞ்ச நேரத்தாலை வந்து அந்தப் பக்கம் பாராம இருங்கோவன், நான் பொடியளுக்குச் சொல்லிறன்.

அவள் வெளியே போய் விட்டாள்.

கறுத்த நீண்டிருக்கிற துப்பாக்கிகுழலைக் காண்டால் அவருக்கு இப்படிப் பதற்றம் வந்து விடும். இரண்டு வருடங்களாக அதுவும் அந்த பயங்கர சம்பவத்துக்கு பிறகுதான் அவருக்கு இப்படி ஏற்படத்தொடங்கியது.

அப்போது அவர் அரசு அலுவலகத்தில் லிகிதராக வேலை பார்த்தார். அலுவலகத்திலிருந்து திரும்பிக்கொண்டிருந்த ஒரு




மாலைப் பொழுதில் சில வெடிச் சத்தங்களுக்குப் பிறகு நடந்த சுற்றிவளைப்பில் மற்றவர்களுடன் இவரும் மாட்டிக் கொண்டார் வயோதிபர்கள் இளைஞர்கள் எல்லோருடனும் இவரும் வரிசையில் நிறுத்தப்பட்டார். துப்பாக்கி முனைகள் இவர்களை நோக்கி நீண்டன இவர் மனைவி மக்களை ஒரு கணம் நினைத்துக் கொண்டார். துப்பாக்கிக் குழல் விரிந்து இவரை விழுங்க வருவது போல இவருக்குத் தோன்றியது அவர்கள் இரும்புத் தொப்பிகளுடனும் சிவந்த கண்களுடனும் சிரித்தபடி இவர்களை நோக்கி சுடத் தொடங்கினார்கள் பிணங்கள் விழுந்தன இவரும் விழுந்தார்.

இவர் விழித்தபோது இருட்டில் பிணங்களின் இரத்தக்கசகசப்புடன் விழுந்துகிடந்தார்.

தோளில் வலித்தது. இறந்து விட்டார் என்று நினைத்து விட்டு விட்டுச் சென்று விட்டார்கள். அந்த இரவு இவருள் ஒரு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

தனது சேவையிலிருந்து ஓய்வு பெற்றுக்கொண்டு யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்தார். அந்த சம்பவத்தின் தாக்கத்திலிருந்து இவரால் மீள முடியவில்லை. தோளிலும் மனத்திலும் வடுவை ஏற்படுத்திவிட்டது. அந்த சம்பவம்.

"எவ்வளவு காலத்திற்கு இப்படி இருக்கப்போகிறேன் இப்படியே இதை விடக்கூடாது"

அவர் எழுந்து வெளியில் வந்தார், தூயவன் அவரைப் பார்த்துச் சிரித்தான். அவர் கதிரையில் அமர்ந்து கொண்டார்.

றைபிள் தூயவனுடைய மடியில் இப்பொழுதும் கிடந்தது. சசி அதை தொட்டுப்பார்த்துக் கொண்டிருந்தான் கணபதிப்பிள்ளை அங்கு பார்வையைச் செலுத்தாது கவனமாய் இருந்தார்.

"ஐயா என்ன யோசிக்கிறியள்" தூயவன் கேட்டான் அவர் பேசாமல் இருந்தார்.

"உங்களுக்கு மட்டுமில்லை எத்தனை பேருக்கு இப்படி நடந்திருக்கு கண்ணுக்கு முன்னாலை துடி துடிச்சு பெற்றதாயை மகனை சாகக் கொடுத்தவை எத்தனை பேர்? அவையளும் தங்களை இழக்காமல் துணிவோடை இருக்கினம் தானே, ஐயா, அவையள் எப்பிடி இருக்கினம்"

அவன் சொல்லி நிறுத்தினான்.

அறையில் மௌனம் நிலவியது. அறையிலிருந்த அனைவரும் அவரைப் பார்த்துக் கொண்டிருந்தனர். அவர் கதவினூடே தெரிந்த தென்னை மரத்தின் உச்சியைப் பார்த்தார். இருள் கவிந்து கொண்டிருந்தது. ஓலை ஒன்றின் மீது இருட்டாய் ஒரு காகம் இருந்தது.

தூயவன் திடீரென அருகிலிருந்த றைபிளை பற்றிக் கொண்டெழுந்தான்.

**அ. கிருஸ்ணேந்திரன்,**
**தமிழீழம்**

அவர் முன் றைபிள் நீண்டது, வழக்கம் போல் துப்பாக்கி முனையல்ல, துப்பாக்கி பிடி தான் அவர் முன்னின்றது. அவரின் காகம் சிறகடிக்க தொடங்கியது.

"ஐயா பிடியுங்கோ" தொட்டுப் பாருங்கோ, எங்களுடைய கவசம், பிறகு கேளுங்கோ பயம் எண்டா என்னெண்டு."

மௌனத்தை கலைத்துக் கொண்டு அவன் குரல் ஒலித்தது. அவரின் இதயத்துள் எதிரொலிப்

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யாழ். குடாநாட்டின்

கடந்த காலத்தில் என்றும் விவாதத்திற்குரியனவாகவே இருந்தன.

இந்நிலையில் அமைச்சர் ரத்வத்த யாழ்குடாநாட்டின் மீதான தனது துரித தாக்குதல் திட்டத்தை முன்வைத்தபோது, அதிகாரிகள் மட்டத்தில் ஆச்சரியமும் எதிர்ப்பும் கிளம்பியமை தவிர்க்கமுடியாத ஒன்றாகவே இருந்தது.

இதில் இராணுவத் தரப்பில் முக்கியமாகக் கருத்திற் கொள்ளப்பட்டமை, இராணுவத்தினருக்கு ஏற்படப்போகும் உயிரிழப்புத் தொடர்பானதும் இவ்விழப்புக்கள் ஏற்பட்ட பின்னரும் பிடித்த பிரதேசத்தை அதாவது யாழ் குடாநாட்டைக் கைப்பற்றினால் அதனைத் தொடர்ந்து பாதுகாக்க முடியுமா என்பதுகுறித்த கேள்வியுமே ஆகும்.

அதிலும் குறிப்பாக, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இன்றைய பலமானது சரியான முறையில் மதிப்பிட முடியாத நிலையில், குடாநாட்டில் தாக்குதல் ஆரம்பிப்பது மிகவும் அபாயகரமானது என்பதாகும். ஏற்கனவே இரண்டாங்கட்ட ஈழப்போரின் பின்னர் கடற்புலிகள் பலம் பெற்றுள்ளனர் என்பதும், விமான எதிர்ப்பு ஆயுத தளபாடங்களைப் புலிகள் பெற்றுவிட்டனர் என்பதும் உறுதியாகியுள்ளது. அதன் மூலம் அவர்கள் பலம் ஒரு கட்டத்திற்கு அதிகரித்துள்ளது என்பது வெளிப்படையாகிறது. அதற்கு அப்பால் புலிகளின் பலம் எந்தளவில் அதிகரிக்கப்பட்டுள்ளது என்பது வெளிப்படாத நிலையிலுள்ளது.

இந்நிலையிலேயே, சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் அமைச்சரின் திட்டம் குறித்து, தமது அதிருப்தியை வெளியிடும் நிலை உருவானது. தாக்குதலைவிட, தாக்குதலின்பின் ஏற்படக்கூடிய விளைவுகள், இழப்புக்கள் அமைச்சருக்குச் சுட்டிக்காட்டப்பட்டது.

ஆனால், அமைச்சர் ரத்வத்தவால் அவற்றைக் கருத்துக்களாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை. மாறாக, அவருக்கு ஆத்திரத்தையே ஏற்படுத்தியது. இராணுவத் தரப்பு, தமக்கு ஏற்படப்போகும் இழப்புக்கள் குறித்து சிந்தித்துப் பேசியபோதும், இராணுவத் தரப்பின் இழப்பிற்கும் தமிழ் மக்களின் இழப்பிற்கும் பொறுப்பேற்கவேண்டிய நிலையிலிருந்த அமைச்சர்-அரசாங்கம் இவை குறித்துப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. குடாநாட்டின் இராணுவ வெற்றியென்பதே அமைச்சரின் குறியாக இருந்தது.

இந்நிலையில்தான், இராணுவக் கட்டமைப்பு இரவோடிரவாக மாற்றியமைக்கப்பட்டதோடு, அமைச்சர் திட்டங்களை அமுல்படுத்த ஒப்புதலளித்த இராணுவ அதிகாரிகளிடம் பொறுப்புக்களும் ஒப்படைக்கப்பட்டன.

இத்தாக்குதலில் இராணுவம் தனது இலக்கை அடையுமா? அடையாதா? என்பது ஒரு புறமிருக்க, அமைச்சர் ரத்வத்தவிற்கு சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் சுட்டிக்காட்டியவற்றைத் தாக்குதலின்பின் சிறீலங்கா இராணுவம் தவறாது சந்தித்தேயாக வேண்டி வரும் என்பது மட்டும் நிச்சயம்.

அத்தோடு, அமைச்சர் ரத்வத்த எதிர்பார்க்கும் இராணுவ வெற்றியின் மூலமான அரசியல் இலக்கும் சாத்தியமாவதும் கடினமாகவே இருக்கும். ஏனெனில் யாழ் நகரையோ அன்றி குடாநாட்டையோ தாக்குவதென்பதோ, பிடிப்பதென்பதோ இனப்பிரச்சினையை இராணுவ ரீதியில் வெற்றி கொண்டுவிட்டதாகப் பொருள் படமாட்டாது.

# இனப்படுகொலையே குறி

விடுதலைப் புலிகளை இராணுவரீதியில் தோற்கடிப்பதே இன்று சிறீலங்காவிலுள்ள பல தரப்பினரின் சிந்தனையாகும். இதில் அரச தரப்பு, இராணுவத் தரப்பு, பேரினவாதச் செய்தித்தாள் தரப்பு எனப் பல தரப்புக்கள் உள்ளன. இவ்வாறு இவர்கள் பல தரப்பாக இருப்பினும் இவர்களின் ஒரே குறிக்கோள் இலங்கை பூராவும் பௌத்த பேரினவாதத்தை நிலைநிறுத்துவதே ஆகும்.

இந்த நிலையில் விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிக்கவென தமக்குத் தமக்கு ஏற்றவிதத்திலும், விருப்பத்திற்கு ஏற்ற விதத்திலும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு திட்டத்தையும், ஆலோசனைகளையும் வெளியிட்டவண்ணமேயுள்ளனர். இவை போர் மூலோபாயம், தந்திரோபாயம், ஆயுதக் கொள்வனவு, புலிகளின் பலம் என பலரகம் வாய்ந்தவையாகவுள்ளன.

இதில் அரசியல் தரப்பிலும் இராணுவத் தரப்பிலும் முக்கியமாக ஆராயப்படும் விடயமாக உள்ளவை, வடக்கை-குறிப்பாக குடாநாட்டைத் தாக்குவதா? அல்லது கிழக்கில் தற்பொழுது இழந்த பகுதிகளை மீட்பதா? அன்றி கிழக்கில் இருந்து புலிகளை முற்றாக வெளியேற்றவென கிழக்கிலேயே முற்றுமுழுதான கவனத்தைச் செலுத்துவதா? என்பது ஆகும். இது பற்றிய வாதப் பிரதிவாதங்கள் தீவிரமாகவே இடம்பெற்று வருகின்றன.

இருப்பினும் வடக்கை-குறிப்பாக குடாநாட்டை-கைப்பற்றுவதன் மூலமாகவே புலிகளைப் பலவீனமடையச் செய்யலாம் என்ற கருத்து, இராணுவ வட்டாரங்களில் பெரிதாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாக உள்ளது. அரச தரப்பிலும் யாழ்ப்பாண வெற்றியே தமது அரசியலுக்கு வாய்ப்பாக இருக்கும் எனக் கருதப்படுகின்றது.

இதேசமயம், இராணுவத் தரப்பானது பல்வேறு வகையான நவீன ஆயுதங்களுக்குக் கோரிக்கை விடுத்த வண்ணமே உள்ளது! இதற்குச் சிறீலங்காவின் புலனாய்வுத் துறையினதும், பேரினவாதச் செய்தித்தாள்களினதும் தகவல்கள் இராணுவத் தரப்பிற்கு வாய்ப்பாகவுள்ளது.

புலனாய்வுத்துறையின் அண்மைய அறிவிப்புக்களின்படியும் செய்தித்தாள்களின் கண்டுபிடிப்புகளின்படியும் விடுதலைப் புலிகள் இயக்கத்திடம் இன்று நவீன நீர்மூழ்கிகள், நவீன போர் விமானங்கள் என்பன கையிருப்பில் உள்ளன. இவை புலிகளுக்கு வந்து சேர்ந்திருக்க முடியுமா? அவ்வாறு வந்து சேர்வது சாத்தியமா? என்பது குறித்து அவை ஆராயவில்லை.

ஆனால் தமது கண்டுபிடிப்பிற்கு எதிரான ஆயுத தளபாடங்களைக் கொள்வனவு செய்யப்பட வேண்டும் என அவை சிபார்சு செய்வதில் முனைப்பாக உள்ளன. அரச அதற்குச் செவி சாய்ப்பதாகவும் உள்ளது. இதனால் பெரும் எடுப்பிலான ஆயுதக் கொள்வனவும் இடம்பெற்றுவருகின்றது.

இவற்றுக்கு அடுத்த கட்டமாக பௌத்த-சிங்கள அடிப்படைவாத சக்திகள், சிங்கள இளைஞர்கள்-யுவதிகள் போர்க்களம் செல்வதற்கு அணிதிரள வேண்டும் என வேண்டுகோள் விடுத்துச் செயலாற்றுகின்றன. இக்கோரிக்கைகளை ஏற்று பௌத்தபிக்குகளே இராணுவத்தில் இணைந்து செயலாற்ற வருகின்ற அளவில் அவர்களின் இனவாதத் துண்டல்கள் உள்ளன.

ஒட்டுமொத்தமாக சிங்கள தேசமானது, போருக்கு அணிதிரள வேண்டும் என்ற கோரிக்கையும் செயற்பாடும் தென்னிலங்கையில் முனைப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென்றே கூறலாம். இதற்கான ஏனைய வளங்களுடன் பெருமளவு நிதியை அரச ஒதுக்க முனைந்துள்ளபோதும், தனியார்துறையில் இருந்தும் நிதி பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

இவ்வாறாக விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் பற்றிப் பேசும் எவரும், இவ்வாறானதொரு தாக்குதல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்போது, தமிழ்மக்களுக்கு ஏற்படப்போகும் உயிர் மற்றும் உடைமை இழப்புக்கள் பற்றி எதுவித அக்கறையும் காட்டுவதாக இல்லை. அதாவது, இது அவர்களால் மறக்கப்பட்ட விடயம் போன்றே வெளிக்காட்டப்படுகின்றது.

ஆனால் உண்மை நிலை அவ்வாறு இல்லை. இதனை அவர்கள் மறந்ததாகக் காட்டிக் கொள்ள முனைகின்றனரே ஒழிய அவர்களால் இது மறக்கப்படவில்லை. அவர்களின் குறிக்கோளே அதுதான். அதாவது புலிகளின் பெயரால் தமிழ்மக்கள் மீதான இனப்படுகொலைகளைக் கட்டவிழ்த்து விடுவது.

இதற்குச் சிறீலங்கா அரச எவ்வாறான விளக்கத்தையும் கூறித் தப்பித்துவிட முடியாது. இது புலிகள் என்ற ரீதியில் தமிழ்மக்களைக் கொன்றொழிக்கும் நடவடிக்கை ஆகும். அதாவது சிங்களப் பேரினவாதத்தின் தத்துவத்தில் 'தமிழரை ஒழித்தல்' என்பதே புலிகளை ஒழித்தலாகும். எவ்வாறெனில் தமிழர்களில் இருந்து தானே புலிகள் வருகின்றனர் என்பதாகும்.

# இந்து சமுத்திரப்பிராந்தியத்தில்...

அணிசாரா அமைப்பும்
இந்துமாகடல் பகுதியும்.

இந்த இரண்டு சக்திகளுடனும் நேரடியாகத் தம்மை இனங்காட்டிக் கொள்வதைத் தவிர்க்கும் நோக்குடன், இப்பிராந்தியத்தின் பெரும்பாலான நாடுகள், 'அணிசாரா நாடுகள்' என்ற அமைப்பை ஏற்படுத்தி அதனைப் பயன்படுத்திக் கொண்டன. அவை இந்துமாகடல் பிராந்தியம் வல்லரசுப் போட்டிக்கான பலப்பரீட்சைக் களமாகிவிடக் கூடாதென்ற அக்கறையை வெளிப்படுத்தியதுடன், இந்துமாகடல் பிராந்தியம் அமைதி மண்டலமாகப் பிரகடனம் செய்யப்படவேண்டும் எனவும் குரல் எழுப்பின. இந்த வகையில் 1976இல் கொழும்பில் உச்சிமாநாடு நடத்திய அணிசாராநாடுகள், இந்துமாகடல் பிராந்தியம் அமைதி மண்டலமாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியிருந்தது குறிப்பிடத்தக்கது.

பனிப்போர் நிலவிய காலப்பகுதியில் இந்துமாகடல் அமைதி மண்டலமாக வேண்டுமென்ற குரல், முதன்முதலில் 1964இல் ஒலிக்கத்தொடங்கி லுசாக்காவில் 1970 ல் நடைபெற்ற அணிசாரா நாடுகள் உச்சி மாநாட்டில் வெளியிடப்பட்டது. கொழும்பு மாநாடு அதனைத் தீர்மானமாக நிறைவேற்றியிருந்தது.

அதனைத் தொடர்ந்து ஐநா சபையிலும் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றவும் கொழும்பில் இதனை வலிந்தியா ஆர்வம்கொள்ள முனைகிறது என்பது தெளிவாகிறது.

எனவே முடிவாகத் தொகுத்துப் பார்க்கும்போது பிராந்திய நாடுகளுக்கு ஒத்துழைப்பை ஏற்படுத்தி பரஸ்பர நம்பிக்கையுடனான கூட்டமைப்புக்களைத் தோற்றுவிக்கவேண்டுமென்ற எண்ணமும் வெளிச்சக்திகளிலிருந்து பாதுகாப்பது என்ற போர்வையில் பிராந்திய நாடுகளை அடிமைப்படுத்தும் ஒரு எத்தனமும் இந்து மாகடலின் அலைகளில் இப்போது மிதக்கிறது எனலாம்.

# சத்துருக்கொண்டான்...

அணைவரையும் கொண்டு சென்றது. சிறிது நேரத்தில் முகாமிலிருந்து அவலக் குரல்கள் கேட்டன" என்றார்.

பிள்ளையாரடியைச் சேர்ந்த இவைரமுத்து (62) சாட்சியமளிக்கையில், "இராணுவம் வந்தபோது ஆண்களைத்தான் பிடிப்பார்கள். நீங்கள் ஒளித்திருங்கள். நான் வீட்டில் இருக்கிறேன். பெண்களைக் கொண்டு செல்ல மாட்டார்கள் என என் மனைவி சொன்னார். ஆனால் என்னைக் காப்பாற்ற முனைந்த மனைவியை இராணும் கொண்டுசென்றுவிட்டது. இராணும் போனபின் முகாம் பக்கம் போய்ப்பார்த்தேன் அழுத குரல்கள் கேட்டன" எனக்கூறினார்.

பனிச்சையடியைச் சேர்ந்த இராசையா இரத்தினஜயா(45) சாட்சியமளிக்கையில், "சம்பவதினம் 530 மணியளவில் சமார் 60 இராணுவம் துவக்கு, கத்தி சகிதம் வந்தது. நான் பனை மர வடலிக்குள் ஒளித்துவிட்டேன். அப்போது என் அம்மா, அப்பா, மூன்று பிள்ளைகள் அனைவரையும் இராணுவம் கொண்டு சென்றது. விசாரித்துவிட்டு விடுவார்கள் என எண்ணினேன். இரவு எட்டுமணியாகியும் அவர்கள் திரும்பாததால், முகாம் பக்கம் போய்ப்பார்த்தேன். அலறல்கள் கேட்டன. நான் பயந்து வீட்டுக்குத் வந்துவிட்டேன்" எனச் சாட்சியமளித்தார்.

## சம்பவம் தொடர்பாகப் பேச, பிரிடீயர் மறுத்தார்

தொடர்ந்து நடைபெற்ற விசாரணையில் சாட்சியமளித்த, மட்டக்களப்பு முன்னாள் சமாதானக்குழு தலைவரும் ஓய்வுபெற்ற மேலதிக அரச அதிபருமான தஅருணகிரிநாதன், "சம்பவம் குறித்து அறிந்த நாம், இச்சம்பவத்தில் உயிர் பிழைத்த கந்தசாமி கிருஸ்ணகுமார் என்பவரின் சாட்சியத்தைப் பதிவு செய்தோம்; ஒலிப்பதிவு இன்னமும் உள்ளது. பின்னர் இச் சம்பவம் தொடர்பாக இப்போதைய மட்டக்களப்பு பிரிகேடியர் செனிவிரட்ணாவின் கவனத்திற்கு கொண்டுவந்தோம். இது குறித்து எம்மைச் சந்திக்க அவர் மறுத்துவிட்டார். ஏனைய இராணுவ உயர் அதிகாரிகளும் இதுவிடயமாகப் பேசமறுத்துவிட்டனர்" என்றார்.

## எவரையும் நாம் கைதுசெய்யவில்லை

தொடர்ந்து, சத்துருக்கொண்டான் முகாம் பொறுப்பதிகாரியாக அன்று இருந்த கப்டன் காமினி வர்ணகுல சூரிய தனது சாட்சியத்தில், "அன்று தேடுதல்களோ கைதுகளோ நடக்கவில்லை என மறுத்ததோடு, அன்று தனது முகாமிலிருந்து எந்தப்படையினரும் வெளியேறவில்லை" எனவும் மறுத்தார்.

# இந்தியா போட முனையும்...

அரசியல் சூழ்நிலையும் இந்தியாவிற்கு, இலங்கையில் இராணுவ ரீதியான தலையீட்டைச் செய்வதற்கான ஒரு வாய்ப்பான சூழலாக இல்லை. அதாவது, இன்றைய புதிய உலக அரசியல் ஒழுங்கில் தனித்துவமாக மற்றொரு நாட்டிற்குள் படை இறக்குதல் என்பது தர்க்கத்திற்குரியதொன்றாகவே இருக்கின்றது.

மேலும், பிரதமர் ராவின் தலைமையின் கீழ், உள்ள காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே ஏற்பட்டுள்ள பிளவுகளும் இதன் காரணமாக, அர்யூன் சிங், திவாரி போன்றோர் வெளியேறிப் புதிய கட்சி ஆரம்பித்துள்ள நிலையும்; ராஜீவ் விசுவாசிகள் கட்சியை விட்டு வெவின் இக் கோரிக்கையானது நியாயமானதும் இதை நிறைவு செய்வது உலகத்தின் கடமை எனவும் தெரிவித்துள்ளமையே இவ்வாறு எண்ண வைக்கிறது.

அவ் அனுமானிப்பு சரியானதாக இருக்குமானால், சந்திரிகா அரசானது இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே முடிந்த முடிவு என்ற வரலாற்றுத் தவறைப் புரியத் தயாராகின்றது என்பதோடு, தமிழீழம் வரை முற்றுப்பெறாத ஒரு நீண்டகாலப் போருக்கு வித்திடுகின்றது என்றே கொள்ளலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கள நிலமைகள்...

## மொத்தம் 10 இராணுவத்தினர் பலி

யூன் 28ம் திகதி புல்மோட்டையில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவ அணிமீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கண்ணிவெடித் தாக்குதலில் ஆறு சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதே தினம் காலை பூநகரி முகாமை அண்டிய பகுதியில் இராணுவத்தினருடன் நடந்த மோதலில் நாலு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

## வேலை செய்து கொண்டிருந்தவர் சுட்டுக்கொலை

ஏறாவூரில் தனது தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த கற்பூரம் மூர்த்தி என்ற விவசாயியை சிறிலங்கா இராணுவத்தினர் துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டதில் தலையில் காயம் பட்டு இறந்துள்ளார்.

## யாழ் நகரை நோக்கிக் கடும் எறிகணை வீச்சு

யாழ்நகரையும், தீவுப்பகுதி கரையோரத்தையும் நோக்கி பலாலி, ஊர்காவற்றுறை முகாம்களிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கடுமையான செல் தாக்குதல்களினால் மூவர் பலியானார்கள். 14பேர் காயமடைந்தனர். யாழ். நகர கரையோரப் பகுதி மக்கள் ஆயிரக்கணக்கானோர் இடம் பெயர்ந்தனர்.

பலாலி பகுதியிலிருந்து நூற்றுக்கணக்கான "செல்கள்" ஏவப்பட்டன. பாஷையூர் மூன்றாம் குறுக்குத்தெருவில் விழுந்த "செல்"லினால் குருசுமுத்து கிறிஸ்ரி(26 வயது) மரணமானார்.

யாழ். மானிப்பாய் வீதியில் விழுந்த "செல்"லினால் மட்டக்களப்பு கல்லாறிலிருந்து இடம் பெயர்ந்து யாழ். நாவலர் வீதியில் வசிக்கும் கனகரட்ணம், குகேந்திரன்(23 வயது) என்பவரும் அடையாளம் காணப்படாத மற்றொருவரும் மரணமானார்கள்.

யாழ்நகர் மானிப்பாய் வீதியில் விழுந்த "ஷெல்"லினால் புங்குடுதீவிலிருந்து இடம் பெயர்ந்து மானிப்பாய் ஐந்து சந்தியில் வசிக்கும் சுந்தரலிங்கம் குகனேஸ்வரன் (14 வயது), கோணாந் தோட்டத்தைச் சேர்ந்த சுப்பன் மாரிச்செட்டி (55 வயது), அஞ்சலீனா (38 வயது), ஜெஸ்ரின் (4 வயது), கணபதி தங்கராசா (54 வயது), பூபால் (20 வயது) ஆகியோரும் மூளாயிலிருந்து யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்த மினி பஸ் வண்டியிலிருந்த மூளாயைச் சேர்ந்த ராசாராம் (19 வயது), திருவடிநிலையைச் சேர்ந்த சபாபதி நாகேஸ்வரி (54 வயது) ஆகியோரும், பாஷையூரில் விழுந்த செல்லினால் கிறிஸ்ரி பிரேமவத்சலா (26 வயது), குருநகரில் விழுந்த செல்லினால் சந்தனம் சவிக்குமார் (2 வயது), குரு நகர் அச்சக வீதியில விழுந்த செல்லினால பிரான்சிஸ் சுகுணி (12 வயது), அருட்பிரகாசம் முத்தம்மா (54 வயது), யாழ். மானிப்பாய் வீதியில் மினி பஸ் வண்டியிலிருந்த மூளாயைச் சேர்ந்த சிவகுமார் ராகவன் (19 வயது) ஆகியோரும் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் இடம்பெற்ற அன்று யாழ்நகரம் வெறிச்சோடியது. கடைகள் பூட்டப்பட்டன. பாடசாலைகள் நடைபெறவில்லை. கடைகள், மினி பஸ்வண்டிகள், வீடுகள் என்பன ஷெல் தாக்குதல்களினால் சேதமடைந்துள்ளன.

ஓயாத "செல்" தாக்குதல்களினால் குருநகர், பாஷையூர், நாவாந்துறை, கொட்டடி ஆகிய கரையோரப் பகுதி மக்களும், நகரின் மற்றோரு பகுதி மக்களும் இடம் பெயர்ந்து தேவாலயங்கள், பாடசாலைகளில் தஞ்சம் புகுந்திருந்தனர்.

## மட்டக்களப்பு உப்போடையில் இராணுவ முகாம் மீது தாக்குதல்

வந்தாறு மூலையிலுள்ள உப்போடை இராணுவ முகாம் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது.

சுமார் ஒருமணிநேரம் தாக்குதல் நடந்ததாகவும், சிறிது நேரம் எதிர்த்தாக்குதல் நடத்திய படையினர், பின்வாங்கிச் சென்றுவிட்டனராம்.

இந்த மோதலில் உயிரிழப்புகள் எதுவும் நேரவில்லை. இராணுவத்தினர் பின் வாங்கிச் சென்றதையடுத்து விடுதலைப் புலிகள் முகாமை முற்றுகையிட்டு அங்குள்ள கட்டிடங்களுக்கு சேதம் உண்டாக்கிவிட்டு ஆயுதங்களை எடுத்துச் சென்றுவிட்டதாகத் தெரியவருகிறது.

இந்த மோதலையடுத்து அப்பகுதியிலுள்ள பொதுமக்கள் இடம்பெயர்ந்து வந்தாறு மூலை பல்கலைக்கழகக் கட்டிடங்களில் தற்காலிகமாக தங்கியுள்ளதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பொதுமக்கள் படையினரால் சுட்டுக்கொலை

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் நான்கு பொதுமக்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் கைது செய்யப்பட்ட இருவரைத் தாம் கைது செய்யவில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

மகிழடித் தீவில் யூலை 3ம் நாள் விசேட அதிரடிப் படையினர் பொதுமகன் ஒருவரை கைது செய்து பின்னர் சுட்டுக் கொன்றனர். மகிழடித் தீவைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான பொ. சிறி (வயது 28) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

இதேதினம் ஏறாவூர் பொலிஸ் காவலரண் மீது விடுதலைப் புலிகள் தாக்கி பின்னர் அப்பகுதிக்கு வந்த பொலிசாரால் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். மகேந்திரன் (வயது 29) என்ற இளைஞரையே பொலிசார் சுட்டுக் கொன்றனர்.

இதேவேளை யூன் மாதம் 29ம் நாள் காஞ்சிரங்குடாவிலும் தெய்வாமுனைப்பிலும இரண்டு பொதுமக்களைச் சுட்டுக் கொன்றனர். ந. கஞ்சுப்பிள்ளை (வயது 17), பாலப்போடி மணி (வயது 25) ஆகிய இருவரையுமே இராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர். இவர்கள் இருவரும் கொக்கட்டிச் சோலையைச் சேர்ந்தவர்கள்.

இதேவேளை யூன் மாதம் 23ம் நாள் 40ம் கிராமத்தைச் சுற்றிவளைத்த விசேட அதிரடிப் படையினர் வ. தேவதாஸ் (வயது 23) க. தம்பிரெட்ணம் (வயது 21) ஆகியோரை இராணுவத்தினர் பிடித்துச் சென்றனர். இவர்களது நிலை பற்றி அறிய முகாமுக்குச் சென்ற உறவினர்களுக்கு இவர்களைத் தாம் கைது செய்யவில்லை என இராணுவத்தினர் கைவிரித்துவிட்டனர்.

## கிழக்கில் குடும்பஸ்தர், மாணவர்கள் இராணுவத்தினரால் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கோராவெளி என்னும் இடத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்திற்கு குடும்பஸ்தர் ஒருவர் பலியாகி உள்ளார். கடந்த 20.06.95 அன்று நடந்த இச்சம்பவத்தில் சந்திவெளியைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான பாக்கியராஜ் (35) என்பவரே கொல்லப்பட்டார்.

இதேவேளை, ராசநாயகம் சற்குணம், நடராஜா ஆகிய இரு பாடசாலை மாணவர்கள் வயலுக்கு மதிய உணவு கொண்டு சென்ற வேளை இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இவர்களது உடல்களை படையினர் எடுத்துச் சென்றுள்ளனர். தாம் இம் மாணவர்களைச் சுடவில்லை என அதிரடிப்படையினர் பெற்றோருக்குத் தெரிவித்துள்ளனர். இவ்வாறே அம்பாறை பெரியநீலாவணையில் பாடசாலை அதிபரான தேவநாயகம் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இவர் பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் வசித்துவந்துள்ளார்.

இப் பகுதியில் தமிழ் அரச ஊழியர்கள் தாக்கப்படும் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

சிவதொண்டர் நிலையம் மீது இராணுவம் தாக்குதல்

கிழக்கு மாகாணத்தில், செங்கல்லடியில் உள்ள சிவதொண்டர் நிலையம் மீது இராணுவ முகாமிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் அவ் ஆன்மீக ஆச்சிரமக் கட்டிடத்தின் கூரையும், கண்ணாடிகளும் சேதமடைந்துள்ளன.

இச் சம்பவம் குறித்து சிவதொண்டர் நிலையப் பொறுப்பாளர் சுவாமி செல்லத்துரை மட்டக்களப்பு மாவட்ட பாதுகாப்பு இணைப்பதிகாரி பிரிகேடியர் கெலப்பொலவிடம் புகார் செய்துள்ளார். சம்பவம் நடைபெற்றபோது சிவதொண்டர் நிலையத்தில் 5 ஆதரவற்ற சிறுவர்கள் இருந்தார்கள் என்றும் அவர்கள் மயிரிழையில் உயிர் பிழைத்தார்கள் என்றும் தெரிவித்த சுவாமி செல்லத்துரை, கட்டிடச் சேதத்திற்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் எனவும் இராணுவ இணைப்பதிகாரியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

**யூலை 9 ஞாயிற்றுக்கிழமை சிறிலங்கா படையினரால் ஆரம்பிக்கப்பட்ட "முன்நோக்கிப் பாய்தல்" இராணுவ நடவடிக்கையின் போது நடந்த விமானக் குண்டுவீச்சு, எறிகணை வீச்சு, பீரங்கித் தாக்குதல், செல்தாக்குதலில் 150 க்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்**

**இவர்களில் ஒரு பகுதியினரின் பெயர் விபரம் வருமாறு**

இளையதம்பி சிவசுப்பிரமணியம் 60 சண்டிலிப்பாய் வடக்கு, வேலுப்பிள்ளை ராசா 65 (மயிலிட்டி) சண்டிலிப்பாய் வடக்கு, பிரான்சிஸ் டேவிட் சுதன்குமார் 13 சண்டிலிப்பாய் வடக்கு, ராமலிங்கம் பாலசுப்பிரமணியம் 35 கல்வளை, இரத்தினவேல் இந்திரகுமார் 34 சண்டிலிப்பாய் வடக்கு, தர்மராசா சிவமணி 35, சண்டிலிப்பாய், மகேஸ்வரன் நகுலேஸ்வரி 35, சண்டிலிப்பாய் வடக்கு, பத்மதேவன் ஜெகதீஸ்வரி 45 சண்டிலிப்பாய் வடக்கு, நவரத்தினராசா அன்னபூரணம் 50, சண்டிலிப்பாய் வடக்கு, செல்லத்துரை நடராசா 55, தற்போது சண்டிலிப்பாய் (முன்பு வசிப்பிடம் செங்கலடி), தட்சினாமூர்த்தி சோதிமலர் 32, சுளிபுரம், சோதிமலரின் மகன் விமல் 8, சங்கரப்பிள்ளை லம்போதரன் 15, சுளிபுரம், திருச்செந்தூர் குணசீலன் 58, சுளிபுரம், வன்னியசிங்கம் சிவபாக்கியம் 48, சண்டிலிப்பாய் மேற்கு, கறுப்பையா பிரேமசிறி 48, கல்வளை, தெய்வேந்திரம் யோகமலர் 49, சண்டிலிப்பாய், பரராஜ சிங்கம் கிருபாகரன் 23, மூத்ததம்பி சிவராசா 25, சுளிபுரம், பண்டாரி வேலாயுதம் 65, சுளிபுரம் மேற்கு, வேலாயுதத்தின் மகள் அன்னலட்சுமி 14, வேலாயுதத்தின் மற்றுமொரு பிள்ளை 12, லோகநாதன் மகேஸ்வரி 43, மாவடிச்சந்தி, தவராசா நாகநந்தன் 27, கந்தரோடை, தவராசாவின் பிள்ளை சபேசன் 2, அழகரட்ணம் அநுஸியா 15, கந்தரோடை, சின்னத்துரை நளாயினி 21, கந்தரோடை, புவனேந்திரராசா திவாகர் 10, கந்தரோடை, ஆனந்தராசா நாகேஸ்வரி 42, கந்தரோடை, இரத்தினசிங்கம் 42 அட்டகிரி, குணரத்தினம் மரினாசாந்தி 16, பண்டத்தரிப்பு., மகாதேவன் மதனராஜ் 47, கந்தரோடை, பூவீந்திரன் 30 கந்தரோடை, தில்லைநாயகம் 21 சங்குவேலி, கிருஷ்ணபிள்ளை தர்மஜெகன் - 23, நவாலி, ஆறுமுகம் சகோதரன் 18 அட்டகிரி, மருசலின் உடையராஜ் 14 பண்டத்தரிப்பு, கனகசபாபதி தனரஞ்சினி 42 காலையடி, சந்தியாப்பிள்ளை சிமியோன் 42, சிமியோன் மனைவி யோகலிதா 41, பிள்ளை மைத்திலி 9, பிள்ளை சபேசன் 8, இராசம்மா 65 அட்டகிரி, மாணிக்கம் செல்லையா 45, செல்லையா மகள் சுமித்திரா 7 , நிக்கலஸ் ஜனித்தா 10. தம்பித்துரை, யோகரத்தினம் சிவஞ்சலிங்கம் 20 கட்டுடை, தவராசா ஜெயகுல்நாதன் 13 (இளவாலை) மந்திகை, செபஸ்டியாம் பிள்ளை சந்திரன் 28 (மாதகல்), சுளிபுரம் செல்லையா மகள் சுமித்திரா 7, தம்பித்துரை வதனா 22 மானிப்பாய், பரராஜசிங்கம் கண்ணதாசன் (கொழும்புத்துறை), தேவதாஸ் லொமிட் 17 (மாதகல்), ரட்ணா தினேஷ் 8 மானிப்பாய், மதிரேசதன் 14, சிறிகரன் 7, P. நாகேஸ்வரி 39,க. நாகம்மா 54, P. மனோகரன் 17, மல்லிகா தேவி 46, பொன்அரியம் 89, இ. சிவரோஜன் 12, R. ரேனாவதி 32, செ. ஹரிச்சந்திரன் 38, தமர்தின 10, விசாகன் 31, திவ்வியராணி 28, அல்லி 53. பரமேஸ்வரி 60, மோகனகுமார் 16, பொன்னம்பலம் 4...., அமுதன் 16, தேவி மோகனா 12, சிவகணேஷ் 16, சிவசுப்பிரமணியம் 49, திவ்வியகுமார் 14, ஜோபிகா 5, குமுதினி 15, பா. சிவலோகராசா புஷ்பம் 46, தி. சின்னம்மா 40. சிவரூபன் 16, பிரேமச்சந்திரன் 7, நிரஞ்சினி 16, சிவகுமார் 8, த. சபேஷ் 10, திருச்செல்வி 12, சற்குணராஜ் 16. துரிதமலர் 18, ராசலச்சுமி 25, மீனாம்பிகை 46, உதயகுமார் 25, மரியதாஸ் புஸ்பம் 55, ஜோபி 19, நாகேந்திரமணி 45, கமலாதேவி 53, கிருஷ்ணசாமி 36, சித்திரா 19, இரத்தினம்மா 35, தட்சினாமூர்த்தி புருசோத்தமன் 2 1/2, நிதர்சனி 13, த. புவனேஸ்வரன் 22, திலிமஸா 32, சின்னத்துரை 52, பரமலிங்கம் 36,

தொடர்ச்சி 19 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிட்டுவின் சிறகசைப்பு

அதிகாலைப்பொழுது, விடிந்ததும் விடியாததுமாகக் கருக்கல் இருட்டு நேரம் கண்விழித்ததும் சிறகுகளை அசைத்துக் கொண்டு பறந்தேன். அடர்ந்ததொரு காட்டுப்பகுதி கண்ணில் பட்டது. சிறிது நேரம் ஓய்வெடுக்கக் கருதி ஒரு மரக்கிளையில் குந்தினேன். அந்த மரத்தின் கீழே ஒரு இராணுவச் சிப்பாய் நடுங்கும் விரல்களால் துப்பாக்கியை இறுகப்பிடித்தபடி- விழிகளை உருட்டி பேந்தப் பேந்த விழித்தபடி- அப்பாலும் பார்வையை ஓடவிட்டேன். இன்னும் சிலர் ஆங்காங்கே இருப்பது புலப்பட்டது.

சற்று நேரத்தில் ஒரு பெரும் அதிர்வு எழுந்து ஓய - பெரும் தீச்சுவாலை ஒன்று வானை நோக்கி எழுந்தது.

'கொட்டிய ஆவில, கார்ப் எக்க பொச்சிலா வ' (புலிகள் முகாமை எரிச்சுப் போட்டாங்கள்) அவர்களில் ஒருவன் மெல்லிய குரலில் கீச் சிட்டான்.



டிக்கங் பஸ்ச. எக்கொலங் யனவ' (அப்ப இன்னும் கொஞ்ச நேரத்தில் அவங்கள் போய்விடுவாங்கள். என்றதொரு கணிப்பும் வெளிப்பட்டது.

'நவதாண்ட பொட்டக் உதயமே பலமு' (ஓமோம் கொஞ்சம் பொறு - வெளிச்சம் நல்லா வந்தபிறகு போய்ப்பார்ப்பம்) இன்னும் ஒருவன் கூறினான். ஒரு சில துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களுக்குப் பின்னர் மணித் துளிகள் யுகமெனக் கரைய பொழுது புலர்ந்தது. சிப்பாய்களின் அணி- யொன்று திரண்டு அங்குமிங்கும் பார்த்தபடி நகர்ந்துகொள்ளத் தொடங்கியது. நானும் சிறகுகளை அசைத்துப் போனேன்.

வாகல்கட என்ற பெயர்ப்பலகை தலைகீழாகத் தொங்கிக்கொண்டிருந்தது. கருகிப்போன சுவர்கள் மட்டுமே எஞ்சியிருந்தது. ஒரு தடவை அப்பகுதியை நன்கு சுற்றிப் பார்வையிட்ட பின்னர் தனது வாக்கிடோக்கிக்கு உயிர் கொடுத்த ஒருவர்

'எல்டிடிஈ மேட் எ பிறீன்டோன் அற்றாக் ஒன் அஸ். வீ விற்றோ புறம் த பிளேஸ் டட்டிக்கலி நௌ வீ ஆர் ஒன் அவர் பிளேஸ். பட் எல்டிடிஈ பேண்டவுன் இற் கொம்பிலீற்லி நோ கசவல்ரி ஒன் அவர் சைட். பட் நௌ வீ காவ் நொட் இனவ் அமுனீசியன் அன் கிரனேற்ஸ், பிளீஸ் சென்ற் சம் இமிடியட்லீ.'

புலிகள் அதிகாலையில் தாக்குதல் நடத்தினர். நாங்கள் தந்திரமாக விலகிக்கொண்டோம் ஆனால் இப்பொழுது திரும்பி வந்திட்டம். முகாம் முழுவதையும் அவர்கள் எரித்து விட்டனர். எமது தரப்பில் உயிரிழப்புகள் எதுவுமில்லை. எங்களிடம் இப்போது ரவைகளும் கிரனேற்றுக்களும் இல்லை உடனடியாக சிறிது தொகையாவது அனுப்பி வைக்கவும்.

'அவங்கள் கிட்ட வந்து அடிக்குமட்டும் இதிலிருந்த ஆமிக் காரர் என்ன செய்தவ ங்கள்' இன்னுமொரு வர் கேள்வியெழு ப்பினார்.
கிட்டவந்து அடிச்ச தோ உள்ள புகுந்து உள்ளது எல்லாத்தை யும் அள்ளிக்கொண்டு போட்டார்கள்.

அவரது குரல் ஓய்வதற்கு முன்பாகவே ஆண்களும் பெண்களுமாக பலர் அந்த முகாமின் முன்பாக குழுமிவிட்டிருந்தனர். அனைவரது முகத்திலும் கலவரத்தின் சாயல் அப்பியிருந்தது. இரவு நடந்த நிகழ்ச்சிகளைப்பற்றி மீள் பரிசீலனையில் அவர்கள் ஈடுபட்டனர். 'புலிகள் ராத்திரி வந்து தாக்கி முகாமை அழிச்சுப்போட்டுப் போட்டாங்கள்' அச்சங் கலந்த தொனியில் ஒருவர் கூறினார்.

'அவங்கள் கிட்ட வந்து அடிக்குமட்டும் இதிலிருந்த ஆமிக்காரர் என்ன செய்தவங்கள்' இன்னுமொருவர் கேள்வியெழுப்பினார்.

கிட்டவந்து அடிச்சதோ உள்ள புகுந்து உள்ளது எல்லாத்தையும் அள்ளிக்கொண்டு போட்டார்கள். போகேக்க நெருப்பையும் வைச்சுப்போட்டுப் போட்டாங்கள். இங்க பார் எல்லாம் தரை மட்டம். மற்றுமொருவர் சுட்டிக்காட்டினார்.

'பொறு பொறு பொறு கியண்ட எப்ப' (பொய் பொய் பொய் சொல்லக்கூடாது)

எனப் புறுபுறுத்தபடி வந்த பச்சை உடுப்புக்காரர் ஒருவர், நாங்கள் ஓடிப்போகேல்ல பின்வாங்கித் தாக்கினாங்கள். இது ஒரு போர்த் தந்திரம் இப்ப பாருங்க எங்களுக்கு உயிர்ச் சேதம் இல்லையென்று விளக்கமளிக்க எத்தனித்தார்.

ஓமோம் உங்களுக்கு உயிர் சேதம் இல்லையோ- என நையாண்டி செய்த ஒருவர், வந்தவங்களுக்கு கருணை இருந்ததால்தான் நாங்கள் இப்ப தப்பியிருக்கிறம் என்றார் மெல்லிய குரலில்.

'அதெண்டால் நீ சொல்லுறது மெய்தான் நாங்கள் எங்களின்ர ஊருக்கே போய்விடுறது நல்லது, கம்பாயமும் ரவிக்கையும் அணிந்திருந்த பெண்மணியொருத்தி அபிப்பிராயம் தெரிவித்திருந்தாள்.

'தங்கட முகாமையே பாதுகாக்க ஏலாமல் ஓடிப்போட்டாங்கள் இனிமேல் எப்படி நம்பி இதில குடியிருக்கிறது'

'ஓமோம்- இவை புலியள் வந்தாப்பிறகு ஓடிப் போனவையென்றால் நாங்கள் இப்பவே போய்விடுவதுதான் நல்லம் போல'

'மெய்தான் மெய்தான்' என்றபடி கூட்டம் மெதுவாகக் கரையத் தொடங்கிவிட்டிருந்தது. வாகல்கட இனிமேல் வாசல்கடவை என்று பேர் சூட்டிக் கொள்ளக்கூடும் என்ற எண்ணம் மேலிட இறக்கையை விரித்தேன்.

**இளையவன்**

# இறைதூதன் போல் வந்த மில்லர்

அ.சண்முகதாஸ்

1987 ஆம் ஆண்டு காலப்பகுதி. அப்போது நான் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியைக் கற்றுக்கொண்டிருந்தேன்.

திடீரென ஒருநாள், காலைக்கடன்களை முடித்துக் பாடசாலை செல்வதற்கு ஆயத்தமான போது இருந்தாற்போல் எமது ஊர் ஆரவாரப்படத் தொடங்கியது. நானும் உறவினர்களும் வெளியே வந்து ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தபோது விதவிதமான பல வானுர்திகள் எமது கிராமத்தை வட்டமிட்டு, சரமாரியான குண்டுத் தாக்குதலை நடத்திய வண்ணமிருந்தன.

சில மணித்தியாலங்களில் தாக்குதல் உச்சக்கட்டத்தை அடைந்தது.

இருந்தாற் போல் ஒருநாள் மாலைப் பொழுது திடீரென பல திசைகளிலிருந்தும் வெடிச்சத்தங்கள் சடுதியாகக் கேட்டன. கூடவே வான் அதிரும்படியாக, வர்ணிக்க முடியாத ஒரு பேரோசை எமது பாடசாலைப் பகுதியில் கேட்டு ஓய்ந்தது.

சில உலங்கு வானூர்திகள் தாழப்பறந்து வட்டமிட்டு, கண்ணிமைக்கும் நேரத்தில் தமது துருப்புக்களையும், ஆயுதங்களையும் சில மைல் தொலைவிலுள்ள ஆலயமொன்றில் தரையிறக்கிவிட்டு உயரப் பறந்து சென்றன.

நேரம் பகற்பொழுதாகிக் கொண்டிருந்தது. உலங்கு வானூர்திகள் பல தடவைகள் தரை இறங்கி எழும்பிச் சென்றன. விமானத் தாக்குதலோ அகோரமாக இருந்தது. பல பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களிலிருந்தும், கடலில் இருந்தும் சரமாரியான எறிகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுக் கொண்டிருந்தன. இருந்தும், தரையில் மண்ணின் மைந்தர்களுக்கும் சிங்களக் கூலிப் படைக்குமிடையில் உக்கிரமாகச் சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்தது.

வான், கடல் தாக்குதல்களின் உதவியுடன் சிங்களப்படை முன்னேறிக் கொண்டிருந்தது. சிலமணி நேரத்தில் எமது கிராமமே கூலிப்படையினரின் துப்பாக்கி வேட்டுக்களால் அதிர்ந்தது. நாம் ஓடவும் வழியின்றி இராணுவத்தின் கோரப் பிடிக்குள் சிக்கிக் கொண்டிருந்தோம். எல்லாமே, காலை விடிந்து சிலமணி நேரத்துக்குள் முடிந்துவிட்டது.

இப்போது வடமராட்சிப் பிரதேசம் முழுவதும் சிங்களப் படையினரின் கட்டுப்பாட்டினுள் கொண்டு வரப்பட்டிருந்தது. எனது பாடசாலையிலும் பெரியதொரு படைமுகாம் அமைக்கப்பட்டது. எமது ஊர் அவ்வப்போது முற்றுகையிடப்பட்டு, சிறீலங்காப் படையினரின் வெறியாட்டத்துக்கு ஆளாகும். பல அப்பாவி மக்கள் ஈன இரக்கமின்றிக் கொன்று குவிக்கப்பட்டனர். பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டு, கொடிய பூசா வதைமுகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

நாம், பாடசாலை, கல்வி எல்லாவற்றையும் இழந்து செய்வதறியாது திகைத்திருந்தோம். எமது வீட்டிற்கருகில் ஒரு போராளியின் வீடு இருந்ததால் அதைச் சாட்டாகவைத்து எமது வீடும் அடிக்கடி சிங்களப்படையால் முற்றுகையிடப்பட்டுச் சல்லடையிடப்பட்டது. எனது பெற்றோரும் முகாம்களுக்குக் கூட்டிச்செல்லப்பட்டு விசாரணை செய்யப்பட்டனர்.

நாட்கள் நகர்ந்தன. எமக்கு விடிவே கிடையாதா என ஏங்கியபடி, தினமும் இறைவனையே இரந்தவாறு எமது காலம் நகர்ந்தபடி இருந்தது. "கடவுளும் என்னத்தைச் செய்வார்! அவருக்குக் கண்கடை ஏதும் இருந்தால்தானே!" என்று எமது மக்களும் இறைவன் மீதுகூட வெறுப்பைக் கொட்டுமளவிற்குச் சிங்களப்படையின் வெறியாட்டம் அகோரமாக இருந்தது.

இருந்தாற் போல் ஒருநாள் மாலைப்பொழுது திடீரென பல திசைகளிலிருந்தும் வெடிச்சத்தங்கள் சடுதியாகக் கேட்டன. கூடவே வான் அதிரும்படியாக, வர்ணிக்க முடியாத ஒரு பேரோசை எமது பாடசாலைப் பகுதியில் கேட்டு ஓய்ந்தது.

எமது ஊர்நாய்கள் ஓய்வின்றிக் குரைத்த வண்ணமிருந்தன. ஆம்-! எம்மைக் கொடுமைப்படுத்திய சிங்களக் கூலிப்பட்டாளம் சீருடைகளோ, ஆயுதங்களோ எதுவுமேயின்றி அடைக்கலந்தேடி அருகிலிருக்கும் வீடுகளை நோக்கி ஓடிக் கொண்டிருந்தது. எனினும் நடந்ததோ, நடக்கப் போவதோ எதுவுமே தெரியாதவர்களாய் நாம் ஏக்கத்தோடு இருந்தோம். ஆனாலும் எமது மனங்களில் விடிவின் அறிகுறி ஒன்று தோன்றியது.

ஆம்-! மறுநாட்காலை அந்தச் செய்தி எம்காதுகளில் எதிரொலித்தது. மகிழ்ச்சியிலும் ஒரு சோகம். எம்மால் நம்பவே முடியவில்லை. எமது ஊரில் எம்மோடு வாழ்ந்துவிட்டு நாடுகாக்கச் சென்ற ஒரு விடுதலைவீரன் ஓர் ஒப்பற்ற வீரதீரக் காவியம் படைத்துவிட்டான்-எமது ஊரே சோகத்திலாழ்ந்தது. எனினும் எம்துயர் அறிந்து இறைவன் அனுப்பிவைத்த அந்த இறைதுதன் 'மில்லர்' மக்கள் மனங்களில் புனிதமான கோவிலாகக் கட்டப்பட்டு நிலைத்துவிட்டான்-இப்போது அவனது உடலோடு மூச்சும் கலந்துவிட்ட அந்த இனிமையான தென்றல் தொட்டுத் தழுவிச் சுகமளித்தபடியிருக்க, போகின்றோம்-படிப்பதற்கு- நெல்லியடி மில்லர் மகாவித்தியாலயத்திற்கு: நடந்து முடிந்துவிட்ட அந்த நீங்காத நினைவுகளுடன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் அவுஸ்திரேலியாவின் அக்கறை

இந்துமாகடல் பிராந்தியம் இப்போதும் ஒருதடவை பலப்பரீட்சைக்கான களமாகிவருகிறது. அண்மையில் இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவரான ஆர்.வெங்கட்ராமன் இந்துசமுத்திர கற்கை மற்றும் தெற்காசிய ஆய்வுகளுக்கான நிலையத்தின் நிபுணர்கள் கூட்டத்தில் ஆற்றியிருந்த உரையும், அவுஸ்திரேலிய அமைச்சர் கெரத் இவான்ஸ் இந்துப்பெருங்கடல் பிராந்திய நாடுகளுக்கு மேற்கொண்ட விஜயமும் இந்தப் பலப்பரீட்சையைச் சுட்டிக்காட்டும் இருவேறு விடயங்கள் என்றால் மிகையாகாது. இந்துப் பெருங்கடல் பிராந்தியத்தின் அரசியல் முக்கியத்துவம் காரணமாக, இப்பகுதியில் மேலாதிக்கம் பெறுவதற்குப் பல்வேறு சக்திகளும் போட்டியிடுவது இன்றுநேற்று ஆரம்பித்த கதையல்ல. இந்தப்பகுதியின் அரசியல் முக்கியத்துவமானது, உலகில் இடம்பெறும் கப்பல் போக்குவரத்தில் மூன்றிலிருபங்கு இதனூடாக நடைபெறுகிறது என்பதுடன் மட்டுமன்றி, ஆசியா, ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா என்ற முப்பெரும் கண்டங்களையும் இணைப்பதாகப் பெருமளவிலான சனத்தொகையைக் கொண்ட நாடுகளைத் தனது கரையோரத்தில் கொண்டிருப்பதுடனும் தொடர்புபட்டது.

**இந்துமாகடல் பகுதியில் அவுஸ்திரேலியா கொண்டுள்ள ஆர்வம், இந்தியாவின் அக்கறைகளுக்கோ அல்லது சீனாவின் அக்கறைகளுக்கோ சற்றும் குறைவானதல்ல**

எத்தகைய பருவகாலத்திலும் கப்பல் போக்குவரத்தை மேற்கொள்ளக்கூடிய புவியியல் அமைப்பையுடையதாகவும், ஐரோப்பாவிற்கும் ஆசிய மற்றும் தூர்கிழக்கு நாடுகளுக்கான குறுகிய கப்பல் பாதையாகவும் இது விளங்குகின்றது. எனவேதான், இந்தப் பிராந்தியத்தில் மேலாதிக்கத்தைப் பெறவும், பேணவும் பல்வேறு சக்திகளும் முயற்சி எடுக்கின்றன.

## புதிய சூழலில் அவுஸ்திரேலியாவின் ஆர்வம்



தற்போதைய புதிய அரசியல் சூழலில் பிராந்திய ஒத்துழைப்பை வலுப்படுத்த வேண்டுமென்ற ஆர்வத்தை அவுஸ்திரேலியா வெளியிட்டுள்ளது. அண்மையில் மாலைதீவு, இந்தியா, பாகிஸ்தான், சிறீலங்கா, மடகாஸ்கார், செசில்ஸ், தென்ஆபிரிக்கா, மொரீசியஸ் போன்ற இந்து மாகடலின் கரையோர நாடுகளுக்கு, அவுஸ்திரேலியாவின் வெளியுறவு அமைச்சரான செனட்டர் கரத் ஈவான்ஸ் விஜயம் ஒன்றை மேற்கொண்டு, பிராந்திய ஒத்துழைப்புக் குறித்து அவுஸ்திரேலியா கொண்டுள்ள ஆர்வத்தைப் பலப்படுத்தினார்.

இந்துமாகடல் பகுதியில் அவுஸ்திரேலியா கொண்டுள்ள ஆர்வம், இந்தியாவின் அக்கறைகளுக்கோ அல்லது சீனாவின் அக்கறைகளுக்கோ சற்றும் குறைவானதல்ல எனவும் அவர் புலப்படுத்தியுள்ளார். இந்துமாகடல்பிராந்திய நாடுகளுடன் 1994இல் மட்டும் 17.1 பில்லியன் டொலர் பெறுமதியான அதாவது அவுஸ்திரேலியாவின் மொத்த வெளிநாட்டு வர்த்தகத்தில் 18.4விகிதமான வர்த்தகத்தை அவுஸ்திரேலியா நடத்தியுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இப்பிராந்தியம் அமைதி மண்டலமாகப் பிரகடனம் செய்யப்பட வேண்டுமென்று குரல் எழுப்பிய காலம்முதல் அவுஸ்திரேலியா இந்தப் பிராந்திய நாடுகளின் அரசுகளுடனும் அரசியற் தலைவர்களுடனும் நல்லுறவுகளைப் பேணிவந்துள்ளது எனவும், நிறவெறி மற்றும் இனவாதம் என்பவற்றிற்கு எதிராகப் பொதுநலவாய அமைப்பின்கீழ் இந்தப்பிராந்திய நாட்டு அரசுகளுடன் ஒருமித்துக் குரல்கொடுத்தது எனவும் தெளிவு படுத்தியுள்ளார்.

இதேவேளை, இந்துமாகடற் பிராந்தியங்களுக்கு இடையில் பரந்த அடிப்படையிலான பொருளாதார உறவொன்றைக் கட்டியெழுப்புவதை நோக்கமாகக்கொண்டு மொரீசியஸ் நாட்டில் அவுஸ்திரேலியா, இந்தியா, கென்யா, மொரீசியஸ், ஓமான், சிங்கப்பூர், தென்னாபிரிக்கா ஆகிய ஏழுநாடுகளின் அரசாங்க உயர்அதிகாரிகள் மாநாடொன்றை அண்மையில் நடத்தியுள்ளனர். 'இந்துமாகடல் ஆணையம்' என்ற பெயரில் 1982இல் மொரீசியஸ், மடகாஸ்கார், செசில்ஸ், கோமராஸ் மற்றும் ரியூனியன் ஆகிய நாடுகள் பரந்த அடிப்படையிலான பிராந்திய ஒத்துழைப்பு, பொருளாதார உறவுகளை நிலைநாட்டல் என்ற அடிப்படையில் செயற்படுவதை இலக்காகக்கொண்டு இணைந்திருக்கின்றன.

"இந்துமாகடல் கப்பல் போக்குவரத்துக் கூட்டுத்தாபனம்" என்றபெயரில் ஒரு அமைப்பை ஏற்படுத்த 1985இல் கொழும்பு முயற்சி எடுத்து 1990இல் சிறீலங்கா, பாகிஸ்தான், மொசாம்பிக், கென்யா, இந்தோனேசியா மற்றும் மொரீசியஸ் போன்ற நாடுகள் அதிற் சேர்க்கப்பட்டுள்ளன. ஆனால் இந்த அமைப்பும், நோக்கமும் தெளிவுபடுத்தப்பட்டதாக இல்லை.

இவ்வாறாக இப்பிராந்திய நாடுகளுக்கு இடையே பரஸ்பர நல்லுறவுகளைக் கட்டியெழுப்பும் முயற்சிகள், காலத்துக்குக் காலம் இடம்பெற்ற போதும் எதுவும் ஆக்கபூர்வமாக மலர்ந்துவிடவில்லை. அதாவது ஐரோப்பிய ஒன்றியம்போல அல்லது ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனம் போல பலம் பொருந்திய அமைப்புக்கள் எதுவும் இப்பிராந்தியத்தில் அமைக்கப்பட்டுவிடவில்லை. ஆசிய, பசுபிக்பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு (APEC) தென்கிழக்காசிய நாடுகளின் (ASEAN) மற்றும் தென்னாசிய நாடுகளின் ஒத்துழைப்பு அமைப்பு (SAARC) போன்ற பிராந்தியக் கூட்டிணைப்புக்கள் காணப்படுகின்றபோதும், அவை வலுவுடைய ஒத்துழைப்பு அமைப்புக்களாக இல்லை.

எனவே அகதிகளின் குடியமர்வு, சுற்றாடல் பாதுகாப்பு, போதைப்பொருள் கடத்தல் தடுப்பு போன்ற கொள்கை விடயங்களை ஆராய்ந்து, இவற்றில் ஒத்த கருத்துக்களை ஏற்படுத்தி இப்பிராந்தியத்தின் பாதுகாப்பிற்கும் உறுதிப்பாட்டிற்கும் ஏற்படும் சவால்களைச் சமாளிக்கத்தக்க, கூட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்பது அவுஸ்திரேலியாவின் ஆர்வமாக இருக்கின்றது.

## முன்கதைச் சுருக்கம்

இரண்டாம் உலகப்போரின் முடிவுக்குப் பின்னர், காலணி யாதிக்கம் என்னும் நுகத்தடியிலிருந்து ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகள் பலவும் விடுபடத்தொடங்கின. சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யம் எனப் பெயர் பெற்றிருந்த பிரித்தானிய ஏகாதிபத்தியம், இந்தியாவிலிருந்து மூட்டைகட்ட வேண்டி ஏற்பட்டது. இந்தச் சூழ்நிலையானது இப்பகுதியில் அரசியல்வெற்றிடம் ஒன்றை ஏற்படுத்தியிருப்பதாக ஏகாதிபத்திய சக்திகள் கருத வழிவகுத்தது.

இரண்டாம் உலகப்போரைத் தொடர்ந்து ஏற்பட்ட பனிப்போர் சூழ்நிலையில் இந்தப் பிராந்தியத்தின் செல்வாக்கை தக்க வைத்துக்கொள்ள ஒருபுறத்தில் அமெரிக்கச் சார்பு சக்திகளும், மறுபுறத்தில் ரஷ்யச் சார்பு சக்திகளும் பெரும் முயற்சிகளிலீடுபட்டன. மேற்கு ஐரோப்பாவில் ஏற்படுத்தப்பட்ட, 'வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகள்' (நேட்டோ) எனப்படும் இராணுவக் கூட்டணியை ஏற்படுத்திய அமெரிக்கா, ஐம்பதுகளில் தென்கிழக்காசிய ஒப்பந்த தாபனம்' (சியாட்டோ ), 'மத்திய கிழக்காசிய ஒப்பந்த தாபனம்' (சென்டோ) போன்ற இராணுவக் கூட்டணிகளை ஏற்படுத்த இப்பிராந்தியத்தில் முயற்சிகளை மேற்கொண்டது. இந்த முயற்சியில் பிசுபிசுப்பு ஏற்பட்டபோது, வர்த்தகக் கூட்டணியை ஏற்படுத்தியும் இராணுவ ஆட்சிகளுக்கு ஆதரவு வழங்கியும், டியாக்கோகார்சியா போல இராணுவத் தளங்களை நிறுவியும் அமெரிக்க சார்பு சக்திகள் தமது கால்களை ஊன்றிக்கொள்ள எத்தனித்தன. மறுபுறத்திலயுறுத்தும் வகையில் மாநாடு ஒன்றை நடத்தவும் பல்வேறுவிதமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

ஆனால் 1990களில் பனிப்போர் சூழல் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து வல்லரசுப்போட்டிக்கான நிலை முடிவுக்கு வந்தது. இதனால் இந்துமாகடல் அமைதி மண்டலமாகப் பிரகடனம் செய்யவேண்டுமென்ற கோரிக்கையும் பலவீனப்பட்டுப்போனது.

## இந்தியரின் எண்ணம்

இந்து சமுத்திரத்தில் யுத்தம் என்னும் பொருளில் இந்தியாவின் கடற்படையைச் சேர்ந்த வைஸ்அட்மிரல் பிலறிக்கே ஹோர் எழுதியுள்ள புத்தகம் ஒன்று அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது. இப் புத்தகத்தின் உள்ளடக்கம் என்ன என்பதுபற்றி இன்னமும் எமக்கு தெரியவரவில்லை. ஆனால் இந்தப் புத்தகத்தை வெளியிட்டு வைத்து இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் ஆர்.வெங்கட்ராமன் ஆற்றிய உரை இந்திய ஆட்சியாளர்களின் உள்ளக்கிடக்கைகளை வெளிப்படுத்தும் ஒன்றாகக் கொள்ளப்படலாம். இந்துமாகடல் பிராந்தியத்தில் வெளிச்சக்திகளின் ஊடுருவல்களிலிருந்து பாதுகாக்க வேண்டிய பூகோள ரீதியான பொறுப்பும் இப்பிராந்தியத்தின் உறுதித் தன்மையைப் பேணவேண்டிய பொறுப்பும் இந்தியாவுக்கு இருக்கின்றது. இந்தியப் பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகள் புவியியல் அளவில் சிறியவையாகவும், வறுமைப்பட்டவையாகவும் இருக்கின்றன. எனவே தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு அவை இந்தியாவின் உதவியை எதிர்பார்த்து நிற்கின்றன. இந்தக் கடமைகளை நிறைவேற்றுவதற்காக இந்தியா தற்பாதுகாப்பு என்ற நிலையிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு யுத்தத்தில் வெல்லும் நோக்கை கடைப்பிடிக்கவேண்டும். இவை வெங்கட்ராமனின் கூற்றுக்களாகும். இதன்மூலம் சொல்லப்படாத செய்தியாக இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் தனது செல்வாக்கை மேலோங்கச்செய்ய இ இந்தியா, வியட்நாம் போன்ற உறுதியான நட்பு நாடுகளின் ஆதரவுடன் ரஷ்யாவும் தனது செல்வாக்கை நிலைநிறுத்த முற்பட்டது.

**இந்துமாகடல் பிராந்தியத்தில் வெளிச்சக்திகளின் ஊடுருவல்களிலிருந்து பாதுகாக்க வேண்டிய பூகோள ரீதியான பொறுப்பும் இப்பிராந்தியத்தின் உறுதித் தன்மையைப் பேணவேண்டிய பொறுப்பும் இந்தியாவுக்கு இருக்கின்றது.**

தொடர்ச்சி : 14 ஆம் பக்கம் பார்க்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிறீலங்காப் படையினரின் கெடுபிடிகளில் சிக்கித் தவிக்கும் தென்தமிழீழ மக்கள்

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முடிவிற்கு வந்ததைத் தொடர்ந்து கிழக்கில் படையினரின் வெறியாட்டங்கள் உச்சக்கட்டத்தை அடைந்து விட்டன.

சுற்றிவளைப்புகளும், துன்புறுத்தல்களும், கொலைகளும், கைதுகளும் அங்கு சாதாரண நிகழ்வுகளாகிவிட்டன.

படையினரின் அடாவடித்தனங்களுக்கு அஞ்சிய மக்கள் மாலையானதும் வீடுகளுக்குள்ளேயே முடங்கிவிடுகின்றனர். இதனால் உத்தியோகப் பற்றற்ற ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது போன்ற ஓர் நிலையே அங்கு காணப்படுகின்றது.

## தேடுதல் வேட்டை

இருள் சூழ்ந்ததும் திடீர் திடீரென கிராமங்களுக்குள் புகுந்து கொள்ளும் படையினர் சிறுவர் முதல் வயோதிபர் வரை வயது, பால் வேறுபாடுகள் எதுவுமின்றி அனைவரையும் ஈவு இரக்கமின்றி அடித்துத் துன்புறுத்துவதும் கைது செய்வதும், வீடுகள் அனைத்தும் சல்லடை போட்டுத் தேடுவதும் தொடர்ந்த வண்ணமேயுள்ளன.

திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த சேற்றுக்குடா, புதூர், திமிலைதீவு, வலையிறவு, வவுணதீவு, மங்கிக்கட்டு, ஈச்சந்தீவு, நாவற்காடு, விளாவட்டவன், கரவெட்டி, கிரான், கதிரவெளி, ஏறாவூர், புதுக்குடியிருப்பு, ஆறுமுகத்தான் குடியிருப்பு, கல்குடா, ஆலங்குளம், கொக்கட்டிச்சோலை, கோப்பாய் வெளிக்கிராமம், கொம்மாதுறை, புன்னைச்சோலை, அமிர்தகழி, முறக்கொட்டாஞ்சேனை, சித்தாண்டித்துறை, நீலாவணை, ஆத்திமேடு போன்ற கிராமங்கள் அடிக்கடி படையினரின்தும் பொலிசாரினதும் சுற்றிவளைப்புகளுக்கு உள்ளாகி வருகின்றன.

## தொடரும் கொலைகள்

இரவோடு இரவாகக் கிராமங்களுக்குள் புகுந்து பதுங்கிக் கொள்ளும் படையினர் அதிகாலையானதும் அப்பாவிகளைக் கொன்று குவிப்பதில் ஈடுபடுகின்றனர்.

மட்டு வடக்கே 15வது மைலில் வீட்டிலிருந்து காலைக்கடன்களைக் கழிப்பதற்காக பின்புறமாகவுள்ள மறைவிடத்தை நாடிச்சென்ற இருவர் பதுங்கியிருந்த படையினரால் ஈவிரக்கமின்றிச் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

சித்தாண்டியில் வயலில் வேலை செய்து கொண்டிருந்த தந்தைக்கு உணவு வாங்கி வந்த மகன் சுட்டுக் கொல்லப்பட்டபின் 'பயங்கரவாதி' என முத்திரை குத்தப்பட்டான். பயங்கரவாதியென ஒப்புக்கொண்டாலே சடலத்தை ஒப்படைப்போம் எனக் கூறிய படையினரிடம் மகன் விவசாயியே அன்றி பயங்கரவாதி அல்ல எனக் கூறிவிட்டு சடலத்தையும் கைவிட்டு வேதனையுடன் வீடு திரும்பினார் தந்தை.

இது போன்ற அப்பாவிகளைக் கொலை செய்துவிட்டு 'பயங்கரவாதி' என சாயம் பூசி மூடிமறைத்து வருகிறது சிறிலங்காவின் அரச படைகள்.

சிறுவனை சுட்டுக்கொன்றுவிட்டு சடலத்தை சந்திவெளி ஆற்றில் தூக்கி எறிந்தும் வீட்டின் முன்னே சுடப்பட்ட வயோதிபமாது வேதனையால் துடிதுடிக்க வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லக்கூட அனுமதிக்காது கண்முன்னே துடிதுடித்து சாக சுற்றி நின்று வேடிக்கை பார்த்து மகிழ்ந்ததும் இந்த அரச படைகள்தான். இத்தகைய எத்தனை எத்தனையோ கொடுமைகள் இன்றும் தொடர்ந்த வண்ணமேயுள்ளன.

தமிழர்களை வேட்டையாடவென தமிழ்க் கிராமங்களுக்குள் ஊடுருவும் இப்படைகள் அக்கிராமங்களையே அல்லோல கல்லோலப்படுத்தி விடுகின்றனர். ஆறுமுகத்தான்குடியிருப்பிற்குள் புகுந்த பொலிசார் மக்களை வீடுகளை விட்டு ஓடுமாறு பணித்துவிட்டு தடிகளாலும், பொல்லுகளாலும் துப்பாக்கிகளின் பின்புறத்தாலும் துரத்தித் துரத்தி கடுமையாகத் தாக்கினர்.

பொலிசாரின் மிரட்டலுக்கு அஞ்சிய மக்கள் கைக்குழந்தைகளையும் கையிலேந்தியவாறு நாலாபுறமும் சிதறியோடியதால் தவறிக் கீழே விழுந்து நசியுண்டோரும், பலமாகத் தாக்கப்பட்டதால் காயமடைந்தோரும் சிகிச்சை பெறுவதற்காக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப் பட்டனர்.

இளைஞர்கள் யுவதிகள் கைது செய்யப்படுவதும் காணாமல் போவதும், சித்திரவதைக்குள்ளாக்கப்படுவதும் அங்கு சாதாரண நிகழ்வுகளாகிவிட்டதனால் கிராமங்கள் தோறும் அழுகுரல்கள் கேட்ட வண்ணமேயுள்ளன.

அம்பாறை மாவட்டம் பொத்துவில் பகுதியில் இன்ஸ்பெக்டர் ஏத்தம் என்ற கிராமத்தில் சிறீலங்காவின் அதிரடிப்படையினர் அண்மையில் தமது வெறியாட்டத்தை நடாத்தி முடித்திருந்தனர். அங்கே அப்பாவித் தமிழர்களின் 85 வீடுகள் இவர்களால் எரித்துச் சாம்பராக்கப்பட்டன. திருமலையில் ஆத்திமேடு கிராமமும் நொடிப்பொழுதில் அழிந்து போயின. ஆத்திமேட்டுக்குள் வந்து புகுந்த பொலிசார் முப்பத்தைந்திற்கும் மேற்பட்ட வீடுகளை புல்டோசர் உதவியுடன் இடித்துத் தரைமட்டமாக்கி விட்டனர். இம் மீனவர்களின் வாழ்விடங்கள் அழிக்கப்பட்டதாலும் சொத்துக்கள் சூறையாடப்பட்டதாலும் இவர்கள் இன்று உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி தங்க ஒரு வீடின்றி அகதிகளாக அலைந்து கொண்டு திரிய வேண்டிய நிர்க்கதிக்குள்ளாக்கப்பட்டு விட்டனர். இது போன்ற இன்னும் எத்தனையோ கிராமங்கள் படையினரின் அழிப்பிற்கு இலக்காகிய வண்ணமேயுள்ளன.

**-சசீகரன், தமிழீழம்-**

வீடுகளுக்குள் புகும் படையினர் அங்குள்ளோரின் அடையாள அட்டைகளையும் குடும்ப அட்டைகளையும் தீவிரமாகப் பரிசீலிப்பதுடன் பெயர்கள் பதியப்படாத எவரும் தங்க அனுமதிக்கக் கூடாது எனவும் எச்சரிக்கையும் விடுக்கின்றனர்.

## கேடயமாகும் மக்கள்

ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடும் போதும் தேடுதல் வேட்டை முடிந்து முகாம் திரும்பும் வேளைகளிலும் படையினர் தமக்குப் பாதுகாப்பிற்காக பொதுமக்களையும் கூடவே அழைத்துச் செல்லத் தவறுவதில்லை. விடுதலைப் புலிகளின் தாக்குதல்களிலிருந்தும் கண்ணிவெடிகளிலிருந்தும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள இவர்கள் மக்களைக் கேடயமாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

கும்புறுமூலையில் ரயிலின் பாதுகாப்பிற்கெனச் செல்லும் படையினர் தினமும் பொதுமக்களையும் தம்முடன் அழைத்துச் செல்கின்றனர். இதன் போது பெண்மணி ஒருவர் மிதிவெடியில் சிக்கி கால் இழந்ததுடன் மற்றும் இருவர் படுகாயமும் அடைந்தனர். தற்போது கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளதாக சந்தேகிக்கும் இடங்களை பொதுமக்களைக் கொண்டே படையினர் கிளறிப் பார்க்கின்றனர். பொதுமக்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கென உருவாக்கப்பட்ட படைகளுக்கு இன்று பொதுமக்கள் பாதுகாப்பு வழங்க வேண்டிய நிலை கிழக்கில் தோன்றிவிட்டதாக அங்கிருந்து வந்த ஒருவர் தெரிவித்தார்.

## வீதிச் சோதனைகள் அதிகரிப்பு

மட்டக்களப்பின் பிரதான வீதிகளால் செல்லும் வாகனங்களும் பொதுமக்களும் கடும் சோதனைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். தினம் தினம் புதுப்புது சோதனை முகாம்கள் அமைக்கப்பட்டு வருவதுடன் அவை பலப்படுத்தப்பட்டும் வருகின்றன. அனைத்துப் பொதிகளும் துருவித் துருவி ஆராயப்படுகின்றன. பழவகைகள், மரக்கறிகள், மீன்கள் கூட வீதிகளிலே கொட்டப்பட்டு சோதனையிடப்படுகின்றன. மாணவர்களின் பைகள், ஆர்மோனியப் பெட்டிகள் கூட இவர்களின் சோதனைகளிலிருந்து தப்புவதில்லை. சோதனைச் சாவடிகள் அதிகரிக்கப்பட்டு தினமும் அனைத்திலும் சோதனைகளும் தீவிரமாக்கப்பட்டுள்ளதால் மாணவர்கள் பாடசாலைக்கு உரிய நேரத்திற்கு செல்ல முடியாமலும், அரச உத்தியோகத்தர்கள் தத்தமது கடமைகளுக்கு சமூகமளிக்க முடியாமல் திண்டாடுவதுடன் வியாபாரிகள் சந்தை கலைந்தபின்பே அங்கு சென்றடையக்கூடியதாகவும் உள்ளது. மக்களின் இத்தகைய பிரச்சினைகள் குறித்து படையினரோ அதிகாரிகளோ செவி சாய்த்ததாக இல்லை.

தினமும் படையினரின் கெடுபிடிகள் அதிகரிப்பதாலும் புதிய புதிய நிபந்தனைகளைப் படையினர் விதித்து வருவதாலும் வீதிகளில் நடமாட மக்கள் அஞ்சுகின்றனர். இதனால் மாலையானதும் வீதிகள் அனைத்தும் வெறிச்சோடி விடுவதுடன் நாடு மயான அமைதியாக காட்சியளிக்கிறது. இதனால் உத்தியோகப் பற்றற்ற ஊரடங்கு அமுலில் உள்ளதா என எண்ணத் தோன்றுகிறது. படையினரின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளமையால் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்ல அஞ்சுகின்றனர். இதனால் இருநேரமாக இயங்கி வந்த பாடசாலைகள் அனைத்தும் மீண்டும் ஒரு நேரமாக்கப்பட்டு விட்டது.

## பொருளாதார மீன்பிடித் தடைகள்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களும் தம்மிடமுள்ள உணவுப் பொருட்கள் பற்றிய கையிருப்பு விபரங்களை உடனடியாக தமக்கு அறிவிக்க வேண்டும் என படையினர் உத்தரவிட்டிருப்பதுடன் வாகரைப் பகுதிக்கு பொருளாதாரத் தடையையும் விதித்துள்ளனர். வாகரைப்பகுதி மக்கள் ஒவ்வொருவரும் கொண்டு செல்லும் பொருட்களின் அளவு படையினரால் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதினால் ஒருவர் இரண்டு கிலோ அரிசி, இரண்டு கிலோ மா, ஒரு கிலோ சீனி, இரண்டு தீப்பெட்டிகள், ஒரு போத்தல் மண்ணெய் மட்டுமே எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

மீன்பிடித் தொழிலை முக்கிய தொழிலாகக் கொண்டு தினமும் உழைத்து தமது குடும்பத்தை ஓட்டிச் செல்லும் மக்கள் ஒரு நாளைக்கு தேவையான உணவுப்பொருட்களை மட்டுமே எடுத்துச் செல்ல படைகள் அனுமதிக்கின்றன. வாகரைக்கும் வாழைச்சேனைக்கும் இடையில் பெரும் எண்ணிக்கையான சோதனைச் சாவடிகள் உள்ளன. மட்டுப்படுத்தப்பட்டளவில் நடைபெறும் சீரற்ற போக்குவரத்தாலும் வரையறுக்கப்பட்ட உணவுப் பொருட்களாலும் அத்தனை சோதனைச் சாவடிகளிலும் நடைபெறும் கடும் சோதனைகளாலும் மக்கள் ஒரு நாளை இவற்றிலேயே கழிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படுவதால் நாளாந்த உழைப்பிற்கு வழியின்றித் தவிக்கின்றனர்.

இதேபோல் முதலில் கிழக்கில் அமுலுக்கு வந்த மீன்பிடித் தடை தற்போது திருமலையிலும் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதனால் பல ஆயிரக்கணக்கான மீனவக்குடும்பங்கள் முற்றாகத் தமது தொழில்களை இழந்து விட்டன. ஆழ்கடல் மீன்பிடி, வாவி, நன்னீர்க்குள மீன்பிடி, கரைவலை மீன்பிடி என அனைத்து மீன்பிடிகளும் படையினரால் தடை செய்யப்பட்டுள்ளது. இதனால் தொழிலை இழந்துவிட்ட இம் மீனவக் குடும்பங்கள் நிவாரணம் கூடக் கிடையாது அலைகின்றன.

## வீதித் தடைகள்

மட்டு நகரின் வீதிகள் பல போக்குவரத்திற்குத் தடை செய்யப்பட்டுள்ளன. தமது முகாம்களைப் பாதுகாக்கும் நோக்குடன் இவ்வீதிகளைத் தடை செய்து வருகின்றனர். மாலை ஆறு மணி முதல் காலை ஏழு மணி வரை முகாம்கள் முன்பாகவுள்ள வீதிகளால் பொதுமக்கள் செல்வதற்கு தடை செய்யப்பட்டுள்ளது. அத்துடன் சைக்கிள்கள் மோட்டார் வாகனங்கள் மாற்றுப் பாதைகளூடாகவே பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றன. இவ்வாறு வீதிகளின் தடையால் செலான் வங்கி, வைத்தியசாலை, பிரதான எரிபொருள் நிரப்பு நிலையம் ஆகியவையும் செயலிழந்துள்ளன. இதனால் மக்கள் தமது அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது தவிக்கின்றனர்.

www.tamilarangam.net



## சுவிஸ் - ஜெனிவாவில்
# மாபெரும் ஊர்வலம்

ஜெனிவாவிலுள்ள ஐக்கியநாடுகள் சபை மனித உரிமைகள் நிறுவன முன்றலில் தமிழ்மக்களால்,ஈழத்தமிழரின் தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கக் கோரியும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை அங்கீகரிக்கக் கோரியும் மாபெரும் ஊர்வலம் ஏற்பாடாகியுள்ளது.

**இடம் :** ஐக்கியநாடுகள் சபை
மனித உரிமைகள் நிறுவன முன்றல்
ஜெனிவா

**காலம் :** 14 - 08 - 95 திங்கட்கிழமை
பிற்பகல் 2.00 மணி

**சுவிசிலுள்ள சகல கண்டோன்களிலும் போக்குவரத்து ஏற்பாடுகள்**




1040 இருக்கைகள் அடங்கிய புகையிரதம் சூரிச்சிலிருந்து ஜெனிவா வரை சென்றுவர முழுமையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது இப்புகையிரதம் காலை 9.30 மணிக்கு சூரிச்சிலிருந்து புறப்பட்டு
Baden, Brugg, Aarau, Olten, Langenthal, Burgdorf, Bern, Fribourg, Lausanne
ஆகிய தரிப்பிடங்களில் ஊர்வலத்திற்கு செல்ல விரும்புவோரை ஏற்றிச் செல்லும். முற்கூட்டியே சூரிச் தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமை அலுவலகத்தோடு தொடர்பு கொண்டு ஆசனங்களைப் பதிவு செய்து கொள்ளவும்.

## நோர்வேயில்
# சுதந்திர தாகம்
## எழுச்சி நிகழ்வு

- மண் மணம் – கிராமிய நடனங்கள்
- சங்காரம் – இசை நடனம்
- முகங்களும் மூடிகளும் – வில்லிசை
- மிடிமை தீர – நிருத்திய நாடகம்
- ஒரு பயணம் இரு தோணி – நாடகம்
- கூவு குயிலே – தமிழீழ ராகங்கள்

**இடம் :** SAMFUNSHUSET
ARBEIDER SAMFUNNETSPLASS 1
OSLO

**காலம் :** 05 - 08 - 95
மாலை 6.30 மணி

| தமிழீழ விடுதலைப் புலிகள் நோர்வேக்கிளை | தமிழர் ஒருங்கிணைப்புக் குழு நோர்வே |
|---|---|

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

## காயமடைந்தோர் விபரம்...

கண்ணப்பன் 14, ஜெய்சங்கர் 10, புவனா 9, ஜெயரூபன் 12, சிவராசா 19, தேவராஜா 59, கந்தசாமி 50, ப. சசிகரன் 16, தர்மலிங்கம் 70, ராசன் 20, தவக்குலம் 27, ஒஸ்டின் 52, தயா 36, செ. வாசன் 26, இந்திரன் 36, திருஞனசம்பந்தர் 44, மகேஸ்வரி 35, யோகசீலன் 9, ரேணுகா 25, செல்லம்மா 36, ஆரோக்கியம் 55, லச்சுமி 66, செல்வம் 40, திரேசா 12, சுசீலா 15, சுமதி 12.

## டென்மார்க் – ஈழத்தமிழர் கலையரங்கம் நடாத்தும்
# உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

டென்மார்க்கில் 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இரண்டாவது ஆண்டாக நடைபெற உள்ளது.
புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களை உள்ளடக்கிய குழுக்களை இச்சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ள அழைக்கின்றோம்.

**காலம் :** 26 - 08 - 95
**சனிக்கிழமை**




குறிப்பு :-

வெளிநாடுகளில் இருந்து வரும் கழகங்களிற்கு தங்கு வசதிகள், உணவு, விமானநிலையத்திலிருந்து தங்குமிடம் வருவதற்கான போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

**போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் 30 - 7 -95 இற்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்.**

உங்கள் தொடர்புகளுக்கு :-

G. R. Thiruchelvam
Stadionalle 32, 1.TH
7430 IKAST
Denmark

ராஜன் ☎ - 97 15 52 99, 40 18 87 39
மகேந்தி ☎ - 75 31 05 46, 30 64 00 71
ம. ரங்கன் - 40 18 30 49, 97 25 03 89 ☎

## இலண்டனில்
## கறுப்பு யூலை நினைவாக நடைபெற்ற
# புகைப்படக் கண்காட்சி

1983ஆம் ஆண்டு யூலை மாதம் சிறீலங்கா அரச பயங்கரவாதத்தால் கட்டவிழ்த்து விடப்பட்ட தமிழினப் படுகொலையை நினைவுகூருமுகமாகவும், நமது தாயகத்தின் உதயத்தையும், அதற்காகத் தமிழீழ மக்கள் நடாத்துகின்ற வீரப் போராட்ட வரலாற்றையும் விளங்கப்படுத்துமுகமாகவும் புகைப்படக் கண்காட்சி ஒன்று 22-07-95 சனிக்கிழமையன்று இலண்டனிலுள்ள Trafalgar சதுக்கத்தில் இடம்பெற்றது.
வெளிநாட்டவர்கள் ஆயிரக்கணக்கில் கூடும் இந்த பிரசித்தி பெற்ற இடத்தில் மதியம் 12 மணி முதல் மாலை 7 மணிவரை புகைப்படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.
நூற்றுக்கும் மேற்பட்ட புகைப்படங்கள், வரைபடங்கள், அட்டவணைகள் என்பன சிறந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.
தமிழீழ மக்களின் எழுச்சி, தேசியத் தலைவரின் படங்கள், சிறீலங்கா அரசின் இனப்படுகொலைகள், அழிவுகள், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சி, விடுதலைப் புலிகளின் படையணிகள், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் செயற்பாடுகள், தமிழர் புனர்வாழ்வுக் கழக வேலைத் திட்டங்கள் என படங்கள் கிரமமான வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு படத்தின் கீழும் சிறிய விளக்கங்களும் எழுதப்பட்டிருந்தன.
புகைப்படக் கண்காட்சியில் கலந்து கொண்டவர்கள் இலகுவில் புரிந்து கொள்ளக்கூடிய விதமாகவே இந்தக் கண்காட்சி அமைந்திருந்தது. இந்தக் கண்காட்சியில் நூற்றுக்கணக்கான வெளிநாட்டவர்களும், தமிழ் மக்கள் தமது பிள்ளைகளையும் அழைத்து வந்து கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. கலந்து கொண்ட பல வெளிநாட்டவர்கள் ஆர்வத்தோடும், அக்கறையோடும் தாயகத்தின் தற்போதைய நிலமைகளையும், போராட்ட வரலாற்றையும் கேட்டறிந்து கொண்டனர்.

நவாலி தேவாலயத்தில் சிறீலங்கா அரசு செய்த பயங்கரவாதத்தின் படங்களும் இங்கு வந்தோருக்குக் காண்பிக்கப்பட்டது. இந்தப் புகைப்படக் கண்காட்சியின் போது சிறீலங்கா அரச பயங்கரவாதத்தின் கோரத்தன்மையை எடுத்துரைக்கும் துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன. இலண்டனில் பிறந்து வளர்ந்துவரும் தமிழ் சிறுவர்கள், சிறுமியர்கள், மற்றும் எல்லோரும் இந்தப் புகைப்படக் கண்காட்சியில் கலந்து கொண்டு தாயகத்தின் உண்மைநிலையை உணர்ந்து கொண்டார்கள்.

ஞாயிற்றுக்கிழமை 23-07-95 அன்று இலண்டன் முருகன் கோவிலின் தேர்த்திருவிழாவின் போது கோவில் வீதியின் முன்பாகவும் புகைப்படக் கண்காட்சி நடாத்தப்பட்டது. திருவிழாவில் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கான மக்கள் இந்தப் புகைப்படக் கண்காட்சியைப் பார்வையிட்டனர். நவாலியில் நடைபெற்ற குண்டுவீச்சுப் படங்களை மக்கள் கவலையோடு பார்வையிட்டதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உங்கள் ஆவியடங்கிய அக்கணநேரத்தில் யாரை.... நினைத்தீரோ?




தாலாட்டுப் பாடியே
தன்முலையூட்டிய
தாயை நினைத்தீரோ?
— உங்கள்
காலாறத் தோள்மீது
தாங்கிய தந்தையின்
கையை நினைத்தீரோ?

வாசலில்
காற்றென
வீசுங்கள்
வாய்திறந்தோர்
வார்த்தை
பேசுங்கள்!







U.T.O., 211 Katherine Rd, London E6 1BU, UK. Tel: 0181 - 503 4294, Fax: 0181 - 470 8593

L.T.T.E
Post Box 47, 7400 HERNING
DENMARK.
Tel/Fax: 97-155299

W.T.C.C
Lang STR - 206
8005 Zurich, Swiss.
T/F: 01/273-29-38

T.C.G
Post Fach - 340251
51624 Gummerabach - 34
Germany

T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 3179

W.T.C.C.
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica,
New York 11432, U.S.A.
T/F: 718-657-9463

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F 435 81191

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo -1, Norway
T: 022-191260 F: 190114

T.C.C
Groot Hertoginnelaan
2517 BL Den Haag, Nederland
Tel: 070-346 1963 , F: 364 0683

T.C.C
Glomminge Grand - 29
16362 Spanga, Sweden
Tel: 08-7612943

Printed by Observer Group Newspapers.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்